# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

ஜூலை 2008

விலை ரூ.10/-






# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2039

ஆனி - ஆடி / ஜுலை 2008

மலர் : 40 இதழ் : 1



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

முனைவர் **ஆ.சி.மோகன்தாஸ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு கூடுதல் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மை பொறுப்பாசிரியர்

**மு.ஸ்ரீநாகேஷ்**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**டி.ஆர். ஜெயஸ்ரீ**
**ஆர்.சேகர்**

உதவி ஆசிரியர்கள்

**க. இராஜராஜேஸ்வரி**
**இரா. சுரேஷ்**
**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா. இளவரசி**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி. இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி : 25368926/25364906
தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனைய துயர்வு**

தண்ணீரின் அளவுதான் அதில் மலர்ந்துள்ள தாமரைத் தண்டின் அளவும் இருக்கும். அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயர்வு அவர் மனத்தில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நிகழ்ச்சிகள்**


- செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் மூலம் ஆண்டுதோறும் விருதுகள் ........ 2
- சத்துணவில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கப்படும் ........ 12
- மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு ........ 15
- இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழக அரசு ஊழியர்களின் நலனுக்காகப் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ........ 30
- நீதியைக் காப்பாற்றுகின்ற வகையில் நீதிமன்றங்களுக்குத் துணையிருப்போம் ........ 32
- தூத்துக்குடி துறைமுகத்தின் மூலம் சமூகப் பொருளாதார நிலைகளில் தமிழகம் முன்னேற்றமடையும் ........ 36
- மக்களுக்கும் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கும் உதவிடும் நல்ல எண்ணத்தோடு அரசு கேபிள் டிவி. நிறுவனத்தைத் தொடங்கியுள்ளது ........ 38
- ஒரு தாயின் தாலாட்டு (கலைஞரின் சங்கத்தமிழ்) ........ 41
- மாநிலத் திட்டக் குழு தயாரித்துள்ள தமிழகத்திற்கான 11ஆவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார். ... 57

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்**

**திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் நிகழ்ச்சிகள்**

- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நீடித்த கட்டமைப்பு வசதிகளுக்காக ஜெர்மன் நாட்டு வங்கியின் நிதியுதவி பெற முடிவு ........ 64


முதலாம் பக்க அட்டை : மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள். சென்னை காமராசர் சாலையில் அமைந்துள்ள பாலாறு இல்லத்தில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அலுவகைத்தைத் திறந்துவைத்தார். (30.6.2008)

2ஆம் பக்க அட்டை : மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள், சத்துணவில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப்பழமும் அளிக்கும் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். (15.7.2008)

4ஆம் பக்க அட்டை : மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள், தமிழகத்திற்குள் நதிகளை இணைக்கும் திட்டத்தின் முதல் கட்டமாக - மாயனூரில் கதவணை கட்டும் பணிகள், காவிரி - கொள்ளிடக் கரைகளைப் பலப்படுத்தும் பணிகளைத் தொடங்கிவைத்தார். (24.6.2008)




# செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் மூலம் ஆண்டுதோறும் விருதுகள்

**சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அலுவலகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் திறந்து வைத்தார்**

சென்னையில் 30.6.2008 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவன அலுவலகத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை :

உங்கள் அனைவரையும் முதற்கண் இந்த விழாவின் சார்பாக நானும் வரவேற்கின்ற கடமையினை ஆற்ற முன்வந்துள்ளேன். தமிழுக்குச் செம்மொழி என்கின்ற தகுதி உண்டு. அது மறுக்கப்பட்டதாகச் சொல்ல முடியா விட்டாலும், அது அனுமதிக்கப்படாத ஒரு சூழல் இருந்ததை மாற்றி செம்மொழித் தமிழ் என்ற அந்த அடையாளத்தை, அந்தப் பெருமையை, எங்கள் மொழிக்கு உரிய பெருமையை வழங்க வேண்டுமென்று மத்திய அரசோடு வாதிட்டுப் போரிட வேண்டிய அவசியம் இல்லாத காரணத்தால் நம்முடைய வாதத்திலே உள்ள உண்மையை–வாய்மையைப் புரிந்து கொண்ட மத்திய அரசு, குறிப்பாக திருமதி சோனியா காந்தி அம்மையார், மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங், மாண்புமிகு மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் ஆகியோர் தந்த ஒப்புதலின் காரணமாக பரிதிமாற்கலைஞருடைய முதல் குரல்–நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒலித்த அந்தக் குரல் இன்றைக்கு வெற்றி வாகை சூடியிருக்கிறது என்றால் அதற்கான நன்றியினை மத்தியப் பேரரசுக்கு நான் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

**பரிதிமாற்கலைஞரின் கனவு**

பரிதிமாற்கலைஞர் அவர்கள் சூரியநாராயண சாஸ்திரி என்றிருந்த அவருடைய இயற்பெயரை பரிதிமாற்கலைஞர் என்று தனித் தமிழில், தூய தமிழில் மாற்றிக் கொண்டவர். தமிழ்மொழியின்பால் எவ்வளவு ஆர்வமும், அக்கறையும், பற்றும், பாசமும்–தமிழுக்குப் பெருமை சேர்க்க வேண்டும், இருக்கின்ற



பெருமையை இன்னும் உயர்த்திக் காட்ட வேண்டுமென்ற நல்லெண்ணமும் வாய்ந்தவர் என்பதை எளிதில் நாம் புரிந்து கொள்ள முடியும். "தமிழ்மொழியினுடைய வரலாறு" என்கின்ற அவர் எழுதிய அருமையான நூலில் 122, 123ஆம் பக்கங்களில் "தமிழ்மொழியைச் செம்மொழி என்று கூறுவதே பொருத்தமாகும்" என்று அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டு அதற்குரிய ஆதாரங்களையெல்லாம் அள்ளி வீசியிருக்கின்றார் அந்த நூல் முழுவதும்.

அவருடைய கனவை நனவாக்கி அவருடைய ஆசையை நிறைவேற்றி செம்மொழி என்ற அந்த நிலையை ஏற்படுத்திய பிறகு மத்திய அரசுக்கு நம்முடைய பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்து பரிதிமாற்கலைஞருக்கு நாம் காட்ட வேண்டிய நன்றி ஒன்று உளதே என்று எண்ணிப் பார்த்து அவருடைய குடும்பத்தாருக்கு–மற்ற எழுத்தாளர்களுக்கு, புலவர்களுக்கு வழங்கியதைப் போல ஒரு நிதி வழங்குவது என்று முடிவு செய்து தமிழக அரசின் சார்பாக அந்த நிதியை வழங்கியபோது அந்தக் குடும்பத்திலிருந்து 19 உறுப்பினர்கள் தலைமைச் செயலகத்திற்கு வந்து அதைப் பெற்றுச் சென்றார்கள். அந்த 19 உறுப்பினர்களிலே 10 பேராவது கவி புனையும் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருந்தார்கள். என்னைப் பற்றி, அரசைப் பற்றி, தமிழைப் பற்றி, தமிழகத்தைப் பற்றி அவர்கள் எழுதிய கவிதைகளையெல்லாம் அங்கே படித்துக்காட்டிவிட்டு அவர்களுக்கு அரசின் சார்பில் தரப்பட்ட பதினைந்து இலட்சம் ரூபாய் பொற்கிழியைப் பெற்றுச் சென்றார்கள். அப்பொழுதே அவர்களுக்கு பரிதிமாற்கலைஞர் பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக ஆக்குவோம் என்று வாக்களித்து அந்த வாக்கினையும் நிறைவேற்றி வைத்தேன்.

நானும் நம்முடைய அமைச்சர் பெருமக்களும் மதுரை மாநகர் சென்று–மதுரை நகரத்திற்குப் பக்கத்திலே உள்ள ஒரு கிராமத்தில்–பரிதிமாற்கலைஞர் பிறந்த ஊரில்–சொல்லப் போனால் ஒரு பெரிய அக்ரஹாரம்–அங்கே பிரமாண்டமான வரவேற்பு அன்றைக்கு எனக்கு வழங்கப்பட்டது. என்னுடைய வாழ்க்கையில் முதல் தடவையாகக் கிடைத்த வரவேற்பு–இன் முகத்தோடு அளிக்கப்பட்ட வரவேற்பு–அன்புபொழிய கிடைத்த வரவேற்பு–அந்த வரவேற்பைப் பெற்றுக் கொண்டு, வீட்டைச் சென்று பார்த்தால், மிக மிகச் சிறிய இல்லம்–நீளவாக்கில் கட்டப்பட்ட ஒரு இல்லம்–அந்த இல்லத்தை நினைவுச் சின்னமாக ஆக்கி விட்டு அங்கே பரிதிமாற்கலைஞருடைய சிலையையும் முகப்பிலே அமைத்து விட்டு–அங்கிருந்து மதுரை பொதுக்கூட்டத்திற்கு நாங்கள் புறப்படவே இயலாத அளவிற்கு அவ்வளவு பெரிய கூட்டம் அங்கே கூடி விட்டது. அக்கூட்டம் எங்களையெல்லாம் வாழ்த்தி வழியனுப்பி வைத்தது.

அன்றைய தினம் அங்கே எடுக்கப்பட்ட புகைப்படங்கள் எல்லாம் கூட இந்தப் பந்தலிலே மாட்டப்பட்டு, நீங்கள் காண்பதற்குரிய காட்சிகளாக விளங்குகின்றன. பரிதிமாற் கலைஞர்–சூரியநாராயண சாஸ்திரியாகவே இருந்து தனித் தமிழைப் போற்றி–ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு முன்பு–இந்தப் புரட்சிக்கு வித்திட்டார், என் மொழிக்கு செம்மொழி என்று

பெயர் சூட்டப்பட வேண்டுமென்ற புரட்சிக்கு வித்திட்டார் என்றாலும்கூட – அதற்கு அடுத்து ஒரு தொடர் முயற்சியாக சொல்ல வேண்டுமேயானால்–நேற்றைய தினம் “விடுதலை” பத்திரிகையிலே வந்த செய்தியை உங்களுக்குப் படித்துக் காட்டுகிறேன்.

**நீதிக்கட்சியின் தீர்மானம்**

“1918ஆம் ஆண்டு “தமிழைச் செம்மொழி என அறிவித்திடுக” என்ற ஒரு தீர்மானத்தை நீதிக்கட்சி மாநாட்டிலே நிறைவேற்றியிருக்கிறார்கள். 1918 மார்ச் 30, 31 நாட்களில்– தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை, திருச்சி மாநாட்டில் நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தின் தலைப்பே “தமிழைச் செம்மொழி என அறிவித்திடுக” என்பதாகும். தீர்மான எண் 8 (ஆ) தீர்மான வாசகம்–எல்லாப் பழைமையான மொழிகளைப் போல, பழைமையான, வளமான, உயர்தரமாக உருவாக்கப்பட்ட, பல தரப்பட்ட இலக்கியங்களைக் கொண்டது தமிழ் மொழி. இது பல்கலைக்கழகத்தால் பாரசீக, அரேபிய, சமஸ்கிருத மொழிகளுக்கு ஈடாக மதிப்பிடப்பட்டு “செம்மொழி” என ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்”.

முன் மொழிந்தவர்:– திரு. ஜே.பி. நல்லுசாமி பிள்ளை, பி.ஏ., பி.எல்., வழக்கறிஞர், மதுரை.

வழிமொழிந்தவர்:– திரு. ந.மு. வேங்கடசாமி நாட்டார், தமிழ்ப் பண்டிதர், திரு. எஸ்.பி.ஜி. கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

இப்படி 1918ஆம் ஆண்டிலேயே 90 ஆண்டுகளுக்கு முன்பே இதற்கான முயற்சி தொடர்ந்து–படிப்படியாக பலவகையான கோரிக்கைகள், அழுத்தந்திருத்தமாக வைக்கப்பட்ட கோரிக்கைகள், அதற்காக நடைபெற்ற சிறு போராட்டங்கள்–தமிழக அரசு கொடுத்த குரல்–தமிழ் மக்கள் எழுப்பிய முழக்கம் ஆகியவற்றின் தொடர்ச்சியாகத்தான் இந்த முறை நம்முடைய கூட்டணி தமிழகத்திலே தி.மு.கழகத்தின் தலைமையிலே அமைந்த இந்தக் கூட்டணி சார்பாக மத்திய சர்க்காரிடம் இந்தப் பிரச்சினையை எடுத்து வைத்து எங்களுக்கு இந்தத் தகுதியை எங்கள் மொழிக்கு நீங்கள் தந்தாக வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம்.

அதற்கிடையே பல நிகழ்ச்சிகளில் தமிழகத்திலே நடைபெற்ற பல மாநாடுகளில் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டு, அதன் தொகுப்பையும் நான் டெல்லியிலே பிரதமரிடத்தில், திருமதி. சோனியா காந்தி அம்மையாரிடத்தில், மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. அர்ஜுன் சிங் இடத்தில் எடுத்துச் சொன்னபோது–இதிலே நமக்குள்ள பொறுப்பை திருமதி. சோனியா காந்தி போன்றவர்கள் எந்த அளவிற்கு மதித்தார்கள், மகிழ்ந்தார்கள், பெருமையோடு பாராட்டினார்கள் என்பதற்கு திருமதி. சோனியா காந்தி அவர்கள் 8–11–2005இல் எனக்கு எழுதிய ஒரு கடிதத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். அந்தக் கடிதத்தின் ஒரு பகுதியை மாத்திரம் படித்துக்காட்டுகிறேன்.

“I am glad that all the formalities for declaring Tamil as a Classical Language have now been completed. This is an achievement for all the constituents of the UPA Government, but particular credit goes to you and your Party” என்று திருமதி. சோனியா காந்தி அவர்கள் எழுதிய கடிதம் காலாகாலத்திற்கும் நான் பத்திரப்படுத்தி வைக்கப்பட வேண்டிய–நான் என்று தவறாகச் சொல்லிவிட்டேன்–நாம் பத்திரப்படுத்தி வைக்க வேண்டிய ஒரு மடல் என்பதை இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**தமிழர்களின் முயற்சி**

இந்த அமைப்பு முதலில் மைசூரில்தான் இருந்தது. மைசூரில் இடம் பெற்றிருந்த இந்த அமைப்பு எல்லா மொழிகளையும் ஆராய்ந்து, எந்தெந்த மொழிக்கு உயர்வு அளிக்கலாம், எந்தெந்த மொழிக்கு உரிமைகளை அளிக்கலாம், சலுகைகளை அளிக்கலாம், வாய்ப்பு வசதிகளை அளிக்கலாம் என்பதை ஆராய்ந்து கொண்டிருந்த அமைப்புதான். அது தமிழ்நாட்டிற்கு வந்தாக வேண்டும் என்ற முயற்சியிலே ஈடுபட்டு, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நம்முடைய அமைச்சர்கள், அஃதன்னியில், கூட்டணியிலே

உள்ள நண்பர்கள்–இவர்கள் மூலமாகவும் முயற்சி செய்து–மைசூரிலிருந்து இது தமிழ்நாட்டிற்கு, சென்னை தலைநகரத்திற்கு வர வேண்டுமேயானால், இதற்கு முதல் முயற்சி செய்ய வேண்டியவர் அர்ஜுன் சிங் என்பதை அறிந்து, அவரிடத்திலே இதை எடுத்துச் சொன்னபோது, நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்–நான் டெல்லியிலே தமிழ்நாடு இல்லத்தில் தங்கியிருந்தபோது–அர்ஜுன் சிங் அவர்கள் தமிழ்நாடு இல்லத்திற்கே வந்து ஒரு தாளைக் கொடுத்து, சென்னையிலே இந்தத் தமிழ் மையத்தினை நடத்திக்கொள்ள அனுமதி என்று கொடுத்துவிட்டுச் சென்றார் என்றால் எந்த அளவிற்கு தமிழர்களுடைய முயற்சியை நிறைவு செய்வதிலே மத்தியிலே உள்ளவர்கள் ஆவலாக இருந்தார்கள், கடமை ஆற்றினார்கள் என்பதற்கு இதைவிட வேறு எதையும் நான் சான்றாகச் சொல்ல முடியாது.

**நாம் பெற்ற வெற்றி**

தமிழ் மொழி செம்மொழியாக ஆகிவிட்ட காரணத்தால்–கேட்கிறார்கள் சில பேர்– விலைவாசி குறையுமா ? தமிழ் செம்மொழியாக ஆகிவிட்டதால் காவேரி தண்ணீர் வந்து விடுமோ ? தமிழ் செம்மொழியாக ஆகிவிட்டதால் பட்டினி, பசி நீங்கி விடுமா என்றெல்லாம், நாம் அதையும் செய்துவிட்டு, தமிழைச் செம்மொழியாகவும் ஆக்குவோம், ஆக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. இதையெல்லாம் மறந்துவிட்டு தமிழ் செம்மொழி ஆனால் போதும்–பசி நீங்கிவிடும், பட்டினி நீங்கிவிடும் என்று நாங்கள் சொல்லவில்லை. இவைகளைவிட அவைகள் முக்கியம் என்பதை நாங்கள் மறப்பவர்கள் அல்ல. ஏனென்றால் நமக்கு உயிர் வேண்டுமா ? உடல் வேண்டுமா ? என்று கேட்டால் இரண்டும் சேர்ந்து இருந்தால்தான் வாழ முடியும் உயிர் மாத்திரம் இருந்தால், புராணக் காலத்திலே அதைப் பேய் என்பார்கள். உயிரும் உடலும் சேர்ந்து அமைந்தால்தான் மனிதன் என்ற பெயர் உண்டு. அந்த உயிரும் உடலுமாக வாழ வேண்டுமென்பது நம்முடைய கருத்து. அந்தக் கருத்தைத்தான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லி, இதிலே நாம் வெற்றி பெற்றிருக்கிறோம்.

**வாளாக மாறி ஆற்றும் பணி**

இங்கே இந்த விருதைப் பற்றி செம்மொழியாக நம்முடைய மொழி ஆனதால் என்னென்ன காரியங்கள், செயல்கள் நடைபெறவிருக்கின்றன என்பதைச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். தேசிய அளவில் சிறந்து விளங்கும் தமிழறிஞர் ஒருவருக்கு ஐந்து இலட்ச ரூபாய் விருதுத் தொகை கொண்ட "தொல்காப்பியர் விருது" ஒன்று வழங்கப்படும். அயல்நாட்டுத் தமிழறிஞர்களில் ஒருவருக்கும், அயல்நாடுகளில் வாழும் இந்தியத் தமிழ் அறிஞர்களில் ஒருவருக்கும் தலா ஐந்து இலட்ச ரூபாய் விருதுத் தொகை கொண்ட இரண்டு குறள் பீட விருதுகள் வழங்கப்படும். தலா ஒரு இலட்ச ரூபாய் விருதுத் தொகை கொண்ட இளம் தமிழறிஞர்களுக்கான ஐந்து விருதுகள் வழங்கப்படும். செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தின் மூலம் ஆண்டுதோறும் நமது குடியரசுத் தலைவரால் இவைகள் வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த விருதுகள் **2005–2006, 2006–2007, 2007–2008** ஆகிய மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்து வழங்கிடவிருக்கிறோம். ஆக மூன்று தொல்காப்பியர் விருது.

அயல்நாட்டுத் தமிழறிஞர்களுக்கான மூன்று குறள் பீட விருதுகள்,

அயல்நாடுகளில் வாழும் இந்தியத் தமிழ் அறிஞர்களுக்கான மூன்று குறள் பீட விருதுகள், இளம் தமிழ் அறிஞர்களுக்கான 15 விருதுகள்.

மூன்றாண்டுகள் மௌனமாக இருந்து விட்ட காரணத்தால் வாளாயிருந்து விட்ட காரணத்தால் வாளாயிருந்து, சும்மா இருந்து விட்ட காரணத்தால் இப்போது வாளாக மாறி நாம் இந்தப் பணியினை வேகமாக ஆற்ற இருக்கின்றோம். தகுதி வாய்ந்த தமிழ்ப் பெருமக்களைத் தேர்வு செய்வதற்குரிய பணிகள்–செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனத்தில்

இன்று மாலை தொடங்குகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

விருது பெறுவோரைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் முனைவர் வா.செ. குழந்தைசாமி, எழுத்தாளர் திரு.ஜெயகாந்தன், பேராசிரியர் முனைவர் மா. நன்னன் ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர். ஒருவர், இருவர் இன்றைக்கு வெளியூர் சென்றிருந்தாலும் கூட அவர்களுக்குப் பதிலாக வேறு தமிழ் அறிஞர்களை இணைத்துக் கொண்டு அந்த விருதுக்குரியவர்களைத் தேர்ந்தெடுத்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கலைஞர் கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை**

இதைத் தவிர இன்னொரு அறிவிப்பு– என்னுடைய சொந்தப் பொறுப்பில், நான் பெற்றுள்ள அளவிலா மகிழ்ச்சியின் காரணமாக– இங்கே சொல்ல விரும்புகிறேன். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழகத்தில் காலூன்றுகின்ற நாள், பரிதிமாற்கலைஞர் அவர்கள் 150 ஆண்டுகளுக்கு முன்பு கண்ட கனவு–அந்தக் கனவு நனவாக வேண்டுமென்று 50 ஆண்டுகளுக்கு முன்பே நான் கொண்ட நினைவு இன்று செயலாக்கம் பெறுகின்றது. இதையொட்டி எனக்கென்று உள்ள சொந்தப் பணத்திலிருந்து ஒரு கோடி ரூபாயை–இந்த நிறுவனத்தின் பொறுப்பில்– "கலைஞர் கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை" ஒன்றினை நிறுவிட வழங்குகின்றேன்.

இந்த ஒரு கோடி ரூபாயை நிரந்தர வைப்புத் தொகையில் அறக்கட்டளையின் பெயரால் "டெபாசிட்" செய்யப்பட்டு– ஆண்டுதோறும் அந்தத் தொகைக்குக் கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு–ஒவ்வொரு ஆண்டும் இந்த மையத்தில் சிறப்பாக தமிழக வரலாற்றுப் பயன்மிக்க கல்வெட்டுகளை ஆய்வு செய்வோருக்கும்–கல்லை வெட்டினால் போதாது. கல்வெட்டில் வரலாற்று உண்மைகள் பதிந்திருக்க வேண்டும். அந்தக் கல்வெட்டு பழமையானதாக இருக்க வேண்டும். அந்தக் கல்வெட்டு பயன்மிக்கதாக அமைய வேண்டும். அவர்களுக்கு அறக்கட்டளையின் சார்பில் விருதுகள் மற்றும் பொற்கிழிகள் வழங்கப்படும். அரசின் சார்பில் வழங்கப்படுகின்ற விருதுகளைத் தவிர இந்த விருதுகளும் தனியாக ஆண்டுதோறும் வழங்கப்படும்.

எனவே இந்த இனிய நிகழ்ச்சிக்கு அழைப்பையேற்று வருகைதந்து உங்கள் அன்பான வாழ்த்துகளையெல்லாம் வழங்கியமைக்கு இந்த அமைப்பின் சார்பாக என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் மேலும் இந்த அமைப்பின் சார்பில் தமிழை வளர்க்க–தமிழ்க் கலாச்சாரத்தை, பண்பாட்டை வளர்க்க தமிழர்களுடைய வரலாற்றை உலகெங்கும் பரப்ப–என்னென்ன வழி முறைகளைக் கையாள வேண்டும் என்ற நுணுக்கமான பாதையை நீங்கள் எங்களுக்கு அமைத்துத் தரவேண்டுமென்று இந்தக் கூட்டத்தின் மூலமாக உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விழாவிலே வந்து தலைமையேற்ற நம்முடைய பேராசிரியர் அவர்கள் "பூவோடு சேர்ந்த நார்" என்று தன்னை வர்ணித்துக் கொண்டார்கள். நார் இல்லாவிட்டால் பூ நிற்காது. இந்த நார்– என்னை மாலையாக்கிடப் பயன்படுகின்ற நார். நார் என்று அலட்சியப்படுத்திட வேண்டாம். அதைக் குறைவாக நினைக்க வேண்டாமென்று பேராசிரியரைக் கேட்டுக்கொண்டு–என்ன இருந்தாலும் நீங்கள் எனக்கு அண்ணன்– அண்ணன்தான் என்பதை நான் என்றைக்கும் மறக்காமல் என்னுடைய பணியைத் தொடருவேன். தொடருவதற்கு நம்முடைய தமிழ் மக்களுடைய ஆதரவெல்லாம் எனக்கு நிரம்பத் தேவை என்பதை எடுத்துக்காட்டி இந்த விழாவிலே வந்து கலந்து கொண்ட கலைஞர் பெருமக்கள், கவிஞர் பெருமக்கள், அறிஞர் பெருமக்கள், தமிழ்ப் பெருமக்கள், அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன். ★

# இந்தியாவிலேயே முதன்முதலாக, தமிழகத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் மாபெரும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**கலைஞர்** அவர்கள் தொடங்கிவைத்தார்

இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டத்தின் முதல் கட்டத்தை




**24.6.2008** அன்று திருச்சியில் தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை :

காலையில் இருந்து இதுவரையில் தஞ்சை தொடங்கி திருச்சி வரையில் மக்கள் வெள்ளத்திலே நீந்தி வருகின்ற ஒரு நிலையைப் பெற்று இப்பொழுதும் உங்களையெல்லாம் மிகுந்த மகிழ்ச்சிக்கிடையே சந்திக்கின்ற வாய்ப்பையும் பெற்றிருக்கின்றேன்.

இங்கே நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சி இந்தியாவிலேயே நாம் நீண்ட காலமாக எடுத்துச்சொல்லி முதன் முதலாக நிறைவேற்றப்படுகின்ற ஒரு வரலாற்றுப் புகழ்மிக்க தொடக்க விழா நிகழ்ச்சியாகும்.

இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த விழாவினுடைய சிறப்புக்களை எனக்கு முன்னால் பேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களும் மற்ற நண்பர்களும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

பொதுவாக, தமிழகத்தில் தண்ணீர்ப் பஞ்சம் – தண்ணீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினை நாளுக்குநாள் மோசமாகி வருகிறது என்பதை நான் சொல்லாமலேயே நீங்கள் புரிந்து கொண்டிருக்கின்றீர்கள். தமிழகத்திற்குள்ளாகவே உற்பத்தியாகின்ற நதிகளில் வற்றாத ஜீவநதி என்று ஒன்றுகூட இல்லை.

தமிழகத்திலே பாய்கின்ற காவிரியானாலும் தென்பெண்ணை, பெரியாறு, பாலாறு முதலிய ஆறுகளானாலும் – கர்நாடகம், கேரளம், ஆந்திரம் ஆகிய அண்டை மாநிலங்கள் அருள் கூர்ந்து நமக்குத் தந்தால்தான் – விடுவித்தால்தான் அந்த நீரைக் கொண்டுதான் நம்முடைய வாழ்வாதாரத்தை வலுப்படுத்திக் கொள்ள முடியும் என்ற நிலையில், தமிழ்நாட்டில் உள்ள வேளாண் பெருங்குடிமக்கள், இன்று நேற்றல்ல, பல்லாண்டு காலமாக பல துயரங்களுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள் என்பதையும், அதற்காக உச்சநீதிமன்றம்வரையில் பல முறை சென்றும் பயனற்றுப்போய் இன்னும் முற்றாக எதுவும் முடியவில்லை என்பதையும் நீங்கள் மிகத் தெளிவாக அறிவீர்கள்.

காலங்காலமாக இந்த ஆறுகளின்மூலம் தமிழகம் தண்ணீரைப் பெறுவதற்கு முழு உரிமையும் கொண்டுள்ள போதிலும்கூட, அண்டை மாநிலங்கள் எழுப்பி வரும் பிரச்சினைகளின் காரணமாகக் கிடைக்கவேண்டிய தண்ணீரும் கிடைக்காத நிலை தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

### காவேரிப் பிரச்சினை

தம்பி துரைமுருகன் எடுத்துக்காட்டியதைப்போல், காவேரிப் பிரச்சினை 1924–ஆம் ஆண்டு, நான் என்றைக்குப் பிறந்தேனோ, அன்றைக்கே பிறந்தது பிரச்சினையாகும். என்னோடு சேர்ந்து பிறந்த பிரச்சினைதான் காவேரிப் பிரச்சினை. அதுமுதல் இந்தப் பிரச்சினையில் நான் கர்நாடகத்தில் உள்ள அமைச்சர் பெருமக்களிடத்திலே பேசாத அமைச்சரில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலகட்டத்தில், 1968–ஆம் ஆண்டு என்னை அனுப்பி, “காவேரிப் பிரச்சினை – ஹேமாவதி என்கின்ற ஒரு அணையை மைசூர் பக்கத்தில் (அன்றைக்கு இருந்த) முதலமைச்சர் வீரேந்திர பாட்டீல் கட்டுவதற்கான ஆயத்தங்களைச் செய்து வருகிறார். அவரோடு பேச்சுவார்த்தைக்குச் சென்று வா!'' என்று அனுப்பினார்கள்.

திரு. வீரேந்திர பாட்டீல் அவர்களோடு நான் பேச்சு வார்த்தையிலே ஈடுபட்டேன். டெல்லிப் பட்டணத்தில் 1968–ஆம் ஆண்டு தொடங்கிய அந்தப் பேச்சுவார்த்தை – வீரேந்திர பாட்டீலுக்குப் பிறகு, கர்நாடகத்தில் பல முதலமைச்சர்கள் வந்து வந்து போய்விட்டார்கள். ஆட்சி வீழ்ந்து, ஆட்சி வீழ்ந்து அவர்கள் மாறியும் விட்டார்கள். ஆனால் இந்தப் பிரச்சினையில் ஏற்பட்ட நெருக்கடி மாறவில்லை. அதற்கு ஒரு முடிவும் ஏற்படவில்லை. ஒவ்வொரு முறையும் நானேதான் தமிழகத்தின் சார்பாகத் தலைமையேற்று அந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு, இடையிடையே பொதுப்பணித்துறை அமைச்சர் போன்றவரை அழைத்துச் சென்று பேச்சுவார்த்தை நடத்தியும், இடைக்காலத்திற்கு உச்சநீதிமன்றம் வரையிலே வழக்காடியும், எதுவும் பயன்படாத ஒரு சூழ்நிலை காவேரியிலே நமக்கு ஏற்பட்டது.

பின்னர் அதற்காக ஒரு குழு, அந்த ஆற்றுப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வர அமைக்கப்பட்டு, அந்தக் குழுவினுடைய முடிவிற்காகக் காத்திருந்தபோதுகூட, அந்த முடிவு ஓரளவு நமக்குச் சாதகமாக வந்த நேரத்தில், அதை நிறைவேற்றுவதிலே கர்நாடக அரசு காட்டுகின்ற தயக்கத்தின் காரணமாக இன்னும் முழுப்பயனையும் நாம் அடைய முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

இது கர்நாடகத்திலே இருந்து புறப்பட்டு வருகின்ற காவேரி ஆற்றில் நமக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை. அதைப்போலவேதான் நம்மைச் சுற்றியுள்ள மாநிலங்கள் – கேரளாவானாலும், அல்லது ஆந்திராவானாலும் – அங்கிருக்கின்ற நீர் ஆதாரங்கள் நமக்கு உரிய நேரத்தில் உரிய வகையில், உரிய அளவு கிடைக்க முடியாத சூழ்நிலை இருப்பதையும், அதற்காக நாம் கொடி தூக்கிப் போராட வேண்டிய நிலைமையும் – நீதிமன்றங்களுக்குச் சென்று சட்டப்படி வாதாட வேண்டிய நிலைமையும், மத்திய சர்க்காரிடத்திலே முறையிட வேண்டிய நிலைமையும், இன்னும் நமக்கு இருந்து கொண்டிருக்கின்றது.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்து வேறு வழியில்லாமல், நான் கடந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசினுடைய குறைந்தபட்சத் திட்டத்தை இந்த அரசுக்கு – மத்திய அரசுக்கு நினைவுபடுத்தினோம்.

இப்பொழுதுள்ள சூழ்நிலையில் உச்சநீதிமன்றமும் நடுவர் மன்றமும் தமிழகத்திற்கு உரிய நியாயத்தை உணர்ந்து தீர்ப்புகள் வழங்கியுள்ளபோதிலும், அந்தத் தீர்ப்புகளின் அடிப்படையில், அண்டை மாநிலங்கள் – கர்நாடகம் உட்பட – தமிழகத்திற்குத் தண்ணீர் தருவதை மறுத்து வருகின்றன.

### மத்திய அரசின் ஏற்பு

மத்திய அரசுக்குக் கடிதங்கள் மூலமும், நேரிலும் கோரிக்கைகள் விடுத்தும், நீதிமன்றங்கள் மூலமாக அணுகியும்கூட பிரச்சினை இன்னமும் தீர்ந்தபாடில்லை.

எனவே, இந்தத் தண்ணீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில் தேசிய அளவில் நதிகள் இணைக்கப்பட வேண்டும் எனும் கருத்து இப்பொழுது நாடு முழுவதும் எழுந்துள்ளது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் குறைந்தபட்ச செயல் திட்டத்தில்,

“The UPA Government will make a comprehensive assessment of the feasibility of linking the rivers of the country starting with the south-bound rivers. This assessment will be done in a fully consultative manner.........”

என்று ஐக்கிய முற்போக்குக் கூட்டணியினுடைய குறைந்தபட்ச செயல்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டி, இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

எங்கே கேட்டுக்கொண்டேன் தெரியுமா? பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் – நதிநீர் இணைப்புத் திட்டத்தைச் சேர்க்க வேண்டுமென மத்திய அரசுக்கு பலமுறை வேண்டுகோள் விடுத்தோம். அது கவனிக்கப்படாமல் இருந்த சூழ்நிலையில் 29.5.2007 அன்று நடைபெற்ற 53–ஆவது தேசிய வளர்ச்சிக் குழுக்கூட்டத்தில் – என்.டி.சி. –

“பதினோராவது திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கான அணுகுமுறைகளில், தீபகற்ப நதிகளை இணைப்பதற்கான செயல்திட்டம் சேர்க்கப்பட்டு அதற்குத் தேவையான நிதியும் வழங்க வேண்டும்''

என நான் தமிழக அரசின் சார்பில் கலந்து கொண்டபோது இதை முன்வைத்துப் பேசினேன்.

அதனை மத்திய அரசு அன்றைய தினம் ஏற்றுக் கொண்டது. ஏற்றுக்கொண்டு,

''மாநிலங்களுக்குள் பாயும் நதிகள் இணைப்புத் திட்டத்திற்கு விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்கள் திட்டத்தின் கீழ் (Accelerated irrigation Benefits Programme) நிதியுதவி அளிக்கப்படும்''

என அக்கூட்டத்திலேயே தீர்மானத்தையும் நிறைவேற்ற மத்திய அரசு முன்வந்தது. அந்தத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

என்ன தீர்மானம் என்றால்,

''மாநிலங்களுக்குள் பாயும் நதிகளை – நீங்கள் மாநிலத்திற்கு மாநிலம் பாய்கிற நதிகளை இணைப்பது பிறகு இருக்கட்டும். முதலில், எங்கள் மாநிலத்திற்குள்ளே பாய்ந்துகொண்டிருக்கின்ற நதிகளையாவது ஒன்றோடு ஒன்று இணைத்து எங்களுக்குத் தேவையான தண்ணீரை – தேவையான நிலத்தில் பயன்படுத்திக்கொள்ள வசதியும் வாய்ப்பும் வழங்குங்கள்!'' என்று கேட்ட இந்தக் கோரிக்கையை, அதற்கு நிதியும் வழங்குங்கள் என்று கேட்ட தமிழக அரசின் இந்த வேண்டுகோளை, மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டது.

**தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு**

அதற்குப் பிறகு 19.12.2007இல் புதுடெல்லியில் 54–ஆவது தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில், அதிலும் நான் பேசும்போது குறிப்பிட்டேன்.

''மாநிலத்திற்குள் பாயும் ஆறுகள் இணைக்கப் படுவதைப் பொறுத்தவரை, தேசிய வளர்ச்சிக் குழுவின் 53–ஆவது கூட்டத்தில் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட திட்டங்களுக்கு மத்திய அரசு உடனடியாக நிதியுதவி வழங்க வேண்டுமென வலியுறுத்துகிறேன்.''

என்றும் மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டேன்.

பின்னர், புதுடெல்லியில் 11. 2. 2008–அன்று 2008 – 2009–ஆம் ஆண்டுக்கான ஆண்டுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து, மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் திரு. மான்டேக்சிங் அலுவாலியா அவர்களுடன் நான் விவாதித்த போது, 53–ஆவது தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி மாநிலங்களுக்கு இடையில் நதிகளை இணைக்கும் திட்டத்திற்கு அதிக அளவில் நிதி தேவைப்படும் என்பதால், விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்கள் திட்டத்தின்கீழ் தமிழகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுமென மீண்டும் எடுத்துரைக்கப்பட்டது.

எத்தனை 'மீண்டும்' பாருங்கள்! எத்தனை 'மறுபடியும்' பாருங்கள்! எத்தனை 'தேதிகள்' பாருங்கள்! அதனால்தான், ''மாநிலத்திலே சுயாட்சி; மத்தியிலே கூட்டாட்சி'' என்கின்ற அந்த வாதத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் நமக்கெல்லாம் ஆரம்பப் பாடமாகவே அரசியலிலே எடுத்துச் சொன்னார்கள்.

அதை வலியுறுத்தி வருகின்ற நாம், 22 . 2 . 2008 அன்று மத்திய நீர்வள ஆதாரத்துறை அமைச்சர் பேராசிரியர் சைபுதீன் சோஸ் அவர்கள் தமிழக அரசுக்கு ஒரு கடிதம் எழுதினார். இவ்வளவுக்கும் பிறகு, மத்திய நீர்வள ஆதாரத்துறை அமைச்சர் பேராசிரியர் சைபுதீன் சோஸ் அவர்கள் கடிதம் எழுதினார்.

அதில்,

''மாநிலத்திற்குள் பாயும் நதிகள் இணைப்புத் திட்டங்கள், வேளாண்மை மற்றும் பல்நோக்குத் திட்டங்களாக இருப்பதால், அவைகளுக்கு விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன்கள் திட்டத்திற்கு, நீர்வள ஆதார அமைச்சகம் வகுத்துள்ள வழிமுறைகளின்படி மத்தியத் திட்டக் குழுவின் ஒப்புதலோடு நிதியுதவி வழங்கப்படும்''

என்று, கடைசியாக நாம் ஒரு பெருமூச்சு விட்டுக்கொள்கிற வகையில், 'நிதியுதவி வழங்கப்படும்'' என்று மெல்லச் சொன்னார்கள்.

**நிதி நிலை அறிக்கையில் அறிவிப்பு**

பின்னர் 20.3.2008 அன்று நம்முடைய தமிழக சட்டப் பேரவையில் அளிக்கப்பட்ட 2008 – 2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் பின்வருமாறு சொன்னோம்.

''மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட பாசன உதவித் திட்டத்தின் கீழ் இத்தகையப் பணிகளுக்கு நிதியுதவி வழங்க தேசிய வளர்ச்சிக் குழு ஒப்புதல் அளித்துள்ள நிலையில், அந்த நிதியுதவியை எதிர் நோக்கி (அப்போதும் – பெற்று – அல்ல) மாநில அரசின் நிதியில் இருந்து தமிழ்நாட்டிலே பாயும் பின்வரும் நதி இணைப்புகளுக்கான பணிகள் வரும் 2008–2009 ஆம் நிதியாண்டில் தொடங்கப்படும்''

என்று நமது வரவு செலவுத் திட்டத்தில் – நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்தோம்.

**என்னென்ன திட்டங்கள்?**

''வெள்ளக் காலங்களில் காவிரி ஆற்றில் பெருகும் உபரி நீரை, வறண்ட மாவட்டங்களுக்குக் கொண்டு செல்வதற்கான காவிரி – அக்னியாறு – கோரையாறு – பாம்பாறு – வைகை – குண்டாறு இணைப்புத் திட்டத்தின் முதற்கட்டமாக; காவிரி ஆற்றின் குறுக்கே கட்டளைப் பகுதியில் கதவணை அமைக்கும் திட்டம் 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்''

என்றும் அறிவிக்கப்பட்டது.

அதுதான் இன்றைக்குச் செயல்படுத்தப்படுகின்ற தொடக்க விழாவாக நடைபெறுகிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அறிவிப்புகளைச் செயல்படுத்தும் வகையில், இத்திட்டத்திற்கு மத்திய அரசின் நிதியுதவியை எதிர்நோக்கி, 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டத்தை நிறைவேற்ற 9.5.2008 அன்று இந்த அரசு ஆணையும் பிறப்பித்துள்ளது.

அதன் தொடர்ச்சியாகக் காவிரி ஆற்றின் குறுக்கே கட்டளைப் பகுதியில் கதவணை அமைக்கும் திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 71 கோடி ரூபாய் செலவில் கதவணையும்,

47 கோடி ரூபாய் செலவில் கதவணை ஷட்டர்களும்,

36 கோடி ரூபாய் செலவில், காவிரி ஆற்றின் வலக்கரையையும், இடக்கரையையும் இணைக்கும் வகையிலும், இருபுறமும் உள்ள கிராமங்களின் போக்குவரத்துகளில் மொத்தம் 45 கிலோ மீட்டர் தூரத்தைக் குறைக்கும் வகையில் இருவழிப் போக்குவரத்துகளுக்குப் பயன்படும் பாலமும்,

11 கோடி ரூபாய் செலவில் நில எடுப்பு முதலிய இதரப் பணிகளும்,

– ஆக மொத்தம் 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்து, உங்களுடைய வாழ்த்துகளோடு இந்தப் பணியிலே இறங்குகிறோம்.

**நீங்கள் கேட்காததையும் கொடுத்திருக்கிறோம்**

இது என்னுடைய தம்பிமார்கள் மற்றும் நண்பர்கள் எல்லாம் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல், முதல் முதலாக மாநிலங்களுக்குள்ளே ஓடும் நதிகளை எல்லாம் இணைத்து, இந்த நதிகளினுடைய இணைப்பு விழாவை இந்தியாவிலேயே முதன் முதலாக நடத்துகிற மாநிலம் தமிழகம் ஆகும். அத்தகையதோர் மாபெரும் செயலாகும் இது.

நான் நதிகளை இணைக்கத்தான் இங்கு வந்திருக்கிறேன். திருச்சியிலே சில நண்பர்களையும் இணைக்கவேண்டும். இருந்தாலுங்கூட, நதிகளையும் இணைப்பது – நலிவுற்ற மக்களைக் காப்பாற்றுவதற்காக – நஞ்சை புஞ்சைகளெல்லாம் வளம் பெறுவதற்காக – இங்கே சொன்னார்களே, "வாழையையும் சேர்த்துக் கொள்ளுங்கள், நாங்கள் அதனாலும் வாடுகிறோம். இங்கே பயிர் பச்சைகளின் சேதாரத்திற்கு மட்டும் இழப்பீடு கொடுத்தால் போதாது. வாழைக்கும் தரவேண்டும்'' என்றெல்லாம் கேட்டார்கள் அல்லவா, வாழையிலேயே வாழ்வு இருக்கிறது. வாழை என்றாலே, வாழ்வின் அடிப்படையிலே உருவானதுதான்! ஆகவே, வாழைக்கு எதுவும் தருவதைப் பற்றியும் இந்த அரசு ஆலோசிக்கும் என்பதை இங்கே பேசிய நண்பர்களுக்கெல்லாம் நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

வரிசையாக நீங்கள் கேட்பதையெல்லாம் கொடுத்திருக்கிறோம். நீங்கள் கேட்காததையும் கொடுத்திருக்கிறோம். அப்படித்தான் நெல்லுக்கு விலை, நீங்கள் கேட்காமலேயே அறிவித்தோம். கடலூரில் நடைபெற்ற மாநாட்டில் முடிவெடுத்து, பெண்களுக்குச் சாதகமாக, கேஸ் சிலிண்டரின் விலையையும் குறைத்துக் கொடுத்தால் போதுமென்று, அவர்களுக்கும் முகத்திலே புன்னகையை வரவழைத்தோம்.

இப்பொழுது இந்த வட்டாரத்திலே உள்ள வாழைத் தோட்ட வியாபாரிகள் பலரை எனக்குத் தெரியும். வாழைத் தோட்டம் வைத்திருப்பவர்கள் எல்லாம் எவ்வளவு சம்பாதிக்கிறார்கள், ஒரு வாழைத்தோட்டம் ஒரு மழையிலோ, ஒரு புயலிலோ அழிந்தால் எவ்வளவு நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள் என்பதிலிருந்து, அது ஒழுங்காக இருந்தால் எவ்வளவு சம்பாதிப்பார்கள் என்பதையெல்லாம் நான் ஏற்கெனவே தெரிந்து கொண்டிருக்கின்றேன். இருந்தாலும் அவர்களுடைய இழப்புக்களை ஈடுகட்ட இந்த அரசு முன்வரும் என்ற உறுதியையும் உங்களுக்கு இங்கே நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நெருக்கடியை உணர்ந்து செயல்படுகிறோம்**

தமிழக அரசு – திராவிட முன்னேற்றக் கழக அரசு மக்கள் அரசாக செயல்படுவதையெல்லாம் இங்கே தம்பி துரைமுருகனும், பொருளாளர் ஆர்க்காட்டாரும் அதற்கு முன்னால் பேசிய நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அலுவலர்களும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். நான் அதையே திரும்பத் திரும்ப உங்களுக்கு நினைவுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகின்றேன்.

இன்று உள்ள நெருக்கடியான சூழலில், தமிழகத்திலே நெருக்கடியை உணர்ந்து நாம் செயல்படுகிறோம். மற்ற மாநிலங்கள் எப்படியோ, எனக்குத் தெரியாது. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில், நெருக்கடியை உணர்ந்து, அந்த நெருக்கடியை எப்படிச் சமாளிப்பது என்ற வழிவகைகளை ஆராய்ந்து அதற்கேற்ப செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

விலைவாசி ஏறுகிறதா? எந்த அளவுக்கு ஏறியிருக்கிறது? எந்த அளவுக்குக் குறைத்தால் மக்கள் ஓரளவுக்கு நிம்மதியாக வாழ முடியும் என்பதை யோசித்துப்பார்த்து அதற்கேற்ப பணியாற்றுகிறோம், நிருவாகத்தை நடத்துகிறோம். அப்படி மக்களின் துயரங்களையும் அறிந்து, மக்களுடைய

கஷ்டங்களையும் அளந்து பார்த்து அதற்கேற்ப நிருவாகத்தை நடத்துகின்ற ஒரு அரசாக இந்த அரசு இருக்கின்றது. அதற்கிடையிலேதான் இப்படிப்பட்ட மாபெரும் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம்.

யாராலாவது எதிர்பார்க்க முடியுமா ? இன்றைக்குக் காலையிலே உயர்கல்வித்துறை அமைச்சர் தம்பி பொன்முடியும், அதிகாரிகளும் சென்று திருவாரூரிலே இடம் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். எதற்கு ? பல்கலைக்கழகத்திற்கு ! திருவாரூரில் பல்கலைக்கழகம் வருகிறது. திருவாரூர் வட்டாரத்தில் பல்கலைக்கழகம் வரவேண்டிய அவசியம் என்ன ? அவசியம் என்ன என்பது, தேவையில்லை என்ற பொருளிலே நான் கேட்கவில்லை. அதை நீங்கள் உணர வேண்டும் என்பதற்காக கேட்கின்றேன்.

திருவாரூர் மாவட்டத்தைச் சுற்றித்தான் நாகப்பட்டினம் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஆகியன அமைந்திருக்கின்றன. ஏழைபாழைகள், இல்லாதோர் இவர்களெல்லாம் வாழுகின்ற மாவட்டம் – அந்த மாவட்டத்தில் வாழுகின்ற கிராமப்புறத்து மக்கள் இவர்களெல்லாம் பல்கலைக்கழகம் என்று பெயரை கேள்விப்பட்டதுகூட கிடையாது. அவர்களெல்லாம் பல்கலைக்கழகத்திலே படிக்கப்போகிறார்கள். அது வெகுவிரைவிலே, இந்த ஆண்டே தொடங்கப்படவிருக்கிறது.

நமக்கு டெல்லியில் இருந்து தகவல் கிடைத்திருக்கிறது. "நாங்கள் அறிவித்திருக்கின்ற பல்கலைக்கழகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக – கோயம்புத்தூரில், திருச்சியில் இங்கெல்லாம் ஏற்படட்டும். ஆனால் முதன் முதலில் திருவாரூரில்தான் இந்த ஆண்டு ஆரம்பிக்கிறோம். இடம் பார்த்து வையுங்கள்'' என்று மத்திய அரசின் கல்வித்துறையிலிருந்து செய்தி அனுப்பியிருக்கிறார்கள் என்றால், ஒவ்வொருநாளும், அணுப்பொழுதும் வீணாகாமல், ஆக்கப்பூர்வமான திட்டங்களை நிறைவேற்ற அங்குள்ள அரசு நமக்கு உதவிகளைச் செய்து வருகின்றது.

இதுவரையிலே அந்த அரசால் நமக்குக் கிடைத்திருக்கின்ற உதவிகள், சாதகங்கள் எவையெவை என்பதையெல்லாம் நான் இங்கே அடுக்கிக்காட்ட நேரமில்லை.

நாம் பேசுகின்ற தாய் மொழி, தமிழ் மொழி. அது செம்மொழியாக ஆவதற்கு அம்மையார் சோனியா காந்தி அவர்கள் தலையசைத்து, பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் ஏற்றுக்கொண்டு, அர்ஜுன்சிங் அவர்கள் அதற்கான ஆதரவினை நல்கி, நம்முடைய பழம்பெரும் புலவர் சூரியநாராயண சாஸ்திரி அவர்கள் – பரிதிமாற் கலைஞர் அவர்கள் கண்ட கனவு – "தமிழ், செம்மொழி ! உலகத்திலே உள்ள மொழிகளிலே முதுமொழி, அமுதமொழி தமிழ்மொழி. அது "செம்மொழி'' என்ற பெயரைப் பெற வேண்டும்'' என்று அவர் கண்ட கனவை – அவர் கண்ட நூறாண்டுகளுக்குப் பிறகு இன்றைக்கு நாம் நிறைவேற்றுகிறோம் – சென்னையிலே காமராஜர் பெயரால் அமைந்துள்ள கடற்கரைச் சாலையிலே இன்னும் நான்கைந்து நாட்களிலே அந்த அமைப்பு செயல்படத் தொடங்குகிறது. அந்த அமைப்பின் பெயரால் விருதுகள் வழங்கப்படவிருக்கின்றன. இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், நாம் மொழியைப் பாதுகாக்க, மொழியை வளப்படுத்த, மொழியை வளமுள்ளதாக ஆக்க, நமது திட்டங்களை நிறைவேற்ற, இன்னும் நம்முடைய எண்ணம் நிறைவேறுமேயானால், நிறைவேறுவதற்கு நாங்கள் நடத்துகின்ற போராட்டம் வெற்றி பெறுமேயானால், சேதுசமுத்திரத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்குத் தயங்கமாட்டோம் – நிறைவேற்றியே தீருவோம் என்ற உறுதி மொழியை உங்களுக்கு அளித்து, இந்த அருமையான நேரத்தில் உங்களையெல்லாம் சந்திக்கின்ற இனிய வாய்ப்பு எனக்குக் கிட்டியமைக்காக, இந்த வாய்ப்பை அளித்த நண்பர்கள் அத்தனைபேருக்கும் – குறிப்பாகப் பொதுப்பணித்துறைக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தை, வாழ்த்துக்களைக் கூறி விடைபெறுகிறேன்.

❖ ❖ ❖

# விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று நெல் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு

2008–2009ஆம் ஆண்டு காரீப் பருவத்திற்கு மத்திய அரசு நெல் கொள்முதல் விலையை சாதாரண ரகம் குவிண்டால் ஒன்றுக்கு 850 ரூபாய் என்றும்; சன்ன ரகம் குவிண்டால் ஒன்றுக்கு 880 ரூபாய் என்றும் நிர்ணயித்துள்ளது. எனினும், விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று – உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும், நெல் உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகளுக்கு நல்ல விலை கொடுத்து ஊக்குவிக்கவும், 2008–2009ஆம் ஆண்டு குறுவைப் பருவத்தில் இருந்து கொள்முதல் செய்யப்படும் சாதாரண ரக நெல், குவிண்டால் ஒன்றுக்கு 1,000 ரூபாய் என்றும்; சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 1,050 ரூபாய் என்றும் வழங்கிட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

★ ★ ★

# சத்துணவில் முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கப்படும்

**சென்னை, ஆயிரம் விளக்கில் 15.07.2008 அன்று நடைபெற்ற காமராஜர் பிறந்தநாள் – கல்வி வளர்ச்சி நாள் விழாவில்**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**

**ஆற்றிய உரை**



காமராஜர் அவர்களுடைய பிறந்த நாளைக் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடுவோம் என்று கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பில் அறிவித்து அந்த அறிவிப்பு தொடர்ந்து நிரந்தரமாகச் செயல்பட குறுக்கே வருகின்ற அரசு எப்படியிருக்குமோ என்ற சந்தேகத்தினால் – நான் சந்தேகப்பட்டது உண்மை தான் என்பதற்கேற்ப – இடையிலே வந்த அரசு காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாள் என்று அறிவித்ததைக் கண்டு கொள்ளாமலே போய்விட்டதை நீங்கள் அறிவீர்கள். அதனால்தான் மீண்டும் ஆட்சிப் பொறுப்புக்கு தி.மு. கழகம் வந்த பிறகு, இதை வெறும் அறிவிப்பாக வைத்தால்தான், அவரவர்கள் இஷ்டத்திற்குக் கொண்டாடுகிறார்கள், சில நேரங்களில் கொண்டாடாமல் விட்டு விடுகிறார்கள் என்பதற்காக, இந்த முறை நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடன் இதை ஒரு சட்டமாகவே ஆக்கி, ஜூலை 15 என்றால் அன்றைய தினம் காமராஜருடைய பிறந்த நாளை சட்டப்படி பள்ளிகளில் கொண்டாட வேண்டுமென்று – சட்டப் பேரவையிலேயே சட்டம் நிறைவேற்றி, அதை உறுதிப்படுத்தியிருக்கிறோம்.

ஏன் சட்டத்தை மாற்ற முடியாதா என்று கேட்கக் கூடும். மாற்றலாம் ஆனால் ஒரு அறிவிப்பை மாற்றுவது சுலபம். அதைக் கண்டுகொள்ளாமலே இருந்து விட்டால் தானாகவே மாறி விடும். அல்லது வேண்டுமென்றேகூட அறிக்கை விட்டு அதை மாற்றிவிடலாம். ஆனால் சட்டமாகச் செய்தால், அதைத் திரும்பப் பெற, மாற்றுவதற்கு, சட்டசபையைக் கூட்டியாக வேண்டும். சட்டமன்றத்தைக் கூட்டி, இப்படி கழக ஆட்சிக் காலத்தில் கருணாநிதி முதல் அமைச்சராக இருந்தபோது

காமராஜருடைய பிறந்த நாளைக் கல்வி வளர்ச்சி நாள் என்று குறிப்பிட்டுக் கொண்டாடினார். அதற்காக ஒரு சட்டம் செய்தார், அந்தச் சட்டத்தை நாங்கள் இப்போது விலக்கிக் கொள்கிறோம், ரத்து செய்கிறோம் என்று சொல்ல வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட சட்டத்தை ரத்து செய்து விட்டு வெளியிலே நடமாட முடியுமா என்பது வேறு விஷயம். அதனால் தான் இதைச் சட்டமாகவே இன்றைக்கு ஆக்கியிருக்கிறோம்.

### மதிய உணவுத் திட்டம்

சட்டமாக ஆக்கியது மாத்திரமல்ல, இங்கே தம்பி ஸ்டாலினும், அரசுத்துறை செயலாளரும் சுட்டிக் காட்டியதைப் போல இந்த மதிய உணவுத் திட்டம், வைத்து – அன்றைக்கிருந்த நீதிக் கட்சியின்பால் தொடர்பு கொண்ட கல்வி அதிகாரிகள் – அதன் பிறகு பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக ஆனபோது – அவருக்கு 25ஆம் ஆண்டு தியாகராயர் செய்த – அந்தச் செயலை எடுத்துக்காட்டி – இதை நாம் பின்பற்ற வேண்டுமென்று சுந்தரவடிவேலு போன்ற அதிகாரிகள் சொன்னபோது – அதைப் பெருந்தலைவர் காமராஜர் உடனடியாக தயக்கமின்றி, தாமதமின்றி ஏற்றுக் கொண்டார்கள். ஏனென்றால் அவர் பயணம் செய்கின்ற ஊர்களில் – பாதைகளில் – ஏழையெளியவர்கள், கிராமப்புறத்து மக்கள் – தாழ்த்தப்பட்ட மக்கள் – இவர்கள் மாடு மேய்ப்பவர்களாக, ஆடு மேய்ப்பவர்களாக இருக்கின்ற அந்தப் பிள்ளைகளையெல்லாம் பார்த்து



சத்துணவுத் திட்டமாக மாறியது ஒரு வரலாறு. ஏற்கெனவே 1925ஆம் ஆண்டுதான் மாணவர்களுக்கு பள்ளிக் கூடம் வருவதற்கு ஆர்வம் ஏற்படுத்த, பள்ளிக் கூடத்திற்கு வந்து படித்து விட்டுச் செல்கிறவர்கள் பசியோடு செல்லக்கூடாது என்பதற்காக சர். பிட்டி. தியாகராயர் மாநகராட்சியின் தலைவராக இருந்த காலத்தில் மதிய உணவுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார். அது சென்னை மாநகரத்தைப் பொறுத்து ஒரேயொரு பகுதியிலே நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு திட்டம். அதை மனதிலே விட்டு – "இவர்கள் எல்லாம் ஏன் பள்ளிக்குச் செல்லவில்லை?" என்ற கேள்வியை எழுப்பி, பள்ளிக்குச் சென்றால், அவர்களுக்கு உணவு கிடைக்காது, வீட்டிலே வேலை செய்ய ஆள்கிடைக்காது, அதற்காகத்தான் அவர்கள் வீட்டு வேலைகளைக் கவனிக்கிறார்கள் என்று சொன்னபோது அவர்கள் பள்ளிக்கும் செல்ல வேண்டும், பசியாறி படிக்கவும் வேண்டும் என்ற நல்ல நினைப்போடு பெருந்தலைவர் காமராஜர் அன்றைக்குத் தமிழ்நாட்டிலே உள்ள பெற்றோர்கள் – இந்தப் பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புகின்ற பெற்றோர்கள், நல்ல

உள்ளத்தோடு தருகின்ற நன்கொடைகளையெல்லாம் பெற்று, அவைகளைக் கொண்டு அந்தப் பிள்ளைகளுக்கு மதிய உணவை வழங்கினார்.

இந்தத் திட்டத்தை மதிய உணவு என்கிற பெயரால் ஆரம்பித்தவர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் – ஆட்சிப் பொறுப்பிலே முதல் அமைச்சராக இருந்த அந்தக் காலக்கட்டத்தில்! அதற்குப் பிறகு ஆட்சி மாறி, தி.மு. கழகத்தின் ஆட்சி வந்து, அதன் தொடர்ச்சியாக எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, அவர் இந்தத் திட்டத்தை மதிய உணவுத் திட்டம் என்று இல்லாமல், சத்துணவுத் திட்டம் என்ற பெயரால் மாநில சர்க்காரின் பணத்திலேயே – யாரிடமும் நன்கொடை பெறாமல் – மாநில அரசின் செலவிலேயே இதைப் பள்ளிக்கூடங்களில் மதிய உணவுத் திட்டத்தை சத்துணவுத் திட்டம் என்ற பெயரிலே வழங்க ஆணை பிறப்பித்தார்.

**மகிழ்ச்சியோடு கல்வி கற்கின்ற வாய்ப்பு**

இந்தச் சத்துணவு திட்டம்தான் இன்றைக்கு எத்தனை முட்டைகளோடு என்ற எண்ணிக்கையிலே பெருகியிருக்கிறது. ஏன் இதிலே முட்டைகளை நாம் சேர்த்திருக்கிறோம் என்றால் – இப்போது குழந்தைகளுக்கு வழங்குகின்ற உணவு, சத்து நிறைந்ததல்ல, ஆகவேதான் முட்டையும் சேர்க்க வேண்டுமென்று முட்டையையும் சேர்த்தோம். முதலில் ஒரு முட்டை, பிறகு இரண்டு முட்டை, இப்போது மூன்று முட்டை என்ற அளவிற்கு குழந்தைகளுக்குப் பள்ளிக் கூடத்திலே அவர்களுக்குப் பரிமாறப்படுகிறது. இதுதான் உண்மையான சத்துணவு என்று அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அவர்களும், அவர்களைப் பெற்றெடுத்த தாய்மார்களும் அதனால் மகிழ்ச்சியோடு அதைப் பெற்று, அதே மகிழ்ச்சியோடு கல்வியும் கற்கின்ற அந்த வாய்ப்பு அந்தக் குழந்தைகளுக்கெல்லாம் ஏற்பட்டிருக்கின்றது.

இதிலே ஒரு பிரச்சினை. சைவப்பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்கள் முட்டை சாப்பிடுவதில்லை. இந்தப் பிரச்சினை இரண்டாண்டு காலமாக விவாதத்திலே இருக்கிறது. முட்டை சாப்பிடாத பிள்ளைகளுக்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்று. அதைத்தான் யோசித்து – முட்டை வேண்டாமென்று சொல்கின்ற குழந்தைகளுக்கு ஆளுக்கொரு வாழைப்பழம் நிச்சயமாக வழங்கப்படும் என்று இந்த ஆண்டிலிருந்து வாழைப்பழம் வழங்குவதாக இருக்கிறோம். அந்த வாழைப்பழத்திற்கு ஆகின்ற செலவு கிட்டத்தட்ட ஒன்னேகால் கோடி ரூபாய் அல்லது ஒன்றரைக் கோடி ரூபாய்தான் அதிகச் செலவாகும், அந்த ஒன்னேகால் கோடி ரூபாய் அதிகம் செலவாவதைப் பொருட்படுத்தாமல் இந்த அரசு முட்டை சாப்பிடாத சைவக் குழந்தைகளுக்கு வாழைப்பழம் வழங்கும் என்பதை எடுத்துச் சொல்லி, வாழைப்பழம் தனித்தனியாக வருவதாலேயே முட்டையைப்போல என்று அதிலே ஏதாவது தவறு செய்யலாம் என்று வழங்குபவர்கள் ஆரம்பித்தால், அது அந்தக் குழந்தைகளுக்கு செய்கின்ற துரோகமாக ஆகிவிடும் என்பதை மாத்திரம் நான் அப்படிப்பட்ட நண்பர்களுக்கு எடுத்துக்காட்டி – இந்தத் திட்டத்தை எந்த அளவிற்கு நல்ல எண்ணத்தோடு இந்த அரசு கொண்டு வருகிறதோ அந்த நல்ல எண்ணம், ஈடேறுகின்ற அளவிற்கு வெற்றி பெறுகின்ற அளவிற்கு நம்முடைய அரசு அலுவலர்களும் – ஆசிரியர்களும் – குழந்தைகளைத் தங்கள் வீட்டுக் குழந்தைகளாகக் கருதி அவர்களையெல்லாம் வாழ வைக்க வேண்டும்.

ஏனென்றால் பழத்தின் பெயரே "வாழ"ப்பழம் தான். வாழைப்பழத்தைக் கொடுத்துவிட்டு அவர்களை வாழச்செய்யுங்கள் என்பதற்காக அவர்களுக்கு வாழைப்பழம் கொடுக்கப்படுகின்றது. அந்தத் திட்டத்தை இன்றைக்கு ஆயிரம் விளக்கிலே நான் அறிவித்திருக்கின்றேன். ஏதோ ஸ்டாலின் தொகுதியிலேதான் அறிவிக்க வேண்டுமென்றல்ல. இதை அறிவிப்பதற்கு நான் தயாராக இருந்தேன். ஆனால் இந்தத் தொகுதியிலே அறிவிக்க வேண்டிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கின்றது. ஸ்டாலின் இந்தத் தொகுதியைத் தன்னுடைய தொகுதியென்றே குறிப்பிட்டார். அதைப்போல தமிழ்நாட்டிலே நாம் வெற்றி பெற்ற தொகுதியெல்லாம் நம்முடைய தொகுதிதான், என்னுடைய தொகுதிதான், ஸ்டாலின் தொகுதிதான். இங்கேயிருக்கின்ற நம்முடைய கழக முன்னோடிகளின் தொகுதிதான் என்ற அந்த முறையில் அந்தத் தொகுதிகளிலே நாம் மேலும் மேலும் ஏழையெளிய மக்களுக்கு, மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு நன்மைகளைச் செய்யக் கூடிய வாய்ப்பை நீங்கள் வழங்குங்கள் என்று கேட்டு இந்த இனிய விழாவிலே கலந்து கொண்டு காமராஜருடைய பெருமையை எடுத்துச் சொல்வதிலும், காமராஜர் எந்தக் கல்விக்காகப் பாடுபட்டாரோ, அந்தக் கல்வியை வளர்ப்பதிலும், கழக அரசு கங்கணம் கட்டிக் கொண்டு கடமையை ஆற்றும் என்ற உறுதிமொழியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

❖❖ ❖

# மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்

2008 ஜூன் 19,20 ஆகிய நாட்களில் ஆற்றிய உரை மற்றும் எடுக்கப்பட்ட முடிவுகள்.




மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே !

தலைமைச் செயலாளர் அவர்களே !

காவல்துறைத் தலைமை இயக்குநர் அவர்களே !

அரசு உயர் அலுவலர்களே !

மாவட்ட ஆட்சித் தலைவர்களே !

காவல்துறை அலுவலர்களே ! நண்பர்களே !

உங்கள் அனைவருக்கும்
எனது அன்பு கலந்த வணக்கங்கள்.

தமிழக மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றி, சொன்னதைச் செய்ததோடு மட்டுமல்லாமல் சொல்லாததையும் செய்து மிகச்சிறந்த மனித நேய அரசாகத் திகழ்கிறது தமிழக அரசு. இந்த அரசின் மக்கள் நலத் திட்டங்களின் பயன்கள் அனைத்தையும் உரிய பயனாளிகளுக்குக் கொண்டு சேர்க்கும் பணியில் அல்லும் பகலும் அயராது பாடுபடும் மாவட்ட ஆட்சித் தலைவர்களையும், மக்களிடம் நட்பு பூண்டு, அவர்களைப் பாதுகாத்திடும் பெரும்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள காவல்துறை அதிகாரிகளையும் ஒருசேர சந்தித்து உரையாடுவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த அரசு கொண்டு வந்த மக்கள் நலத் திட்டங்கள் சிலவற்றை முன்மாதிரியாக எடுத்துக் கொண்டு சில மாநிலங்கள் செயல்படுத்தி வருவதை அண்மையில் நீங்கள் ஏடுகளில் படித்திருக்கலாம். குறிப்பாக ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தை ஆந்திர மாநில அரசு அண்மையில் தொடங்கியிருக்கிறது; இப்படி நம்மை, நம் மாநிலத்தைப் பிற மாநிலங்கள் பின்பற்றுவதற்குக் காரணம், அத்திட்டங்களை வகுத்துத் தந்த இந்த அரசு மட்டுமல்ல; அதனை முறையாக, சரியாக, செம்மையாக நிறைவேற்றி வரும் அரசு அதிகாரிகளான நீங்களும்தான் என்பதை நான் மிக நன்றாக அறிவேன்.

அரசுத் திட்டங்கள், பல துறைகளின் கூட்டு முயற்சியின் மூலம் செயல்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். பாதாளச் சாக்கடைத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், இதில் நிலம் வழங்குவதற்கு வருவாய்த்துறை, திட்ட அறிக்கை வழங்குவதற்கு குடிநீர்



வடிகால் வாரியம், மாசுக் கட்டுப்பாட்டுச் சான்று வழங்குவதற்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் என்று பல துறைகள் சம்பந்தப்பட்டுள்ளன. இது போன்ற பெரும் திட்டங்களில் ஒவ்வொரு துறையும் தனித் தனியாகச் செயல்படாமல், அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் இத்திட்டங்கள் தாமதப்படாமல், விரைந்து நிறைவேறி மக்களுக்கு நன்மை பயக்கும். இந்த ஒருங்கிணைக்கும் பொறுப்பை நிறைவேற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களது மாவட்டங்களில் நடைபெறும் பெரும் திட்டங்கள் குறித்து சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, தேவைப்பட்டால் அரசுடன் தொடர்பு கொண்டு தடைகளை விரைவில் தீர்த்து வைத்து முன்னேற்றம் காண வேண்டும். தீர்க்க முடியாத சிக்கல்கள் என நீங்கள் கருதும்பட்சத்தில், எந்த நேரத்திலும் என்னையே நேரடியாகத் தொடர்பு கொண்டு தகுந்த அறிவுரைகளைப் பெறுவதற்கும் தயங்க வேண்டிய அவசியமில்லை.

**சட்டம் ஒழுங்கு நிலை**

தமிழ்நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு செம்மையாகப் பேணப்பட்டு தமிழகம் அமைதியின் தொட்டிலாகத் திகழ்கிறது என அனைவரும் பாராட்டுகின்றனர். இப்பாராட்டு மேலும் பொலிவுபெற வேண்டுமெனில், கடுங்குற்றம் புரிவோர், கூலிப் படையாகிக் கொடுங் குற்றங்களில் ஈடுபடுவோர், பொதுமக்களை அச்சுறுத்தும் சமூக விரோதிகள் ஆகியோரின் போக்கிற்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைத்திட காவல்துறையினர் காலதாமதமின்றிச் சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டு, பொதுமக்களிடையே நம்பிக்கையை வளர்க்க வேண்டும் என இத் தருணத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலத்தில் நிலவும் பொது அமைதியைக் குலைத்திடும் தீய நோக்கத்துடன் சில சமூக விரோதிகள், நாடு போற்றும் தலைவர்களின் சிலைகளை அவ்வப்போது சேதப்படுத்தியும் சிதைத்தும் தேவையற்ற சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றனர். பொதுமக்களின் அமைதியான வாழ்விற்கு எதிராக, இவ்வாறு செயல்படுபவர்களை இனங்கண்டு, விரைவாகவும் உடனடியாகவும் செயல்பட்டு, அவர்கள் மீது குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின்கீழ், சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

கள்ளச்சாராயம் மற்றும் போலி மதுபானங்களைத் தயாரிப்பவர்கள், விற்பவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றிக் கடும்நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்திட விரும்புகிறேன்.

பெருகிவரும் சாலை விபத்துகளைக் குறைக்கவும், விபத்துகள் நேராவண்ணம் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட

துறைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயல்பட்டு உயிரிழப்புகள் நிகழ்வதைத் தடுத்திடச் சிறப்பு நடவடிக்கைகளை எடுத்திட வேண்டும்.

காவல் நிலையங்களுக்குப் புகார் அளிக்க வரும் பொதுமக்களைக் கண்ணியமாகவும், மரியாதையுடனும் நடத்திட வேண்டுமென நான் ஏற்கெனவே காவல் துறைக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளேன். மேலும், முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்வதில் காலதாமதமோ அலைக்கழித்தலோ கூடாது எனவும், அறிவுறுத்தி யுள்ளேன். இந்த அறிவுரைகளின்படி, காவல்துறை பொதுமக்களின் உண்மையான நண்பனாகத் திகழ வேண்டும் என்ற எனது அவாவை நிறைவேற்றுவதில் அக்கறையுடனும், ஆர்வத்துடனும் செயலாற்ற வேண்டுமெனக் காவல்துறை அதிகாரிகளிடம் வலியுறுத்திட விரும்புகிறேன்.

சொத்துத் தகராறு, விலை மதிப்பு உயர்ந்துவரும் நில பேரங்கள், நிலமாற்றம் போன்ற உரிமையியல் வழக்குகளிலும், கட்டப்பஞ்சாயத்து போன்ற சட்டத்திற்குப் புறம்பான செயல்களிலும் காவல்துறையினர் எக்காரணம் கொண்டும் ஈடுபடவே கூடாது எனக் கடந்த காலங்களில் காவல் துறையினரின் உயர் அலுவலர்களின் கூட்டத்தில் கூறியவற்றை நினைவுபடுத்திட விரும்புகிறேன்.

**காவல் கைதி மரணங்கள்**

சட்டத்தின் ஆட்சியும், ஒவ்வொரு தனி மனிதனின் சுதந்திரமும், உரிமைகளும் மக்களாட்சித் தத்துவத்தின் அடிப்படைகளாகும். இவை வலுப்பெற மனித உரிமைகள் எவ்வகையிலும் மீறப்படாமல் காவல் துறையினர் தம்முடைய பணிகளைச் செம்மையாகச் செய்திட வேண்டும். அரசால் வழங்கப்பட்ட அறிவுரைகளைக் காவல் துறையினர் பின்பற்றி ஒவ்வொருவரும் கடமை உணர்வுடனும், மனித நேய உணர்வுடனும் செயல்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**வகுப்புவாதக் கலவரங்கள்/சாதிக்கலவரங்கள்**

வகுப்புவாதமும் சாதிய உணர்வும் தமிழ் மண்ணிலிருந்து வேரோடு ஒழிக்கப்படவேண்டும் என்ற கொள்கை உணர்வுடன் இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. பிரச்சினை ஏற்படும் போது தொடர்புடைய அனைவரையும் அழைத்துப் பேசி தீர்வு காண்பது, நல்லிணக்கத்தை நிரந்தரமாக உருவாக்கும்.

**அடிப்படைவாதம் மற்றும் தீவிரவாதம்**

வேலையில்லாத் திண்டாட்டம், போதிய கல்வித் தகுதியின்மை ஆகிய காரணங்களால், தடுமாறும் குணம் உடைய, எளிதில் வயப்படத்தக்க இளைஞர்களையும், பழங்குடி மக்களையும் குறிவைத்து மக்களாட்சியில் நம்பிக்கையில்லாத சில தீவிரவாத அமைப்புகள் தீவிரவாதத்தைத் தமிழ்நாட்டில் வேரூன்ற வைத்து அமைதியைக் குலைக்க முயல்வதாகத் தெரிகிறது. இத்தகைய தீவிரவாத அமைப்புகள் தமிழகத்தில் காலூன்ற எவ்வகையிலும் இடம் கொடுத்திடாமல், காவல்துறை இதனை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கிட வேண்டும்.

**இலங்கை அகதிகள்**

கடந்த பல ஆண்டுகளாக இலங்கையில் நிலவிவரும் இனக்கலவரம் காரணமாகத் தமிழ்நாட்டிற்கு இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வரும் நிலை தொடர்கிறது. 31.5.2008 அன்றைய நிலவரப்படி தமிழ்நாட்டிலுள்ள 117 இலங்கை அகதிகள் முகாம்களில் 73 ஆயிரத்து 433 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனர். முகாம்களில் உள்ள அடிப்படை வசதிகளைத் தொடர்ந்து நல்ல நிலையில் பராமரிப்பதுடன், சுகாதார வசதிகளை மேம்படுத்திடவும், தங்குமிடங்கள், சாலைகள், மின் வசதி ஆகியவற்றை அவ்வப்பொழுது ஆய்வு செய்து பழுதுகளை நீக்கி முகாம்களை நல்ல நிலையில் பராமரிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன்.

அகதிகளாக வாழும் இலங்கைத் தமிழர்களில் சிலர், பல்வேறு ஆவணங்களைச் சட்டத்திற்கெதிரான வழிகள் மூலம் பெற்று தமிழகத்தில் சொத்து வாங்குவதில் ஈடுபடுவதாகத் தகவல்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளன. இவைகளைப் பரிசீலித்து, இந்தியக் குடிமகனாக அல்லாதவர் இவ்வுரிமைகளைத் துய்க்க வழி இல்லை என்பதை நீங்கள் உறுதி செய்திட வேண்டும். இலங்கைத் தமிழர்களிடம் நாம் பரிவு காட்டும் அதே வேளையில், அகதிகள் என்ற போர்வையில் இந்திய இறையாண்மைக்கு ஊறு விளைவிப்போரைத் தமிழகத்தில் ஊடுருவ அனுமதிக்கக் கூடாது என்பதில் காவல்துறை மிகவும் விழிப்புடன் செயல்பட வேண்டும்.

**மீனவர்கள் சர்வதேச எல்லையினைக் கடப்பதால் ஏற்படும் பிரச்சினைகள்**

இலங்கைக் கடற்பகுதியை ஒட்டிய வடக்குக் கடல் எல்லையான மன்னார்வளைகுடா, பாக் நீரிணையிலிருந்து திரிகோணமலை வரை உள்ள பகுதி இராணுவம் சார்ந்த பிரச்சினைக்குரிய மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாலும், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்குதலுக்கு உள்ளாவதாலும், இது மாநிலத்தில் தொடர்ந்து நிலவும் சிக்கலாகக் கருதப்படுகிறது. இப்பிரச்சினை குறித்து இந்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து பல்வேறு தகவல்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில், நம் மீனவர்களை இலங்கைக் கடற்பகுதிக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தி வருகிறோம்.

சர்வதேசக் கடல் எல்லையைத் தாண்டுவதால் ஏற்படும் அபாயங்கள் குறித்த விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மீனவர்களிடையே அடிக்கடி மேற்கொள்வதோடு, படகுகளில் செல்லும் மீனவர்கள் அனைவரும் அனைத்து ஆவணங்களையும் எடுத்துச் செல்ல வேண்டும் என அறிவுறுத்தப்பட வேண்டும்.

**முப்படை வீரர்களின் நலன்**

முப்படை வீரர்களின் நிலம், வீடு மற்றும் உற்றார் உறவினரின் நலம் முதலிய தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும், கனிவோடு முன்னுரிமை வழங்கி நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**பொது விநியோகத் திட்டம் மற்றும்**
**சிறப்புப் பொது விநியோகத் திட்டம்**

ஏழை எளிய மக்கள் பயன்பெறத்தக்க வகையில் தமிழக அரசு 3.6.2006 முதல் பொதுவிநியோகத் திட்டத்தில் கிலோ அரிசி ஒன்றுக்கு 2 ரூபாய்க்கு வழங்கி வருகிறது. அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்த 14.4.2007 முதல் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தைத் தமிழக அரசு தொடங்கி செயல்படுத்தி வருகிறது. அத்தியாவசியப் பொருள்களைக் கடத்தும் செயல்களில் ஈடுபடுவோர் மீதும், அதற்கு உறுதுணையாகச் செயல்படும் அலுவலர்கள் மீதும் கடுமையான நடவடிக்கைகள் எடுத்து மாவட்ட நிர்வாகமும், காவல் துறையும் ஒருங்கிணைந்து செயல்பட்டுத் தவறுகள் நிகழாமல் தடுத்திட வேண்டும்.

மேலும், போலி குடும்ப அட்டைகளைக் கண்டுபிடித்து அகற்றிடும் பணியில் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டு அவற்றை நீக்கிட தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**இலவச எரிவாயு இணைப்பு மற்றும்**
**எரிவாயு அடுப்பு வழங்குதல்**

எரிவாயு இணைப்பு இல்லாத குடும்பங்கள் பயனடையும் வகையில் இரட்டை அடுப்புகளுடன் கூடிய இலவச எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டம் 2006–2007–ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் இணைப்புகளை உடனுக்குடன் வழங்கிட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு**
**தரிசு நிலம் வழங்கும் திட்டம்**

நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ், 31.5.2008 முடிய ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 890 ஏக்கர் நிலம், ஒரு இலட்சத்து 56 ஆயிரத்து 974 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட இலவச நிலத்தினை மேம்படுத்துவதற்காக மே 2008 வரை 13 கோடியே 67 இலட்ச ரூபாய் வேளாண்மைத்துறை மூலமாகச் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், வழங்கப்பட்ட நிலங்களைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர மாவட்ட ஆட்சியர்கள் தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**வீடற்ற ஏழைகளுக்கு வீட்டுமனை ஒப்படை**

கடந்த ஆண்டு ஜூலைத் திங்கள் 30 மற்றும் 31 ஆகிய நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் 31.3.2008–க்குள் 3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை மூன்று மாதங்களுக்கு முன்பாகவே நிறைவேற்றிச் சாதனை படைத்த வருவாய்த்துறை அலுவலர்களுக்கும், குறிப்பாக மாவட்ட ஆட்சியர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2006இல் இந்த அரசு பொறுப்பேற்றபின் 5 இலட்சத்து 40 ஆயிரத்து 421 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. எனினும், பல இடங்களில் பட்டா மாறுதல், நில உடைமைச் சான்றுகள், பிறப்பு இறப்புச் சான்றுகள் போன்ற பல சான்றுகள் வழங்குவதில் ஏற்படும் தாமதங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதால், இவை தவிர்க்கப்பட வேண்டும்.

பல துறைகளில் தீட்டப்படும் திட்டங்களுக்கு நிலம் அடிப்படைத் தேவையாக உள்ளது. இந்த நிலத்தை நில எடுப்பு செய்து முடிப்பது வருவாய்த் துறையினரின் முக்கிய பணியாகும். நில எடுப்புப் பணிகள் சரியான நேரத்தில் செய்யப்படாத காரணத்தால் பல பெருந்திட்டங்கள் தாமதப்படுகின்றன. எனவே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இவை குறித்துத் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

**தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்**

தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை தமிழகம் மிகச் சிறப்பான முறையில் செயல்படுத்தி உள்ளதற்காகப் பாராட்டைப் பெற்றதோடு, தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் வேலைகளுக்கான கூலியாக 712 கோடி ரூபாய்க்கு மேல் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்திற்கு 100 நாட்கள் வேலை வழங்க வேண்டும் என்ற மத்திய அரசின் முன்னோடித் திட்டத்தின்கீழ், இதுவரை 42 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், 82 சதவீதத்திற்கும் மேலாக பெண்களும், 56 சதவீதத்திற்கும் மேலாகத் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரும் பயன் பெற்றுள்ளது, இத்திட்டத்தின் வெற்றிக்குச் சான்றாகும். மாவட்ட

ஆட்சித்தலைவர்கள், வருங்காலங்களிலும் இத்திட்டத்திற்கு அதிக முன்னுரிமை அளித்திட வேண்டும்.

**சமத்துவபுரம்**

சமூக நீதியை மேம்படுத்தவும், தந்தை பெரியார் அவர்களின் சமூக, சமத்துவக் கொள்கைகளைச் செயல்படுத்திடவும் "பெரியார் நினைவு சமத்துவபுரம்" என்ற முன்னோடித் திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு 1997–1998– ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தி, 2001– ஆம் ஆண்டு வரை மாநில அளவில் 145 சமத்துவபுரங்களை அமைத்துள்ளது. பின்னர் வந்த அரசால் இத்திட்டம் கைவிடப்பட்டது. தற்பொழுது, மேலும் 95 புதிய சமத்துவபுரங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சமத்துவபுரங்களை அமைப்பதற்கு உகந்த இடத்தைத் தேர்வு செய்வதிலும், கட்டுமானப் பணிகளிலும், பயனாளிகளைத் தேர்வு செய்வதிலும் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மகளிர் சுய உதவிக் குழுக்கள்**

தமிழக அரசால் 1989 ஆம் ஆண்டு தொலைநோக்குப் பார்வையோடு தொடங்கப்பட்ட மகளிர் திட்டத்தின் கீழ் தற்போது 3 இலட்சத்து 67 ஆயிரத்து 256 மகளிர் சுய உதவிக் குழுக்களில் 59 இலட்சம் பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். 2006–2007 ஆம் ஆண்டு முதல் சுய உதவிக் குழுக்களை வலுப்படுத்துவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழக அரசு 2008–2009 நிதிநிலை அறிக்கையில் தகுதிவாய்ந்த 1 இலட்சத்து 50 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி மானியம் வழங்கிட 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. தகுதிவாய்ந்த அனைத்துக் குழுக்களும் இத்திட்டத்தின்மூலம் சுழல் நிதி பெற மாவட்ட ஆட்சியர்கள் ஆவன செய்திட வேண்டும்.

மாநில அளவில் சுய உதவிக் குழுக்களின் வங்கிக் கடன் இணைப்பிற்கு இவ்வாண்டு 1,600 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், வங்கியாளர்களுடன் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, இந்த இலக்கை எய்துவதோடு குழுக்களுக்குத் தொடர் கடன்கள் கிடைப்பதையும் உறுதி செய்திட வேண்டும்.

நடப்பாண்டில், மகளிர் திட்டம் மூலம் ஏழைகள் மற்றும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணிபெறும் பெண் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அளித்து 25 ஆயிரம் புதிய சுயஉதவிக் குழுக்களை உருவாக்கிட அரசு திட்டமிட்டுள்ளது. குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத பகுதிகளைக் கண்டறிந்து புதிய குழுக்களை அமைத்திடவும் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

**வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி**

வேலை வாய்ப்பற்ற 25 ஆயிரம் இளைஞர்கள் வேலை வாய்ப்புப்பெற ஏதுவாக அவர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிப்பதற்காக 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சியை நல்ல முறையில் வழங்கிட, சிறந்த தொழில் நிறுவனங்களை அடையாளம் கண்டு இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி வழங்கிட மாவட்ட ஆட்சியர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**வாழ்ந்து காட்டுவோம் திட்டம்**

ஏழை எளியோர் மற்றும் நலிவுற்றோரின் வாழ்வை மேம்படுத்திட உலக வங்கி நிதி உதவியுடன் "வாழ்ந்து காட்டுவோம்" திட்டம் 15 மாவட்டங்களில் உள்ள 2,480 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படுகிறது. திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சியர்கள் தீவிரமாகக் கண்காணித்துத் தரத்திலும், நடைமுறைகளிலும் எவ்விதக் குறைபாடும் இன்றித் திட்டத்தைச் செயல்படுத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

தமிழகத்தில் உள்ள 12 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகளிலும் ஐந்து ஆண்டுகளில் அடிப்படை வசதிகளை உருவாக்கிட, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2,500 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், கடந்த இரண்டு ஆண்டுகளில் 5 ஆயிரத்து 74 கிராம ஊராட்சிகளில் 1,025 கோடி ரூபாய் செலவில் 79 ஆயிரத்து 253 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், 2,521 கிராம ஊராட்சிகளில் 509 கோடி ரூபாய் செலவில், அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நடப்பாண்டில் செயல்படுத்தப்படுகிறது.

**அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்**

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் 2007–2008 முதல் 2010–2011 வரையிலான 4 ஆண்டுகளில் மொத்தம் 561 பேரூராட்சிகளில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டு, முதல் ஆண்டில் 40 கோடி ரூபாய் செலவில் 140 பேரூராட்சிகளிலும், இரண்டாம் கட்டமாக நடப்பு ஆண்டில் மேலும் 70 கோடி ரூபாய் செலவில் 140 பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

இத்திட்டத்தை, நிதிநிலையில் நலிந்த 30 நகராட்சிகளில் நடப்பு 2008–2009 ஆம் ஆண்டில் செயல்படுத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எனவே, கிராம ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகளில் அனைத்து அடிப்படை வசதிகளையும் அளிக்க முனையும் இத்திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் அனைத்துப் பணிகளையும் முடித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்**

கடந்த இரண்டு ஆண்டுகளில் 694 கோடி ரூபாய் செலவில் 25 இலட்சத்து 30 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு, மூன்றாம் கட்டமாக 750 கோடி ரூபாய் செலவில் 34 இலட்சத்து 25 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் பணி 16.2.2008–முதல் தொடங்கி இதுவரை 13 இலட்சத்து 90 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை எவ்வித புகாருக்கும் இடந்தராமல் விரைந்து விநியோகம் செய்திட ஆவன செய்ய வேண்டும்.

**பள்ளிகளில் கழிப்பறை வசதி**

18.9.2006 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டின் தலைமை உரையில் "அடுத்த இரண்டு ஆண்டுகளில் கழிப்பறை வசதி இல்லாத பள்ளிகள் தமிழ்நாட்டில் எங்கும் இல்லை என்ற நிலையை ஏற்படுத்துவோம்" என்று தெரிவித்திருந்தேன். அந்த அறிவிப்பினைச் செயல்படுத்துவது தொடர்பாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப்பணிகளை 2008–2009ஆம் ஆண்டிற்குள் முடித்திட அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆவன செய்திட வேண்டும்.

**தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம்**

வேளாண்மை உற்பத்தியில் 4 விழுக்காடு வளர்ச்சி விகிதத்தை அடையவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தவும், தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தை 185.31 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ள மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மாவட்ட ஆட்சியர்கள் இந்த நிதியை முழுமையாகப் பயன்படுத்தி மாநிலத்தின் வேளாண் உற்பத்தியையும், விவசாயிகளின் நலத்தையும் பெருக்க வேண்டும்.

**உழவர் சந்தைகள்**

2007–2008ல் 50 உழவர் சந்தைகள் புதிதாக அமைக்கப்படும் என்று அரசு அறிவித்து அவற்றைப் புதிதாகத் தொடங்கிட ஆணைகள் வெளியிடப்பட்டன.

இந்த புதிய உழவர் சந்தைகளை விரைவில் அமைத்திட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், உழவர் சந்தைகளின் செயல்பாட்டை மேலும் எவ்வாறெல்லாம் சிறப்புற மேம்படுத்திடலாம் என்பது பற்றியும் உரிய ஆலோசனைகளை மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

**நிலத்தடி நீர் செறிவூட்டுத் திட்டம்**

நிலத்தடி நீர் செறிவூட்டுத் திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்திட, தகுதியுள்ள அரசுசாரா தொண்டு நிறுவனங்களைத் தெரிவு செய்து, பணிகள் தரம் உள்ளதாகவும், உரிய காலத்தில் செய்து முடிக்கவும் ஏதுவாக, தொடர்ந்து கண்காணித்திட வேண்டும். மேலும், மாநிலங்களுக்குள் ஓடும் நதிகளை இணைக்கும் திட்டத்தின்கீழ் நிலம் கையகப்படுத்த வேண்டிய இனங்களில் சம்பந்தப்பட்ட நில உரிமையாளர்களை மாவட்ட ஆட்சியர்கள் அழைத்துப் பேசி எந்தவித இடையூறும் இல்லாமல் நிலங்களை கையகப்படுத்துவதற்கும், திட்டங்களை விரைந்து நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

**வருமுன் காப்போம் திட்டம்**

"வருமுன் காப்போம் திட்டம்" மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. மூன்று ஆண்டுகளில் 9,000 முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டு இதுவரை 6,773 முகாம்கள் நடைபெற்று உள்ளன. இம்முகாம்களில் ஏறத்தாழ 69 இலட்சம் மக்கள் கலந்து கொண்டு பயனடைந்துள்ளனர். எஞ்சிய இலக்கையும் அடைய தனிக் கவனம் செலுத்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மருத்துவமனைகளில் ஆய்வு**

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மருத்துவ மனைகளில் அவ்வப்போது ஆய்வுகளை மேற்கொண்டு மருத்துவர்கள் பணியில் இருப்பதையும், உயிர்காக்கும் மருந்துகள் போதுமான அளவில் இருப்பு உள்ளதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்**

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு அனைவரின் பாராட்டையும் பெற்றுவருகிறது. இந்நிதியுதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற கர்ப்பிணிப் பெண்கள் வருமானச் சான்றிதழ் கொண்டு வரவேண்டும் என்ற நடைமுறை இருந்து வந்தது. இந்த நடைமுறையினால் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏற்படும் சிரமத்தைத் தடுத்திட வருமானச் சான்றிதழ் கொண்டுவர வேண்டும் என்பதை நீக்கி, கிராம சுகாதார செவிலியர்களின் சான்றுகளின் அடிப்படையிலேயே நிதியுதவியினை வழங்கலாம் என அரசு ஏற்கெனவே அறிவித்துள்ளது. எனவே, இந்தத் திட்டத்தின்கீழ், தாமதமின்றி நிதியுதவி வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

**சத்துணவுடன் வாரம் மூன்று முட்டைகள் வழங்கும் திட்டம்**

பள்ளிகளில் குழந்தைகளுக்குச் சத்துணவுடன் வாரம் மூன்று முறை முட்டை வழங்கும் திட்டத்தில் முட்டைகள் முறையாக வழங்கப்படுகிறதா என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்கள் நேரடியாக ஆய்வு செய்ய வேண்டும்.

**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்**

வறுமையில் வாடும் பெற்றோர்கள் தங்கள் பெண்களின் திருமணத்திற்கென நிதியுதவி பெறவும், பெண்களின் கல்வி நிலையினை மேம்படுத்து வதற்காகவும் இவ்வரசால் 3.6.1989ல் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் தொடங்கப்பட்டது.

ஏழைப் பெண்கள் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயில்வதை ஊக்குவிக்கவும், வறிய நிலையில் உள்ள பெற்றோர்களுக்கு உதவிடும் வகையிலும், 3.6.2006 முதல் இத்திட்டத்தை மீண்டும் செயல்படுத்தி, நிதியுதவி 20.3.2008லிருந்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நிதியுதவி பெற குடும்ப ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாய் என்பது 24 ஆயிரம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு நிதியுதவி தங்குதடையின்றிக் கிடைத்திட மாவட்ட ஆட்சியர்கள் தனிக் கவனம் செலுத்திட வேண்டும்.

**ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர் உள்ளிட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களுக்கான நலத்திட்டங்கள்**

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு சமூக நீதி வழங்குவது மற்றும் அதிகாரமளிப்பது ஆகியவற்றில் இந்த அரசு எப்பொழுதும் கவனம் செலுத்தி வந்துள்ளது. ஆதிதிராவிடர், பழங்குடியினர், சிறுபான்மையினர் உள்ளிட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான பல்வேறு நலத் திட்டங்களின் பயன்கள், குறிப்பாக கல்வி உதவித் தொகை, இலவசப் பாடப் புத்தகங்கள், சீருடைகள் மற்றும் இலவச மிதிவண்டிகள் உரிய காலத்தில் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கண்காணிக்க வேண்டும்.

அரசு மாணவர் விடுதிகளில் தங்கிப் பயில்வோருக்கான உணவுக் கட்டணம் கடந்த இரண்டு ஆண்டுகளில் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. மாணவ, மாணவியருக்குத் தரமான உணவு வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதி செய்திட வேண்டும். அரசு மாணவர் விடுதிகளை அடிக்கடி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நேரில் ஆய்வு செய்து விடுதி மற்றும் பள்ளிக் கட்டடங்களின் உறுதித் தன்மையைச் சரிபார்த்துப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவேண்டும். அதே போன்று புதிய விடுதிகளைக் கட்டுவதற்குத் தேவைப்படும் நிலத்தைக் கையகப்படுத்தும் பணிகளையும் துரிதப்படுத்திட வேண்டும்.

**நல வாரியங்கள்**

விவசாயத் தொழிலாளர் நல வாரியம், கட்டுமானத் தொழிலாளர் நலவாரியம், உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியம் உட்பட 23 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் உறுப்பினர்கள் சேர்க்கப்படுவதுடன், இந்த வாரியங்கள் மூலம் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய பயன்கள் உடனுக்குடன் கிடைக்க ஆவன செய்வதிலும் மாவட்ட ஆட்சியர்கள் தனிக்கவனம் செலுத்திட வேண்டும்.

**பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN)**

தமிழக அரசு மைய அரசுடன் இணைந்து தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) என்ற முக்கிய இணைப்பை (Backbone Connectivity) உருவாக்கி, அதன்மூலம் அனைத்து மாவட்டங்கள், வட்டத் தலைமையிடங்கள், வட்டாரத் தலைமையிடங்கள் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே முதன்முறையாக இத்திட்டத்தினைச் செயல்படுத்திய மாநிலம் தமிழ்நாடுதான் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடையும் அதே தருணத்தில் தமிழகத்தின் கிராமப்புறச் சேவைகள் கணினிமயமாவதை விரைவுபடுத்துவது உங்கள் கடமை என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**சாலைகள் பராமரிப்பு**

இந்த அரசு பொறுப்பேற்றபின் சாலை மேம்பாட்டிற்காக ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீட்டினை அதிகரித்து வருகிறது. நடப்பு நிதியாண்டில் சாலைப் பராமரிப்புக்காக 849 கோடி ரூபாய்க்குமேல் ஒதுக்கீடு செய்து, அதில் நெடுஞ்சாலைத் துறைக்கு 746 கோடி ரூபாயும், ஊரக வளர்ச்சித் துறைக்கு 104 கோடி ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும், திட்டப் பணிகளுக்கும், சாலை பராமரிப்புப் பணிகளுக்குமான ஒதுக்கீட்டினை அதிகரித்ததன் மூலம் தமிழ்நாட்டிலுள்ள அரசுச் சாலைகளைச் சுழற்சி முறையில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதுப்பிக்கும் வாய்ப்பினை இவ்வரசு உருவாக்கியுள்ளது. இதனைப் பயன்படுத்திச் சாலைகளை நன்கு பராமரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

### அரசின் நலத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு

தமிழக அரசு நாட்டிற்கே முன்னோடியாக உருவாக்கியுள்ள திட்டங்களினால் விளைந்துள்ள நன்மைகளைப் பயனாளிகள் தாமே முன்வந்து விவரிப்பது போன்ற செய்திக் கட்டுரைகளை முக்கிய செய்தித்தாள்களில் வெளிவரச் செய்வதற்கு, மாவட்டந்தோறும் இயங்கும் மக்கள் தொடர்பு அலுவலகத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

### தமிழ் ஆட்சி மொழித் திட்டம்

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதை மொழிக் கொள்கையாகக் கொண்டுள்ள இந்த அரசின் ஆட்சி மொழித் திட்டச் செயலாக்கத்திற்கு ஒத்துழைப்பு நல்கும் வகையில் நடத்தும் ஆய்வுக் கூட்டங்களிலும் கடிதப் போக்குவரத்துகளிலும் தமிழையே பயன்படுத்த வேண்டும்.

### பால் கொள்முதல்

கடந்த ஆண்டு மே திங்களுடன் ஒப்பிடுகையில், 11 மாவட்ட ஒன்றியங்களில் பால் கொள்முதலில் மிகுந்த பின்னடைவு ஏற்பட்டுள்ளது. தனி அலுவலர் என்ற முறையில் மாவட்ட ஆட்சியர்கள் இந்தக் குறைகளையப்பட தனிக்கவனம் செலுத்துதல் வேண்டும். பால் ஒன்றியத்தால் பால் கொள்முதல் வழித்தடங்களை மற்ற மாவட்டங்களுக்கு விரிவாக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சியர்கள் பிற மாவட்ட ஆட்சியர்களின் ஒத்துழைப்பினைப் பெறவேண்டும்.

### கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்

நடப்பு ஆண்டில் 5,500 கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம்கள் 2.49 கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீட்டில் நடத்தப்படத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்திட ஏதுவாக முகாம் நடைபெறும் கிராமங்களை மாவட்ட ஆட்சியர்கள் தேர்வு செய்திட வேண்டும்; சில முகாம்களுக்குச் சென்று முகாம்கள் சரிவர நடைபெறுகிறதா என்பதையும் உறுதி செய்திட வேண்டும்.

திட்டப் பணிகளின் பயன்கள் மக்களை முழுமையாகச் சென்றடைய வேண்டுமெனில் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அதிக அளவில் களப்பணிகளை ஆய்வு செய்து, தீவிரமாகக் கண்காணித்திட வேண்டும். அப்போதுதான் அரசுப் பணிகள் செம்மையாக நடைபெறும்.

அதுமட்டுமல்லாமல், மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மக்களால் எளிதில்





அணுகத்தக்கவர்களாகவும், மக்களுடைய குறைகளை, பிரச்சினைகளை கனிவுடன் அணுகி உடனுக்குடன் தீர்க்கும் தன்மை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். ஏழை எளிய மக்களுக்கும், அரசுக்கும் இடையே ஒரு நல்லுறவுப் பாலமாக நீங்கள் திகழ வேண்டும் என்பதே என்னுடைய அவா.

பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழி ஒன்றை இங்கே குறிப்பிட்டு எனது உரையை நிறைவு செய்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

"கடலுக்காக அல்ல; கடற்கரையிலே இருக்கின்ற மக்களுக்காக காற்றடிக்கின்றது. விளக்கு ஏற்றினால், தன் எதிரிலே இருக்கின்ற இருட்டைப் போக்க ஒளி பயன்படுமே தவிர அதன் அடியில் இருக்கின்ற நிழலைப் போக்கமுடியாது! அது போல, நம்மிடத்திலே இருக்கின்ற திறமை நமக்காக அல்ல; நாட்டு மக்களுக்காக! அந்த மக்களுக்காக! அந்த வகையில் நாம் ஒவ்வொருவரும் பணியாற்றுவோம்!"

எனவே, துறைச் செயலாளர்கள், காவல்துறை உயர் அலுவலர்கள், துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஏனைய அரசுப் பணியாளர்கள் அனைவரும் நாட்டு மக்களுக்குப் பயன்படும் வகையில் தங்கள் பணியை ஆற்றிட வேண்டுமென கேட்டுக்கொண்டு, இந்த மாநாட்டைத் தொடங்கி வைத்து, உங்கள் கருத்துகளை வரவேற்று அமைகிறேன்.

★ ★ ★

**மாண்புமிகு முதலமைச்சர்**
**கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தலைமையில்**
**19.6.2008 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் முதல்நாள் மாநாட்டில் கலந்தாலோசனைக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் :**

முதலில் தமிழக அரசு செயல்படுத்திவரும் மிகப்பெரிய திட்டங்கள் அதாவது "மெகா" திட்டங்கள் குறித்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரை, ஏற்கெனவே தருமபுரியில் 'திட்ட அலுவலகம்' தொடங்கப்பட்டுள்ள நிலையில், ஜப்பான் வங்கியின் ஒப்புதலுடன் இறுதி செய்யப்பட்டுள்ள கால அட்டவணைப்படி மற்ற அனைத்துச் செயல்பாடுகளையும் மேற்கொண்டு திட்டத்தை நிறைவேற்றுவதெனவும்;

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை, 2009 ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவேற்றி புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட மக்களின் பயன்பாட்டுக்கு அர்ப்பணிப்பதென்றும்;

கோவையில் அமையவுள்ள உலகத் தரத்திலான மத்தியப் பல்கலைக்கழகத்திற்குத் தேவையான நிலத்தையும்; திருச்சியில் அமையவுள்ள மேலாண்மைக்கான மத்திய நிறுவனத்திற்கு (I.I.M.) தேவையான நிலத்தையும் மிக விரைவாகத் தேர்வு செய்து மத்திய அரசுக்குத் தெரிவிப்பதென்றும்;

திருவாரூரில் அமையவுள்ள மத்தியப் பல்கலைக் கழகத்தை இந்த ஆண்டே தொடங்கி நடத்துவதற்கு மத்திய அரசு முன்வந்துள்ள நிலையில், நிரந்தரக் கட்டடங்கள் கட்டப்படுவதற்கு முன்பு தற்காலிகமாகக் கட்டட வசதிகளை உடனடியாக ஆய்வு செய்து மத்திய அரசுக்கு அறிவிப்பதென்றும்;

பெரம்பலூர், விழுப்புரம், திருவாரூர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் அமையவுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கான நிலங்களை உடனடியாக ஒப்படைக்க உரிய நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்வதென்றும்;

சென்னை அரசுப் பொது மருத்துவமனையில் நெரிசலைக் குறைக்கும் வகையில், பெண்களுக்கான சிறப்பு மருத்துவமனை, முதியோர்களுக்கான சிறப்பு மருத்துவமனை, வெளிநோயாளிகளுக்கான சிறப்புப் பிரிவு, சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை ஆகிய மருத்துவமனைகளை பழைய மத்திய சிறை இருந்த இடத்தில் 10 ஏக்கர் பரப்பளவில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை விரைவு படுத்துவதென்றும்; ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிக்கான புதிய கட்டட வசதிகளைப் பொதுப்பணித்துறைக்குரிய நிலத்தில் விரைவாக செய்து முடிப்பதென்றும்;

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் அமையவுள்ள புதிய சட்டப்பேரவை – தலைமைச் செயலக வளாகத்திற்கான கட்டடப் பணிகளை 2008, அக்டோபர் மாதத்தில் தொடங்கி, 2010 மார்ச்சுக்குள் நிறைவு செய்வதென்றும்;

சென்னை – கோட்டூர்புரத்தில் 8 ஏக்கர் நிலப்பரப்பில் 100 கோடி ரூபாய் செலவில் அமையவுள்ள உலகத் தரத்திலான மாநில நூலகத்திற்குரிய கட்டடப் பணிகளை 2008, அக்டோபர் மாதத்தில் தொடங்கி, 2010 ஏப்ரல் மாதத்திற்குள் முழுமை செய்வதென்றும்;

சென்னையில் 100 கோடி ரூபாய் செலவில், 358 ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள சுற்றுச் சூழல் அம்சங்களை அடிப்படையாகக் கொண்ட உலகத் தரத்திலான 'அடையாறு பூங்கா' அமைப்புப் பணிகளை 2010, டிசம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்வதென்றும்;

சென்னை, அண்ணா மேம்பாலத்திற்கு அருகில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் உலகத் தரம் வாய்ந்த தாவரவியல் பூங்கா அமைப்பதற்கான தொடக்கநிலைப் பணிகளை உடனடியாக மேற்கொள்வதென்றும்;

மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டத்தையும், எலியட்ஸ் கடற்கரை அழகுபடுத்தும் திட்டத்தையும் 2009 ஜனவரி மாதத்திற்குள் நிறைவேற்றுவதென்றும்;

சென்னை விமான நிலைய விரிவாக்கப் பணிகளையும், சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான பணிகளையும் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவு செய்வதற்கேற்றபடி விரைவுபடுத்துவதென்றும்; முடிவுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

சட்டம் – ஒழுங்கு சீராகப் பராமரிக்கப்பட்ட போதிலும், இதுவரை கண்டுபிடிக்கப்படாத கொடுங்குற்றங்களின் எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்திட – காவல்துறை கண்காணிப்பாளர்கள் புலனாய்வு நடவடிக்கைகளை நேரடியாக மேற்பார்வையிட்டு, குற்றவாளிகளை சட்டத்தின் பிடிக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும்;

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நில ஆக்கிரமிப்புகள் மற்றும் சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகளில், காவல்துறை எந்த அளவுக்குத் தலையிட வேண்டுமென்று வரையறை செய்திடவும், அந்த வழக்குகளைப் பாரபட்சமின்றி கையாளும் முறை பற்றியும், அவை தொடர்பான விசாரணைகளைக் காலதாமதமின்றி முடித்திடவும் கூடுதல் காவல்துறைத் தலைவர் ஒருவர் தலைமையில் குழு ஒன்றினை அமைத்து, அக்குழுவின் பரிந்துரைகளின்படி தொடர் நடவடிக்கைகளை எடுப்பதென்றும்;

தீவிரவாத சக்திகளின் செயல்பாடுகளை முளையிலேயே கிள்ளியெறியத் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, இதனை ஒரு சமூக பொருளாதார பிரச்சினையாக அணுகி, அதனடிப்படையில் சிறப்பு வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்துவதென்றும்;

தமிழ்நாட்டிற்கு அகதிகளாக வந்து அரசு ஆதரவில் வாழ்ந்து வருபவர்களைத் தவிர; சட்டரீதியான ஆவணங்கள் எதுவுமின்றி இருக்கும் வெளிநாட்டினரை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வெளியேற வேண்டுமென்று விளம்பரப்படுத்தி, அதற்குப் பிறகும் வெளியேறாமல் இங்கே இருப்பவர்கள்மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும்;

சாதி மற்றும் மதத்தின் பெயரால் கலகம் விளைவிப் பவர்கள் மீதும், கலகத்தைத் தூண்டுபவர்கள் மீதும் குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் தயவுதாட்சண்யமின்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும்;

கடலோர மாவட்டங்களின் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை கண்காணிப்பாளர்களும் தங்கள் பகுதியில் உள்ள மீனவர்கள் சர்வதேச எல்லையைக் கடந்து சென்று மீன்பிடிப்பதால் ஏற்படும் ஆபத்துகளை விளக்கி, அவர்கள் அப்படிச் செய்யாதவாறு எச்சரிக்க வேண்டுமென்றும்; படகுகள் பதிவு செய்வதை விரைவில் முடிக்க வேண்டுமென்றும்; தனியார் டீசல் பங்க்குகள் மூலமாக வழங்கப்படும் மான்ய விலை டீசல் குறித்து பங்க்குகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டுமென்றும்;

வாகனங்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, பாதுகாப்பான சாலைப் பயணத்திற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மாவட்ட ஆட்சியர்களும், காவல்துறை அலுவலர்களும் இணைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும், குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவோர், வேகக் கட்டுப்பாட்டை மீறுவோர் ஆகியோர்மீது கடுமையான குற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும்; சாலை விபத்துகளைக் குறைக்கும் நோக்கத்தில் மாவட்டங்களில் உள்ள சாலைச் சந்திப்புகளிலும் மற்றும் மக்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளிலும் தேவையான அளவுக்கு விளக்குகளை அமைப்பது, வேகத் தடைகளை ஏற்படுத்துவது, சாலை விதிகளைப் பின்பற்றுவதற்கான எச்சரிக்கைப் பலகைகளை அமைப்பது போன்ற நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் சம்பந்தப்பட்ட துறைகளோடு இணைந்து மேற்கொள்ள வேண்டுமென்றும்; போக்குவரத்துக்குப் பயன்படும் சாலை ஓரங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளைப் பாகுபாடின்றி அகற்றிட வேண்டு மென்றும்;

பள்ளிக் குழந்தைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் முறையாகப் பராமரிக்கப்படுகின்றனவா என்றும், வாகன ஓட்டுநர்கள் முறையாகப் பயிற்சி பெற்றவர்களாகவும் உரிமம் பெற்றவர்களாகவும் உள்ளனரா என்றும், வாகனங்களில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கைக்குள் குழந்தைகளை ஏற்றிச் செல்கின்றனரா என்றும் காவல்துறை கண்காணிப்பாளர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மாநிலத்தின் எல்லையோர மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடிகள் மூலமாக உணவுப் பொருள்களின் போக்குவரத்தைத் தீவிரமாகக் கண்காணித்து, உணவுப் பொருள்களைக் கடத்துவோர்மீது கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் – முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

★ ★ ★

**மாண்புமிகு முதலமைச்சர்**
**கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் தலைமையில்**
**20.6.2008 அன்று நடைபெற்ற**
**மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும்**
**காவல்துறை அதிகாரிகளின் இரண்டாம் நாள்**
**மாநாட்டில் கலந்தாலோசனைக்குப் பின்னர்**
**மேற்கொள்ளப்பட்ட முடிவுகள்:**

அரிசி போன்ற அத்தியாவசியப் பொருள்களையும், சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, பாமாயில், செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு போன்ற பொருட்கள் எல்லா நியாய விலைக் கடைகளிலும் தொடர்ந்து முழுமையாகக் கிடைப்பதை உறுதி செய்வதென்றும்; சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பொருள்களைப் பற்றி பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம் விளம்பரப்படுத்துவதென்றும்; கிடங்குகளிலிருந்து உணவுப் பொருள்களை நியாய விலைக் கடைகளுக்கு எடுத்துச் செல்லும் பணியைப் பிற்பகல் இரண்டு மணிக்குள் செய்து முடிப்பதென்றும்; உணவுப் பொருள் வழங்குதுறையில் உள்ள 275 காலிப் பணியிடங்களை இன்னும் இரண்டு வார காலங்களுக்குள் நிரப்புவதென்றும்; எரிவாயு இணைப்புகள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ள ஒருசில மாவட்டங்களில் அவற்றை உடனடியாக வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் காலாண்டு நிதிக் கட்டுப்பாட்டினை அரசு தளர்த்தி உள்ளதால் – தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு நிதிஉதவி கால தாமதமின்றி கிடைத்திடச் செய்வதென்றும்; பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளான ஜூலை 15ஆம் நாளை ‘கல்வி வளர்ச்சி நாளாகக்’ கொண்டாட அரசு சட்டம் நிறைவேற்றியுள்ளதைத் தொடர்ந்து, அன்றைய தினம் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் விழாக்களுக்கு ஏற்பாடு செய்வதென்றும்; சத்துணவுத் திட்டத்திற்கான முட்டைகளை வாங்குவதில் விலை மற்றும் தரக்கட்டுப்பாட்டினை உறுதி செய்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் தொலைக்காட்சிப் பெட்டிகள் மாவட்டங்களுக்கு வந்தவுடனேயே, பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்றும்; தொலைக்காட்சிப் பெட்டிகளின் செயல்பாடுகள் குறித்து பொய்ப் பிரச்சாரங்கள் வெளிவரும்போது அவைபற்றி உடனடியாகத் தீர விசாரித்து, வதந்திகள் பரவாதவண்ணம் அவற்றை முளையிலேயே கிள்ளி எறியத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும்; இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வெளிச்சந்தையில் விற்கப்படுவதாக புகார்கள் வரும்போது அவற்றின்மீது உடனடியாக தீவிரமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும்; கோவை, மதுரை–இலந்தைகுளம், மதுரை–வடபழஞ்சி, சேலம், திருச்சி, நெல்லை, ஒசூர் ஆகிய இடங்களில் அமையவுள்ள தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களுக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழு ஒத்துழைப்போடு ஈடுபாடு காட்டுவதென்றும்; ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவர்களுக்குத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கும் திட்டத்தில் மாவட்ட ஆட்சியர்கள் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, அதனை வெற்றிபெறச் செய்வதென்றும்; ஜூலை 15ஆம் நாள் முதல் மாவட்டங்களில் பணி தொடங்கவுள்ள அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் செயல்பாடுகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேவையான உதவிகளைச் செய்து முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

செலவைக் குறைத்து, உற்பத்தியை அதிகரிக்கும் ‘செம்மை நெல்’ சாகுபடித் திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதென்றும்; விவசாயிகளுக்குத் தேவையான உரம், சான்றிதழ் செய்யப்பட்ட விதைகள், கூட்டுறவுக் கடன் வசதிகள் ஆகியவற்றை உரிய நேரத்தில் தேவையான அளவுக்கு வழங்குவதில் சிறப்புக் கவனம் செலுத்துவதென்றும்; கழக ஆட்சியில் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட 103 உழவர் சந்தைகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் புதுப்பித்து முழுமையாகச் செயல்பட ஏற்பாடு செய்வதென்றும்; புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள 50 உழவர் சந்தைகளைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தொடங்கி செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கழக அரசின் திருப்புமுனைத் திட்டமான அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், (அ) நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டாயப் பணிகளில் ஒருசில மாவட்டங்களில் பின்னடைவு காணப்படுவதால் அவற்றை விரைவாகத் தவிர்த்து, இலக்கினை முழுமையாக அடைவ தென்றும்; (ஆ) ஒதுக்கப்பட்டுள்ள நிதியினை முழுமையாகச் செலவு செய்வதென்றும்; தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் 13.5.2006 வரை, அதாவது கழக அரசு பொறுப்பேற்கும்வரை 3 கோடி ரூபாய் மட்டுமே செலவழிக் கப்பட்டிருந்த நிலையில், கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு ஜனவரி 2007இல் செலவழிக்கப்பட்ட தொகை 110 கோடி ரூபாயாகவும், ஜனவரி 2008இல் 562 கோடி ரூபாயாகவும், 31.5.2008 இல் 711 கோடி ரூபாயாகவும் உயர்ந்து வருவதை கருத்தில்கொண்டு, அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை கூடுதல் முனைப்புடன் செயல்பட்டு எய்துவதென்றும்; 1989ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்

தருமபுரி மாவட்டத்தில் கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட சுயஉதவிக் குழு இயக்கத்தின் கீழ், 30.4.2008 வரை 51 இலட்சம் மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட 3 இலட்சத்து 68 ஆயிரம் சுயஉதவிக் குழுக்கள் இயங்கிவரும் நிலையில், அனைத்துத் தகுதி வாய்ந்த சுயஉதவிக் குழுக்களுக்கும் இவ்வாண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 150 கோடி ரூபாய் சுழல் நிதியை வழங்குவதை மாவட்ட ஆட்சியர்கள் தீவிரமாகக் கண்காணிப்பதென்றும்; மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கிகள் வழங்கும் மறுகடன் அளவினைக் கண்காணித்து, வங்கிக் கடன் இலக்கினை முழுமையாக அடைவதென்றும்; புதியதாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள பெரியார் நினைவு சமத்துவபுரங்களை இதுவரை சமத்துவபுரம் அமைக்கப்படாத வட்டாரங்களில் இடம் தேர்வு செய்து உருவாக்கிட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும், மாவட்டத் தலைநகரங்கள் அல்லாத 22 பிற நகரங்களிலும் செயல்படுத்தப்பட்டுவரும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களுக்கான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதற்குத் தேவையான நிலங்களை விரைவாகத் தேர்வு செய்வதென்றும்; பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் முடிக்கப்பெற்று பயன்பாட்டில் இருக்கும் நகரங்களில் வீட்டு இணைப்புகள் வழங்கப்படுவதை விரைவுபடுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ் 30.5.2008 வரையில் 1 இலட்சத்து 56 ஆயிரத்து 974 ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 1 இலட்சத்து 84 ஆயிரத்து 890 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள இந்த நிலங்கள் தொடர்பாக வருவாய் ஆவணங்களில் உரிய மாற்றம் செய்வது, பயனாளிகள் தொடர்ந்து ஒப்படை செய்யப்பட்ட நிலங்களை அவர்கள் வசமே வைத்திருப்பதை உறுதி செய்வது மற்றும் அந்நிலங்களை முழுமையாகப் பயன்படுத்த ஏதுவாக விவசாயத்திற்கேற்றவாறு மேம்படுத்தி விளைச்சலைப் பெருக்குவது போன்றவற்றிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதென்று முடிவு செய்யப்பட்டது. கழக அரசு பொறுப்பேற்ற பின்னர், இது வரை 5 இலட்சத்து 40 ஆயிரத்து 421 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தப் பணியினைத் தொடர்ந்து மேற்கொள்வதற்குத் தற்போது நடைபெற்று வரும் நத்தம் நில அளவை, நகர்ப்புற நில அளவை மற்றும் மறு நில அளவைத் திட்டங்களை விரைவுபடுத்தி வீட்டுமனை வழங்கத் தகுதியான நிலங்களை கண்டறிவதென்று முடிவு செய்யப்பட்டது. தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இதுவரை 1 கோடியே 67 இலட்சத்து 52 ஆயிரத்து 26 பேர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுள் 2 இலட்சத்து 84 ஆயிரத்து 102 பேருக்கு 155 கோடியே 30 இலட்சத்து 44 ஆயிரத்து 499 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி கோரி வரும் மனுக்களின் மீது 30 நாட்களுக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்றும்; தகுதியான பயனாளிகளுக்கு எந்தவிதத் தடையுமின்றி உடனடியாக நிதியுதவி வழங்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

நிலத்தடி நீர் இருப்பினை அதிகப்படுத்துவதற்காக அரசு அறிவித்துள்ள நீரோடைகளில் தடுப்பணைகள் அமைக்கும் திட்டத்தினை விரைந்து முடித்திட ஏதுவாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் கலந்தாலோசித்துத் தேவையான தகவல்களைத் திரட்டி இதற்கான நிதியைப் பெற்று இத்திட்டத்தை மாவட்ட ஆட்சியர்கள் செம்மையாக நிறைவேற்றிட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

ஏழை எளிய மக்களுக்குத் தரமான மருத்துவ சிகிச்சை அளிக்கும் சிறப்புத் திட்டமான "வருமுன் காப்போம்" திட்டத்தின் கீழ் 9,000 முகாம்கள் நடத்தத் திட்டமிடப்பட்டு இதுவரை 6,773 முகாம்கள் நடத்தப்பட்டுள்ள நிலையில், எஞ்சிய 2,227 முகாம்களையும் இந்த ஆண்டு இறுதிக்குள் நடத்துவதென்றும்; இந்த முகாம்களுக்கு சிறப்பு மருத்துவர்கள் வந்து பொதுமக்களைப் பரிசோதனை செய்வதை உறுதி செய்வதென்றும்; ஊனமுற்றவர்களுக்கு முகாம்களிலேயே சான்றிதழ்கள் வழங்குவதென்றும்; குறிப்பிட்ட சில காலங்களில் பரவிடும் சில நோய்களைத் தடுப்பதற்கு எல்லாவித முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்வதென்றும்; டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் கிராம சுகாதார செவிலியர்களின் பரிந்துரையின் அடிப்படையில் வருமானச் சான்றிதழ் இன்றி காலதாமதத்தைத் தவிர்த்து நிதியுதவியை வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கிராமப் பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள கால்நடைப் பாதுகாப்புத் திட்டம் நடப்பாண்டிலும் தொடர்ந்து சிறப்பாக நடைபெற, மாவட்ட ஆட்சியர்கள் முகாம்கள் நடத்த தகுந்த கிராமங்களைக் கவனமாகத் தேர்வு செய்ய வேண்டுமென்றும்; முகாம்களுக்குத் தேவையான மருந்துகள் இருப்பில் உள்ளதா என்று சரிபார்க்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர்க்கும், பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சிறுபான்மையின மாணவ மாணவியர்க்கும் கல்வி உதவித் தொகை, பள்ளி மேற்படிப்பு உதவித் தொகை, இலவச பாடப் புத்தகங்கள், இலவச சீருடைகள், ப்ளஸ் 1

பயிலுவோருக்கு இலவச மிதிவண்டிகள் ஆகியவற்றை காலத்தே வழங்க உரிய நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

"அனைவருக்கும் கல்வி" திட்டத்தின் கீழ் மாவட்டங்களில் நடைபெறும் பள்ளி வகுப்பறைகள், கட்டடங்கள் உள்ளிட்ட கட்டுமானப் பணிகளைத் தரமாகவும், விரைவாகவும் நிறைவேற்றிட வேண்டுமென்றும்; செயல்வழிக் கற்றல் நடைபெறும் பள்ளிகளை மாவட்ட ஆட்சியர்கள் ஆய்வு செய்ய வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

சாலை, பாலங்கள் பராமரிப்புப் பணிகளைத் துரிதமாகவும், தரமாகவும் செய்வதை மாவட்ட ஆட்சியர்கள் கண்காணிக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. நில எடுப்புப் பணிகள் மற்றும் சாலை அகலப்படுத்தும் பணிகளில் காலதாமதம் தவிர்க்கப்படவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

அமைப்புச்சாரா தொழிலாளர்களுக்கான நல வாரியங்கள் நடைமுறைப்படுத்தி வரும் நலத் திட்டங்களை மாவட்ட ஆட்சியர்கள் காலமுறைப்படி மாவட்ட குழுக் கூட்டங்களில் ஆய்வு செய்வதென்றும்; ஒரே நல உதவியைப் பல்வேறு வாரியங்களில் வழங்குதல், ஒருவரைப் பல்வேறு வாரியங்களில் பதிவு செய்தல் போன்ற குறைபாடுகளைத் தவிர்ப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழ் ஆட்சி மொழிச் செயலாக்கத்தை மேலும் முனைப்புடன் நடைமுறைப்படுத்துவதென்றும்; பொது மக்கள் அரசின் திட்டங்களையும், ஆணைகளையும் அறியும் வண்ணம் பதிவு செய்யப்படும் அனைத்தையும் தமிழிலேயே அமைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையினை ஏற்று – வாய்ப்பு வசதியற்று திருமணம் ஆகாமலே ஐம்பது வயதை எட்டி – உழைத்து சம்பாதித்து வாழ்க்கை நடத்த இயலாத ஏழையெளிய மகளிருக்கு – முதியோர், விதவைகள், கணவனால் கை விடப்பட்ட பெண்களுக்கு வழங்குவதைப் போல – மாதந்தோறும் உதவித் தொகையாக 400 ரூபாய் வழங்கப்படும் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலேயே ஆணையிட்டார்.

★ ★ ★

**மாண்புமிகு முதலமைச்சர்**
**கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்**
**19, 20–6–2008 ஆகிய நாட்களில்**
**நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும்**
**காவல்துறை அதிகாரிகள் மாநாட்டின்**
**இறுதியில் ஆற்றிய உரை வருமாறு :**

இரண்டு நாட்களாக உங்களையெல்லாம் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்று – நீங்கள் வழங்கிய அரிய ஆலோசனைகள் – அரசின் சார்பாக நிறைவேற்றப்படுகின்ற வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவைகளைப் பற்றி நீங்கள் அளித்த ஆய்வுரைகள் – நடைபெற்றுள்ள பணிகள் இன்னும் எப்படியெல்லாம் அந்தப் பணிகள் நடைபெற வேண்டுமென்ற முறைகள் – இவைகள் அனைத்தையும் விரிவாக, விளக்கமாகப் பேசியிருக்கின்றோம். ஏதோ ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இடையிலே கூட இது போன்ற மாநாடுகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் கூடி நடத்துவதும் – அதிலே எடுக்கின்ற முடிவுகள், மாநாட்டுக் கூடத்தை விட்டு வெளியேறியதும் மறந்து போவதுமான ஒரு நிலை இருத்தல் ஆகாது என்பதை நான் ஒவ்வொரு முறையும் இந்த மாநாடு நடைபெறும்போதெல்லாம் வலியுறுத்தி நினைவுபடுத்தியிருக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் – காவல் துறை அதிகாரிகளை என்னுடைய ஆட்சிக் காலத்தில் ஒரு முறை, இரு முறை சந்தித்தவன் அல்ல, பலமுறை உங்களையெல்லாம் சந்தித்துக் கொண்டிருப்பவன். அதனால் தான் நாம் இன்றைக்கு தீர்மானிக்கின்றவைகளை – திட்டமிட்டவைகளை நிறைவேற்றிட வேண்டுமென்ற அக்கறையோடு இந்த நாமக்கல்லார் மாளிகையை விட்டு வெளியேற வேண்டுமென்றும் – அதன் பிறகு நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் தீட்டப்பட்டுள்ள வளர்ச்சித் திட்டங்களோடு ஒன்றிக் கலந்து ஓய்வின்றி உழைத்திட வேண்டுமென்பதும் – நம்முடைய இலட்சியங்களாக இருக்க வேண்டும்.

இந்த அரசு மிகச் சாதாரணமானவர்களால் – சாமான்ய மானவர்களால் நடத்தப்படும் அரசு என்பதால்; விவசாயிகளின் நலன், ஆசிரியர்களின் நலன், அரசு ஊழியர்களின் நலன், மகளிர் நலன், முதியோர் நலன், உடல்ஊனமுற்றோர் நலன், அமைப்புச் சாரா தொழிலாளர் நலன் ஏன், நரிக்குறவர் நலன், அரவாணிகள் நலன் என்றெல்லாம் எல்லா திசைகளிலும் கவனத்தைச் செலுத்தி அவர்களுடைய நல்வாழ்வுக்கான திட்டங்களைத் தீட்டுவதற்கு முற்படுகின்ற ஓர் அரசாக இருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். தமிழகத்தின் எல்லாத் திசைகளிலும் அரசு எவ்வளவு அக்கறையோடு நான் குறிப்பிட்ட இந்தப் பட்டியலிலே உள்ள மக்களை, பாட்டாளிகளை பரிவோடு கவனிக்கிறது என்பதைப் புரிந்து கொண்டிருக் கிறீர்கள்.

உங்களையெல்லாம் இங்கே அழைத்து – நாங்கள் இன்னின்ன திட்டங்களைச் செயல்படுத்த விரும்புகிறோம் என்று சொல்வது மாத்திரமல்ல –

அந்தத் திட்டங்கள் நேரடியாக ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டாரத்திலும் நீங்கள் எந்த மக்களோடு பழகிக் கொண்டிருக்கின்றீர்களோ – எந்த மக்களோடு இணைந்து வாழ்கிறீர்களோ – அந்த மக்கள் இந்தத் திட்டத்தின் பலனைத் துய்த்திட வேண்டும், அதற்கு நீங்கள் உழைத்திட வேண்டுமென்பதை எடுத்துச் சொல்லவே – வேண்டிக் கொள்ளவே உங்களையெல்லாம் இங்கே அழைத்து, சில கருத்துகளை வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது.

திட்டங்களைச் செயல்படுத்தி – அதன்மூலம் திட்டங்களின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றி – பலன்களை உரியவர்களுக்கு நேரடியாக வழங்கிடும் அரிய பொறுப்பை மாவட்ட ஆட்சித் தலைவர்களாகிய நீங்கள் ஏற்றிருக்கிறீர்கள். ஏற்று தொடர்ந்து நிறைவேற்றியும் வருகிறீர்கள் என்பதை நான் மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உள்ள நிறைய பொறுப்புகள் – வழங்கப்பட்டுள்ள புதிய பொறுப்புகள் அவைகளை அதிகாரங்கள் என்று கூடச் சொல்லலாம் – அந்த அதிகாரங்களை – அதிகாரத் தோரணையில் மக்கள்மீது செலுத்துவதில் மகிழ்ச்சி கொள்ளாமல் – அவற்றை மக்களுடைய வாழ்வைச் செம்மைப்படுத்திட, மக்களுக்குக் கைகொடுத்து உதவிட – பயன்படுத்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் மக்களாட்சியின் மாண்பு சாதாரண பொதுமக்களுக்கும் தெரியும். அவர்களால் அந்த மாண்பினை உணரவும் முடியும்.

ஆட்சி எனும் தேருக்கு அச்சாணியாகவும், சக்கரங்களாகவும் திகழ்பவர்கள் அதிகாரிகள்தான். அவர்கள் முழுமையாக இயங்காவிட்டால் மன நிறைவாக இயங்கா விட்டால், ஆட்சித் தேர் ஒரு அங்குலம் கூட நகராது என்பதை நான் மிக நன்றாக அறிவேன். என்னுடைய அரசியல் அனுபவத்திலும், ஆட்சி அனுபவத்திலும் இதை நான் மிகத் தெளிவாக உணர்ந்து கொண்டிருப்பவன். உங்களுடைய வாழ்க்கையில் மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பு என்பது மகத்தானது என்பதை நான் விளக்கிட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில், மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பை வகிக்கும் போதுதான் நேரடியாக மக்களுக்கு நன்மைகளைச் செய்து, அந்த நன்மைகளின் காரணமாக அந்த மக்கள் மன நிறைவடைவதைக் கண்டுகளித்திட முடியும்.

அன்னசத்திரம் ஆயிரம் கட்டுவதைக் காட்டிலும், ஆலயங்களை நிர்மாணிப்பதைக் காட்டிலும், ஓர் ஏழைக்கு எழுத்தறிவைப் புகட்டுவது உயர்ந்தது, புனிதமானது என்று மகாகவி பாரதியார் சொன்னார். அதைப்போல, ஒவ்வொரு நாளும் ஒரு ஏழைக்காவது உருப்படியான ஓர் உதவியைச் செய்திட வேண்டும் என்ற இலக்கை உங்களுக்கு நீங்களே நிர்ணயம் செய்துகொண்டால் அது எவ்வளவு நலன் பயக்கும் என்பதை நான் சொல்லி, புதிதாக விளக்க வேண்டிய அவசியமில்லை.

30.7.2007 மற்றும் 31.7.2007 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் மொத்தம் 27 முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 18 முடிவுகள் நிறைவேற்றப்பட்டு; 9 முடிவுகள் செயலாக்கத்தில் இருந்து வருவதாக எனக்குப் புள்ளி விவரம் தரப்பட்டுள்ளது. நான் இந்த 18 முடிவுகள் நிறைவேற்றப்பட்டதைப் பற்றி மகிழ்ச்சியடையவில்லை, இன்னும் 9 முடிவுகள் செயலாக்கத்தில் இருக்கிறதே, நிறைவேற்றப்படாமல் என்ற கவலை – அந்த 18 முடிவுகள் நிறைவேற்றப்பட்டதால் ஏற்படுகின்ற மகிழ்ச்சியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது என்பதை சொல்லாமல் இருக்க முடியாது.

இந்த மாநாட்டிலும் பல முடிவுகள் – நீங்கள் வழங்கிய அரிய ஆலோசனைகளுக்குப் பின்னர் – மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த முடிவுகளையும் எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சட்டம்–ஒழுங்கைப் பாதுகாப்பதில் மாவட்ட ஆட்சியர்களும், காவல் கண்காணிப்பாளர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வரவேண்டும். செயல்படுவது இப்போது பாராட்டுக்குரியதாகத் திகழ்கிறது என்பதை நான் மறைப்பதற்கில்லை. இந்த ஒருங்கிணைப்பு மேலும் வலுப்பட வேண்டும். இருவருக்குமிடையே உள்ள தகவல் பரிமாற்றம் தங்குதடை யின்றி நடைபெறுதல் வேண்டும்.

அன்றாடம் நடக்கும் ஒவ்வொரு சாலை விபத்தும் என்னைப் பெரிதும் பாதிக்கின்ற காரணத்தினால் சாலை விபத்துகளைக் குறைப்பதிலும், அவற்றைத் தவிர்ப்பதிலும் தனிக்கவனமும் தொடர் முயற்சியும் தேவை என்பதை நேற்றைக்கு நீண்ட நேரம் உங்களிடம் விளக்கியிருக்கிறேன். வேண்டுகோளாகவும் வைத்திருக்கிறேன். ஆங்காங்கு ஒவ்வொரு பகுதியிலும் மாவட்டத்திலே உள்ள அதிகாரிகள், பொறுப்பு வாய்ந்தவர்கள், இவர்களையெல்லாம் அழைத்து, அங்கே எப்படியெல்லாம் சாலைகளில் விபத்துகள் ஏற்படாமல் தவிர்க்க முடியும், மக்களுடைய உயிரைப் பாதுகாக்க முடியும் என்பதற்கேற்ப பணிகளை நிறைவேற்றவும், அதற்கு அரசின் துணை, அதிகாரிகளின் துணை வேண்டுமானால், எப்படிப்பட்ட துணை என்பதைக் கேட்டுப் பெறவும் நீங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரையும் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமூக விரோதிகள், அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கடத்துபவர்கள், கள்ளச் சந்தைக்காரார்கள், சட்டம்–ஒழுங்கைக் கெடுப்பவர்கள் யாராக இருந்தாலும் பாரபட்சமின்றி துணிச்சலோடு நடவடிக்கை மேற்கொண்டு, அத்தகையவர்கள் கொட்டத்தை அடக்கியே தீர வேண்டும்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம், உழவர் சந்தைத் திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் திட்டம், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர்க்கான திட்டங்கள் மற்றும் நலிந்த பிரிவினர்க்கான நலத் திட்டங்கள் அனைத்திலும் மாவட்ட ஆட்சியர்கள் மிகுந்த ஈடுபாடு காட்டி, அந்தத் திட்டங்கள் முழுமையாக வெற்றி பெறுவதற்கு, சலியாது உழைத்திட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இத்தகைய பணிகளைச் செய்வதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குள் ஆரோக்கியமான போட்டி மனப்பான்மை வேண்டும். இதை நீங்கள் கோடிட்டு உங்கள் உள்ளங்களில் பதிய வைத்துக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

தினமும் பத்திரிகைகளைப் படிப்பதிலும்; மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி வெளிவரும் செய்திகளைப் படித்து – நடவடிக்கை எடுக்க வேண்டிய செய்திகள் இருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்து – மேற்கொண்ட நடவடிக்கை பற்றிய குறிப்பினைப் பத்திரிகைகளுக்கு அறிவிப்பதிலும் – மாவட்ட ஆட்சியர்கள் தொடர்ந்து தங்களுடைய பணிகளை ஆற்ற வேண்டும்.

காலையில் பேசிய மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டார் – அங்கே மதுரை மாவட்டத்தில் வைக்கப்பட்ட தீண்டாமை சுவர் காரணமாக எழுந்த பிரச்சினை – இரு சாராரிடையே மோதல் உருவாகுமோ என்ற கலக்கம், அச்சம், பீதி அதனால் ஏற்பட்ட பதற்றம் – இந்தச் சூழலில் என்ன செய்வது என்று அவரும் திகைத்துக் கொண்டிருந்தபோது நான் எத்தனை முறை அவரோடு தொடர்பு கொண்டேன் தொலைபேசியிலே என்பதும் – நான் தொலைபேசியிலே தொடர்பு கொண்ட நேரத்தில் எல்லாம் நான் கூறிய அறிவுரைகளையேற்று அவர் அங்கே பணியாற்றியதும், அதன் காரணமாக அங்கே ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதும் நீங்கள் எல்லாம் அறியாத ஒன்றல்ல.

அப்படி ஒவ்வொரு பிரச்சினை உருவாகின்ற நேரத்திலும் அதை உடனடியாகத் தெரிவிக்க வேண்டியவர்களுக்கு தெரிவித்து – அதை உடனடியாக சுமுகமாகத் தீர்த்து வைக்கின்ற அந்தக் காரியத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேலும் மேலும் அக்கறை காட்டவேண்டும், தொடர்ந்து அக்கறை காட்டவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ள கருத்துகள் எல்லாம் தலைமைச் செயலாளர் மூலமாக – முடிவாக இதைக் குறித்து என்ன செய்யலாம், எப்படி அணுகலாம் என்ற வகையிலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன, ஒவ்வொரு துறையின் செயலாளரும், அதைப் பதிவு செய்திருக்கிறார்கள், அவைகளை எல்லாம் அமைச்சர்கள் பார்த்து – நானும் பார்த்து ஏற்ற வகையிலே நடவடிக்கைகள் எடுக்கப் படும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்து கொண்ட இந்தக் கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தின் சார்பாகச் சொல்லப்பட்ட அந்தக் கருத்து அலட்சியப்படுத்தக் கூடியதல்ல. அந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவர் – பெண்களுக்கு மாதந்தோறும் தரப்படுகின்ற உதவித்தொகை இவர்களுக்கும் தரப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தார் – அந்தக் கோரிக்கை உங்கள் முன்னிலையிலேதான் ஆராயப்பட்டது. அது பற்றி நான் நிதித்துறை செயலாளரை அழைத்து, விளக்கத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டு, அதை ஓர் அறிவிப்பாக செய்யவுள்ளேன். இந்தக் கூட்டத்திலும் ஏதோ ஓர் அறிவிப்பு வந்தது என்று இல்லாமல் ஒரு முக்கியமான அறிவிப்பு, சமுதாயத்திலே ஒரு பாகமாக இருக்கின்ற பெண்களைப் பற்றிய அறிவிப்பாக அது அமைந்திருக்கின்றது. அதைப் படிக்கின்றேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரையினை யேற்று – வாய்ப்பு வசதியற்று திருமணம் ஆகாமலே ஐம்பது வயதை எட்டி – உழைத்துச் சம்பாதித்து வாழ்க்கை நடத்த இயலாத ஏழையெளிய மகளிருக்கு முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு இப்போது வழங்கப்படுவதைப் போல – இவர்களுக்கும் மாதந்தோறும் உதவித் தொகையாக 400 ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவிப்பை இங்கே நான் தெரிவித்து இரண்டு நாட்கள் இந்தச் சிறப்பான மாநாட்டிலே கலந்து கொண்டு நாம் ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றி ஆய்வு செய்து நல்ல முடிவுகளை எடுத்து ஒத்துழைத்த உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பார்ந்த இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்து இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

★ ★ ★

# இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழக அரசு ஊழியர்களின் நலனுக்காகப் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்
தொடங்கி வைத்தார்.



தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கத்தின் வெள்ளி விழா 15.7.2007 அன்று நடைபெற்ற பொழுது தமிழ்நாடு அரசு அலுவலர்களின் நலனுக்காக, ஒவ்வொரு நான்கு ஆண்டு காலத்திற்கும் ரூபாய் இரண்டு இலட்சம் வரை மருத்துவ சிகிச்சைக்காக நிதியுதவி வழங்க வகைசெய்யும் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஒன்று அரசு அலுவலர்கள் மற்றும் அரசின் பங்களிப்புடன் காப்பீட்டுக் கழகங்களுடன் இணைந்து தமிழக அரசால் செயல்படுத்தப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து அரசு அலுவலர்கள் மட்டுமன்றி அரசுப் பொதுத் துறை நிறுவனங்கள், சட்டப்படியான வாரியங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் பணிபுரிவோரும் பயனடையும் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உரிய அரசாணைகள் வெளியிடப் பட்டுள்ளன.

அரசுப் பணியாளரின் கணவர் அல்லது மனைவி, மகன், மகள் எனில் அவர்கள் வேலையில் சேரும் வரையில், அல்லது திருமணம் ஆகும் வரையில் அல்லது 25 வயது நிறைவடையும் வரையில்; திருமணமாகாத அரசுப் பணியாளர் எனில் அவர்களுக்குத் திருமணமாகும்வரை அவர்களுடைய பெற்றோர் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற தகுதி படைத்தவர்கள் ஆவர்.

இத்திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேரும் பணியாளர்கள் சிகிச்சை பெறும்போது, அவர்களுக்கு மருந்துச் செலவினங்கள்; லெப்ராஸ்கோபிக் அல்லது திறந்த அறுவைச் சிகிச்சைச் செலவினங்கள்; மருத்துவர்கள் மற்றும் உதவியாளர் தொடர்பான கட்டணங்கள்; தங்கும் அறைக் கட்டணம்; பரிசோதனைகள்; மற்றும் உணவுக் கட்டணம் ஆகியவற்றைப் பெறுவர்.

இந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்புக் கால அளவிற்கு இரண்டு இலட்சம் ரூபாய் வரை அரசுப் பணியாளர் தனக்கு மட்டுமோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களுக்கும் சேர்த்தோ பணச் செலவின்றிச் சிகிச்சைகள் பெறலாம்.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு அரசுப் பணியாளருக்கும் மாதம் 25 ரூபாய் வீதம் ஆண்டுக்கு 300 ரூபாய் என அவரது 2008 ஜூன் மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஒரு பணியாளருக்கு ஆண்டுக் காப்பீட்டுத் தொகையாக 495 ரூபாயும், 12.5 சதவீதம் சேவை வரியும் காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டும். இத்தொகையில் அரசுப் பணியாளர் தனது பங்காக மாதம் 25 ரூபாய் வீதம் 12 மாதங்களுக்குச் செலுத்தும் 300 ரூபாய் போக, மீதத் தொகையாகிய 195 ரூபாயுடன்,12.5 சதவீத சேவை வரி முழுவதையும் தமிழக அரசே அரசுப் பணியாளர்களுக்காகக் காப்பீட்டு நிறுவனத்திற்கு வழங்கும்.

இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள ஏறத்தாழ 300 மருத்துவமனைகளில் 52 வகையான நோய்களுக்குச் சிகிச்சைகளும், அறுவைச் சிகிச்சைகளும் செய்து கொள்ள முடியும்.

இத்திட்டம் தொடர்பாக அரசுப் பணியாளர்களுக்கு ஏதேனும் குறைபாடுகளோ சிரமங்களோ நேர்ந்தால் அவற்றைக் களைந்திட உதவுவதற்காக மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் அமைக்கப்பட்டுள்ள குழுக்களுடன் உயர்நிலைக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக விதிமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டுச் சென்னையைச் சேர்ந்த "ஸ்டார் ஹெல்த் ஆண்டு அலைடு இன்சூரன்ஸ் நிறுவனம்" தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இப்புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் அனைத்து வகையிலும் சிறந்த முறையில் பயனளிக்கக் கூடியதாக இருப்பதைக் கருத்தில் கொண்டு இதுவரை ஏறத்தாழ 8 இலட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் மற்றும் வாரியங்களில் பணிபுரிவோர் இத்திட்டத்தில் பங்கேற்க விருப்பம் தெரிவித்துத் தேவையான விவரங்களையும், புகைப்படங்களையும் அளித்துள்ளனர்.

இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழகத்தில் செயல்படுத்தப்படவுள்ளதும், அரசுப் பணியாளர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளதுமான இத்திட்டத்திற்கான அடையாள அட்டைகளைத் தலைமைச் செயலகத்தில் 10 அரசுப் பணியாளர்களுக்கு வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இத்திட்டத்தை 11.6.2008 அன்று தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., கருவூலக் கணக்குத் துறை இயக்குநர் திரு.எம். முத்தையா கலைவாணன், இ.ஆ.ப., மற்றும் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திருவாளர்கள் ஸ்டார் மருத்துவக் காப்பீட்டு நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ஜெகநாதன், ஐ.சி.ஐ.சி.ஐ.லம்பார்டு காப்பீட்டு நிறுவனத்தின் பிரதிநிதி, இத்திட்டத்தின் இணைக் காப்பீட்டு நிறுவனங்களாகப் (Co-insurers) பங்கேற்கும் பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்களான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனம், ஓரியன்டல் காப்பீட்டு நிறுவனம், நேஷனல் காப்பீட்டு நிறுவனம், நியூ இந்தியா காப்பீட்டு நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

* * *

# தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியம் அமைத்து அரசு ஆணை

2008-ஆம் ஆண்டின் பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் ஏழாவது கூட்டத்தொடரில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் உரையில் அரவாணிகளுக்கான புதிய நல வாரியம் ஒன்று அமைக்கப்படும் என மேதகு ஆளுநர் அவர்கள் அறிவித்ததன் அடிப்படையில், அரவாணிகளுக்கு முழுமையான சமூகப் பாதுகாப்பு அளிக்கத் தேவையான திட்டங்களை வகுத்துச் சிறப்பான முறையில் செயல்படுத்த அரவாணிகள் நல வாரியம் அமைத்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

அரவாணிகள் நல வாரிய அலுவல்சார் உறுப்பினர்களாக மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறைச் செயலர், சமூக நலத்துறை ஆணையர், நிதித்துறைச் செயலர், சட்டத்துறைச் செயலர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத்துறை இயக்குநர், கல்லூரிக் கல்வித்துறை இயக்குநர், மருத்துவக் கல்வித்துறை இயக்குநர் மற்றும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் ஆகிய 11 உறுப்பினர்கள் அலுவல்சார் உறுப்பினர்களாகவும் எஸ்.நூரி-சென்னை, பிரியா பாபு-சென்னை, A.J. ஹரிஹரன்-சென்னை, ஆர். ஜீவா-சென்னை, வி.சலிமா-விழுப்புரம், எஸ்.கே. கங்கா-வேலூர், மோகனா-திருச்சி, எஸ். காதர்மைதீன் என்ற கனிமொழி-மதுரை ஆகிய 8 உறுப்பினர்கள் அலுவல்சாரா உறுப்பினர்களாகவும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

அரவாணிகள் நல வாரியத்தின் முதல் கட்ட கூட்டமானது, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. பெ. கீதாஜீவன் அவர்களின் தலைமையில் 26.5.2008 அன்று சமூக நல ஆணையரகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அரவாணிகள் பற்றிய கணக்கெடுப்பு, அடையாள அட்டை வழங்குவது, இவர்களுக்கென கணினி வகுப்புகள், நூலகம் மற்றும் கவுன்சிலிங் அடங்கிய இடைக்காலத் தங்கும் மையம் அமைத்துக் கொடுப்பது மற்றும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அந்தந்த மாவட்டங்களிலுள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அரவாணியர் குறை தீர்க்கும் நாள் நடத்துவது போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக அரவாணிகளின் நலனுக்காகச் செயல்பட்டுவரும் தொண்டு நிறுவனங்கள் அந்தந்த மாவட்டங்களில் தங்களுடைய நிறுவனங்களைப் பதிவு செய்து கொள்ளும் வகையில் பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள ஏதுவாக படிவங்கள் மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, அரவாணிகளின் நலனுக்காகச் செயல்பட்டுவரும் சங்கங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தங்களுடைய சங்கங்களைப் பதிவு செய்து கொள்வதற்காக பதிவுச் சான்றிதழ்களைப் பெற அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட சமூக நல அலுவலர்களைத் தொடர்பு கொள்ள இதன்மூலம் அறிவுறுத்தப்படுகிறார்கள். ❖

# நீதியைக் காப்பாற்றுகின்ற வகையில் நீதிமன்றங்களுக்குத் துணையிருப்போம்!

தஞ்சாவூரில் 24.6.2008 அன்று நடைபெற்ற தஞ்சை மாவட்ட நீதிமன்றத்தின் 200–ஆவது ஆண்டு விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–




இன்று தஞ்சை மாவட்ட நீதிமன்ற 200ஆம் ஆண்டு விழாக் கொண்டாடுகின்ற நேரத்தில் நானும் கலந்து கொண்டு இந்த மேடையில் வாழ்த்துகளைப் பெறவும் வழங்கவும் வாய்ப்புப் பெற்றமைக்காகப் பெரும் மகிழ்ச்சி கொள்கின்றேன். பெருமிதம் அடைகின்றேன். இந்த விழா இவ்வளவு சீரும், சிறப்புமாக நடைபெறுவதற்கு வித்திட்டு காரணகர்த்தாக்களாக விளங்குகின்ற தஞ்சை வழக்கறிஞர் சங்கத்து நண்பர்களுக்கெல்லாம் என்னுடைய பாராட்டுக்களை, நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஊக்கப்படுத்தும் மாமருந்து**

நம்முடைய இந்திய உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மாண்புமிகு கே.ஜி.பாலகிருஷ்ணன் அவர்கள் நேற்றைய தினம் மதுரையிலே ஆற்றிய உரையில் நீதித்துறையிலே தமிழக அரசு, தி.மு.கழக அரசு காட்டுகின்ற அக்கறையையும் செலுத்துகின்ற ஆதரவையும் கோடிட்டுக்காட்டி பாராட்டி தம்பி துரைமுருகன் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். நான் அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அது எங்களை ஊக்கப்படுத்துகின்ற மாமருந்தாக அமையும் என்பதை உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அவர்இன்றைக்கு உச்சநீதிமன்றத்தினுடைய நீதிபதியாக வீற்றிருப்பது நாமெல்லாம் மகிழத்தக்க ஒன்று. நாமெல்லாம் உணர்ந்து பாராட்டத்தக்க ஒன்று. நம்மிலே ஒருவர் ஏன், நாமே அந்த உருவத்திலே அங்கே அமர்ந்திருப்பதைப் போன்ற ஒரு உணர்வை நமக்கெல்லாம் ஏற்படுத்துகின்ற நிலையாகும்.




நம்முடைய தம்பி துரைமுருகன் பேசும்போது எப்படியும் உச்சநீதிமன்ற நீதிபதியாக ஆகிவிடலாம் என்று சொன்னார். அப்படி அல்ல. எப்படியும் ஆனவரிலே ஒருவர் அல்ல அவர். இப்படித்தான் ஆகவேண்டும் என்ற நிலைமையிலே உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருப்பவர் அவர். அவருடைய காலத்திலேதான் இந்தியாவை எதிர்காலத்திலே இருளடைந்து விடுமோ என்று ஏக்கத்தோடு பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த நமக்கெல்லாம் ஆறுதலாக 27 சதவிகிதம் இடஒதுக்கீட்டில் வெற்றியினை நாம் பெற முடிந்தது என்றால் தலைமுறை தலைமுறைக்கும் ஏன், இந்திய நாட்டு வரலாற்றில், தமிழ்நாட்டு. வரலாற்றில், சமுகநீதி வரலாற்றில் இடம்பெறத்தக்க ஒரு தீர்ப்பு, அந்தத் தீர்ப்பை அவர்கள் நமக்கு வழங்கி இருக்கின்றார்கள். நமக்கு வழங்கப்பட்ட தீர்ப்பல்ல, சமுதாயத்திற்கு–ஏழை எளியோருக்கு–அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட அடங்கிக் கிடந்த மக்களுக்கு எழு விழி என்கிற உற்சாகத்தைத் தரக்கூடியதன் மூலமாக, அந்தத் தீர்ப்புக்கு மூலகர்த்தாவாக விளங்குகின்ற நம்முடைய மாண்புமிகு தலைமை நீதிபதி திரு.கே.ஜி.பாலகிருஷ்ணன் அவர்களை இந்த நீதிமன்றத்தின் 200ஆவது ஆண்டு விழாவில் அந்த விழா சார்பாக நான் வாழ்த்துகின்றேன். நன்றி கூறுகின்றேன். இந்தக் காலத் தமிழர்கள் சார்பாக மாத்திரமல்ல எதிர்காலத் தமிழர்கள் சார்பாகவும் என்னுடைய பேரன், பேத்திகளின் சார்பாகவும் நான் அவரை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால் ஒரு சமுதாய மாற்றத்துக்காக சமுதாய விழிப்புக்காக நடைபெற்றிருக்கின்ற ஒரு பெரிய காரியம் அது. அந்தக் காரியத்தில் அவர்கள், தான் யார் என்பதை எத்தகைய நீதியை நிலைநாட்டுவார் என்பதை விளக்கிய பெருமைக்குரியவர் அவர். நீதிபதிகளைக் குறிப்பாக நீதிமன்றங்களைத் தமிழக அரசு நல்ல முறையிலே உற்சாகப்படுத்துகிறது என்பதை அவர்கள் நேற்று கோடிட்டுக்காட்டி நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் கட்டிக் கொடுப்பது மாத்திரம் நீதியைக் காப்பாற்றியது ஆகாது. நேர்மையான நீதியும் அங்கே வழங்கப்பட வேண்டும் என்று ஒரு வாக்கியத்தை அவர் சொல்லியிருக்கிறார். அதை "இந்து" பத்திரிகையிலே இன்றைக்குப் படித்துப் பார்த்தேன். கட்டடங்களை மாத்திரமல்ல; அந்தக் கட்டடத்துக் குள்ளேயிருந்து வெளி வருகின்ற தீர்ப்புகள் எந்த அளவிற்கு நீதியின் சாயலுடையதாக நீதியைக் காப்பாற்றுவதாக நீதியை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் அவர் எடுத்துச் சொல்லியிருக்கின்றார். அவர்களுக்குத் தெரியும்; எங்களுடைய தி.மு.கழக ஆட்சியே 50, 60 ஆண்டுகளுக்குப் பின்னோக்கிச் சென்றால் நீதிக்கட்சியின் ஆட்சிதான். நீதிக்கட்சியாகத் தொடங்கியதுதான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகமாகப் பரிணமித்திருக்கிறது என்பதை அவர்களுக்கு நான் நினைவுபடுத்துகின்றேன். நீதிக்கட்சியாக இருந்த இந்த இயக்கத்தை தந்தை பெரியார் அவர்களும், பேறிஞர் அண்ணா அவர்களும் திராவிட இயக்கமாக மாற்றிய பெருமையைச் சேர்த்தார்கள். எனவே நீதிக்குப் புறம்பாக நாங்கள் நடைபோட மாட்டோம். நீதிக்குச் சிறு காயம் ஏற்பட்டாலும் அதற்கு ஆறுதல் கூறுகின்ற வகையில் நீதியைக் காப்பாற்றுகின்ற வகையில், நீதியைப் பாதுகாக்கின்ற வகையில் நீதிபதிகளுக்கு, நீதிமன்றங்களுக்கு எப்படி நாங்கள் துணையிருக்க வேண்டுமோ அப்படித் துணையிருப்போம் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

### கொடுப்போம் என்ற நம்பிக்கை

நேற்றைக்கு மதுரையிலே இன்னும்கூட நீதிமன்றத்திலே உள்ளவர்களுக்கு நீதிபதிகளுக்கு இடங்கள் ஒதுக்குவதில் அரசு சார்பில் பணமும் ஒதுக்க வேண்டும் என்று நேற்றைக்குக்கூட கேட்டதாகத் தம்பி துரைமுருகன் என்னிடத்திலே ஒரு சீட்டு எழுதிக்காட்டினார். அவர்கள் கேட்பதற்குக் காரணம் நாம் கொடுத்துக்கொண்டே இருக்கிறோம். மேலும் கொடுப்போம் என்ற நம்பிக்கையோடுதான் கேட்டிருக்கின்றார்கள். இப்போது நான் கொடுக்க




இயலவில்லை என்று சொன்னால் நம்மீது வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கு ஊனம் ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால் நான் துரைமுருகன் அவர்களிடத்திலே சொன்னேன். நிச்சயமாக அதை அளிக்கலாம். நிச்சயமாக நாம் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றலாம் என்று குறிப்பிட்டிருக்கிறேன். அதை விழாவிலே சொல்ல சந்தர்ப்பம் இல்லாவிட்டாலும் இந்த விழாவிலே உச்சநீதிமன்ற நீதிபதி அவர்களிடத்திலே நான் இப்போது சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் இங்கே உரையாற்றியவர்கள் எல்லாம் எடுத்துக் காட்டியதைப் போல் 200 ஆண்டுகாலமாகச் சிறப்போடு தஞ்சைத் தரணியிலே விளங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே நான் பெருமையடைகிறேன். காரணம், இங்கே சிலபேர் தங்களை மண்ணின் மைந்தர்கள் என்று சொல்லிக் கொண்டார்கள். மண்ணின் மைந்தன் என்ற முறையில் தஞ்சைத் தரணியிலே ஒரு நீதிமன்றம் 200 ஆண்டு காலமாகத் தழைத்தோங்கி இருக்கிறது என்பதும், அந்த நீதிமன்ற விழாவிலே நான் கலந்து கொள்கின்ற வாய்ப்பு எனக்கு ஏற்பட்டிருக்கின்றது என்பதும் சாதாரணமானதல்ல.

**அறங்கூறு அவையம்**

தஞ்சாவூரில் பொற்கால ஆட்சி படைத்தவன் இராஜராஜசோழன். அவன் ஆட்சி புரிந்த தஞ்சைத் தரணியில் நாம் நீதித்துறை தொடர்பான விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். தமிழ் வேந்தர்கள் நாட்டைப் பாதுகாக்கும் பணிகளிலும், மக்களின் நல்வாழ்வைப் போற்றுகின்ற பணிகளிலும் மிகுந்த கவனம் செலுத்தி வந்தார்கள் என்று வரலாறு கூறுகின்றது. மக்களிடையே வழக்கு ஏற்பட்டாலும், பிரச்சினைகள் உருவானாலும், சிறு சிறு போராட்டங்கள் ஏற்பட்டாலும் அப்போதெல்லாம் பழந்தமிழகத்தில் அதை விசாரித்து நீதி வழங்குகின்ற இடத்திற்கு பழந்தமிழர்களுடைய காலத்திலே பெயரே "அறங்கூறு அவையம்" என்பதுதான், நீதிமன்றம் என்றால் ஒரு பொதுப் பெயர். அதை அன்றைக்குத் தமிழன் அறங்கூறு அவையம் என்று அழைத்தான். அதை நீங்கள் உன்னிப்பாகக் கவனித்தால் இரு சாராருக்கும் தேவையான அறங்கூறும் மனப்பான்மை–அதை விளக்குவதுதான் அந்தப் பெயர். எதிரிக்காக வாதாடுகின்றவர்களானாலும் சரி, அல்லது அரசுத் தரப்பிலேஉள்ளவர்களுக்காக வாதாடுகின்றவர் களானாலும் சரி, அந்த வழக்கறிஞர்கள் அறங்கூறு அவையத்திலிருக்கிறோம்–அறங்கூறுபவர்களாக இருக்கவேண்டும் என்ற அந்தத் தன்மையைக் காட்டுகின்ற வகையிலேதான் அந்தக் காலத்திலே நீதிமன்றங்களிலே அறங்கூறு அவையம் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. சங்க இலக்கியங்களில் புறநானூறு போன்ற இலக்கியங்களில் கவின்மிகு புலவர்கள் "மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து அறம் நின்று நிலையிற்று" என்றும் (இது புறநானூறு) "மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து அறங்கெட அறியா தாங்கு" என்றும் (இது நற்றிணை) "ஆரங்கண்ணி அடுபோர்ச் சோழன் அறங்கெழு நல்லவை உறந்தை" என்றும் (இது அகநானூறு) சொல்லப் பட்டிருக்கின்றன. சோழர் காலத்திலே உறையூரிலே இருந்த அறங்கூறு அவையத்தின் மூலம் அறங்கெடாமல் நீதி கெடாமல் நியாயங்கள் பாதிக்கப்படாமல் நிலைநாட்டப்பட்டது என்பதை இந்தச் செய்யுள் வரிகள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. அப்படிப்பட்ட தஞ்சைத்திருநகரில் சோழமண்டலத்தில் 8.10.1807இல் தொடங்கப்பட்ட மாவட்ட நீதிமன்றம் 200 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட நீதிமன்றம். இங்கே சிலர் எடுத்துக்காட்டியதைப்போல 141 நீதிபதிகள் அமர்ந்து நீதி வழங்கியிருக்கின்றார்கள். அப்படி நீதி வழங்கிய 141 பேரில் எனக்கு நீதி வழங்கிய ஒருவரும் உண்டு. இங்கே நான் 1962ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றபோது அந்த வெற்றி செல்லாது என்று எதிர்தரப்பிலே இருந்து வழக்குப் போட்டபோது, அது செல்லும் என்று தீர்ப்பளித்த நீதிமன்றமும் தஞ்சை நீதிமன்றம்தான் என்பதை நான் மகிழ்ச்சியோடு இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

கீழ்வெண்மணி கிராமத்தில் உயிரோடு 30பேர், ஆதிதிராவிட மக்கள் எரிக்கப்பட்டார்கள். அப்படி அந்தச் சமுதாயத்தைச் சார்ந்த கண்மணிகள் கீழ்வெண்மணியிலே பிறந்தவர்கள், அதற்காக ஒரு விசாரணை நடைபெற்றபோது எரியுண்ட அந்தத் தோழர்களுக்காக அந்தப் பழங்குடி மக்களுக்காக அரசின் சார்பில் நடத்தப்பட்ட அந்தவழக்கில், குற்றவாளிகளுக்கெல்லாம் கடும் தண்டனை



விதிக்கப்பட்டதும், அதிலே மேல்முறையீடு செய்யப்பட்டும் கூட அவர்கள் தப்பிக்க முடியவில்லை என்பதும் தஞ்சையிலே வழங்கப்பட்ட அந்த நீதிமன்றத் தீர்ப்புக்குரிய பெருமையாகும் என்பதை நான் கம்பீரத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**நாகரிகமான அரசியல்**

ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன். இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கின்ற நான், 1978ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, தஞ்சை நீதிமன்றத்தினுடைய வழக்கறிஞர்கள் சங்கம் என்னை அழைத்து ஒரு வரவேற்பு விழா நடத்தியது. வழக்கறிஞர் சங்கத்திற்கு தலைவர் யார் தெரியுமா? கோபால் ஐயர்—வரவேற்புரையாற்றியவர் யார் தெரியுமா? பாலசுப்பிரமணிய ஐயர். கோபால ஐயர் தலைமையில் பாலசுப்பிரமணிய ஐயர் வரவேற்க எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நான் இங்கே பாராட்டப்பட்டேன். ஒரு படத்தைத் திறந்து வைத்தேன். என்ன படம் தெரியுமா? தந்தை பெரியாருடைய படம். ஒரு ஐயர் தலைமை வகிக்க, ஒரு ஐயர் வரவேற்க, பெரியாருடைய படத்தை இங்கே நான் திறந்து வைத்தேன் என்று சொன்னால் தஞ்சாவூர் எவ்வளவு நாகரிகமான அரசியலுக்கு, கண்ணியமான அரசியலுக்கு, பண்பாட்டு அரசியலுக்குப் பெயர் பெற்ற இடம் என்பதை நான் சொல்லி யாருக்கும் விளங்க வேண்டிய அவசியமில்லை. அத்தகைய தஞ்சையம்பதியில் இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த விழாவிலே நம்முடைய மாண்பமை உச்சநீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி அவர்களும், மற்ற நீதியரசர்களும் கலந்து கொண்டிருப்பதும், அதிலும் குறிப்பாக நம்முடைய முன்னாள் நீதிபதி, நீதியரசர் ஏ.ஆர்.லட்சுமணன் அவர்கள் என்னைச் சேக்கிழாரோடு ஒப்பிட்டதும், நம்முடைய நீதியரசர் சதாசிவம் அவர்கள் அதைவிடப் பன்மடங்கு என்னைப் பாராட்டி நான் கூறிய வாக்கியங்களை இளைய தலைமுறை எப்படிப் பின்பற்ற வேண்டும் என்று அறிவுரைத்ததும் நான் உள்ளபடியே நன்றியோடு பாராட்டக்கூடிய விஷயங்களாகும் என்பதைத் தெரிவித்து, இந்த அளவிற்கு என்னிடத்திலே மதிப்பு வைத்திருக்கின்ற, மரியாதை வைத்திருக்கின்ற, அன்பு வைத்திருக்கின்ற நீதியரசர்களுக்கும் மற்றும் வழக்கறிஞர் பெருமக்களுக்கும், தஞ்சைப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தை, வாழ்த்துகளைத் தெரிவித்து வாழ்க நீதி! வெல்க நீதி! என்று கூறி இந்த அளவோடு என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன். ★

[illegible]

[illegible] 14.07.2008 [illegible]

[illegible] **டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி** [illegible]



[illegible]

இந்திய சுதந்திர தின வெள்ளி விழாக் கொண்டாட்டத்தையொட்டி, 5.9.1972 அன்று, தூத்துக்குடியில் நடைபெற்ற கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனாரின் சிலை திறப்பு விழாவில் கலந்து கொண்ட அப்போதைய பிரதமர் இந்திராகாந்தி அவர்களிடம், சேதுசமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்னும் கோரிக்கையை வைத்தேன். அத்துடன், தூத்துக்குடி துறைமுகத்திற்கு வ.உ. சிதம்பரனார் அவர்களின் பெயர் சூட்டப்பட வேண்டுமென்றும் தமிழக அரசின் சார்பில் பிரதமர் இந்திரா காந்தி அவர்களைக் கேட்டுக் கொண்டேன்.

அடுத்து உரையாற்றிய பிரதமர் இந்திராகாந்தி அவர்கள், தூத்துக்குடி துறைமுகக் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து, முதல் கப்பல் வந்து நிற்கும் இடம் கட்டி முடிக்கப்பட்டது, அந்த இடத்திற்கு வ.உ.சி.யின் பெயர் வைக்கப்படும் என்று அறிவித்து நான் விடுத்த கோரிக்கையை உடனடியாக ஏற்றுக் கொண்டார்கள்.

தொடர்ந்து, தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தியதன் பயனாகப் படிப்படியாக வளர்ந்த தூத்துக்குடி துறைமுகம், 11.7.1974 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, இந்தியாவின் பெரிய துறைமுகங்களில் தூத்துக்குடி துறைமுகம் பத்தாவது பெரிய துறைமுகமாக அறிவிக்கப்பட்டது.

வ.உ.சி. சிலை திறப்பு விழாவில் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் தூத்துக்குடி துறைமுகத்தில் கப்பல் வந்து நிற்குமிடத்திற்கு சிதம்பரனார் பெயர் சூட்டப்படும் என அறிவித்ததற்கு ஏற்ப, 2.12.1975இல் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட இரண்டு கப்பல் தளங்களுக்கும், 31.12.1976 அன்று கட்டி முடிக்கப்பட்ட மேலும் இரண்டு கப்பல் தளங்களுக்குமாக நான்கு கப்பல் தளங்களுக்கு வ.உ.சி. அவர்களின் பெயர் சூட்டப்பட்டு, அவை செயல்பட்டு வருகின்றன.

அதன்பின்னர் கட்டப்பட்ட புதிய சரக்குத் தளங்களுடன் இதுவரை மொத்தம் 8 கப்பல் தளங்களைக் கொண்டுள்ள இத்துறைமுகத்தில் தற்பொழுது 9ஆவது சரக்குத் தளம் அமைக்கப்பட்டு, 14.7.2008 அன்று திறந்து வைக்கப்படுகிறது.

மொத்தம் 57 கோடி ரூபாய் செலவில் 6 ஹெக்டேர் நிலப்பரப்புக் கொண்டதாகக் கட்டப்பட்டுள்ள இந்த 9ஆவது தளத்தின் கட்டுமானப் பணிகள் 2006ஆம் ஆண்டு டிசம்பரில் தொடங்கப்பட்டு தற்பொழுது முடிவடைந்துள்ளது.

335 மீட்டர் நீளமுள்ள, 65 ஆயிரம் டன் கொள்ளளவு கொண்ட சரக்குப் பெட்டகக் கப்பல்களையும், 70 ஆயிரம் டன் கொள்ளளவு கொண்ட பிற கப்பல்களையும் கையாளுவதற்கேற்ப 12.8 மீட்டர் மிதவை ஆழத்துடன் இத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த 9ஆவது சரக்குத் தளம், சரக்குப் பெட்டகங்களைக் கையாளுவதற்குத் தேவையான பளு தூக்கிகளையும், கரையில் சரக்குகளைக் கையாளும் இயந்திரங்களையும், நிறுவுவதற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.

11ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்தத் துறைமுகத்தின் உள்துறைமுக மேம்பாட்டிற்கு 1,050 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான வளர்ச்சித் திட்டங்களுக்கும், வெளித்துறைமுக மேம்பாட்டிற்காக 4,350 கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான வளர்ச்சித் திட்டங்களுக்கும், ஆக மொத்தம் 5,401 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டங்கள் அனைத்தும் முடிவடையும் போது தூத்துக்குடி மட்டுமல்ல; தென்தமிழகம் மட்டுமல்ல; ஒட்டு மொத்த தமிழகமும் தூத்துக்குடி துறைமுகத்தின் மூலம் சமூகப் பொருளாதார நிலைகளில் நாட்டின் பிற பகுதிகளின் கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு முன்னேற்றம் அடையும் என்பதில் ஐயமில்லை.

தமிழகத்தின் நலன்களைக் காப்பதில் மிகுந்த அக்கறை கொண்டு, நாம் கோரும் திட்டங்களுக்கெல்லாம் தாராளமாக அனுமதி வழங்கி உதவி வருவதுடன், இந்தத் தூத்துக்குடி துறைமுகத்தின் வளர்ச்சிக்காகவும் உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் நல்கி வரும் நமது மதிப்பிற்குரிய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் வழிகாட்டும் தலைவர் திருமதி சோனியாகாந்தி அவர்களுக்கும், பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்கும், தமிழகத்தின் சார்பில் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு, மத்திய அமைச்சர் தம்பி டி.ஆர். பாலு அவர்கள் தமிழகத்தின் மேன்மைக்காகத் தனக்குத் தரப்பட்டுள்ள பணிகளைச் செவ்வனே ஆற்றி நம்முடைய சிந்தையையெல்லாம் குளிரச் செய்கின்ற தன்மையிலே நடத்துகின்ற விழாக்களில் ஒன்றாக இன்றைய விழா அமைந்திருக்கிறது என்பதையும் கூறி தூத்துக்குடி துறைமுகப் பணிகள் மேன்மேலும் சிறக்க என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ★

# மக்களுக்கும் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கும் உதவிடும் நல்ல எண்ணத்தோடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தைத் தொடங்கியுள்ளது

**சென்னை, தலைமைச் செயலகத்தில் 15.7.2008 அன்று அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் கேபிள் இணைப்பு சேவையைத் தொடங்கிவைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை**

"சொன்னதைச் செய்வோம் செய்வதைச் சொல்வோம்" என்பதுதான் இவ்வரசின் தாரக மந்திரம். இந்த ஆண்டு ஜூலை 15–ஆம் நாள், அரசு கேபிள் டி.வி நிறுவனம் தன் சேவைகளைத் தொடங்கும் என்று ஏற்கெனவே அறிவித்திருந்தேன்.

பல சவால்களை எதிர்கொள்ள நேர்ந்திருந்தாலும் சொன்னபடி சொன்ன நாளில் அப்பணிகள் இன்று தொடங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

கேபிள் டி.வி சேவைகள் வழங்க வேண்டுமென்றால் அதற்கு மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும். மத்திய அரசின் அனுமதி 2.4.2008 அன்றுதான் கிடைக்கப் பெற்றது. அனுமதி பெற்றபின், 4 மாத குறுகிய காலத்திற்குள் உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, உலகப் புகழ் பெற்ற நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து, தரம்வாய்ந்த இயந்திரங்களைக் கொள்முதல் செய்து அவைகளைப் பன்னாட்டு நிபுணர்கள் அடங்கிய குழுவைக் கொண்டு நிறுவி இன்று அதன் சேவைகள் மக்கள் பயனுக்காகத் தொடங்கப்படுகிறது. இது உண்மையில் ஒரு பெரும் சாதனையாகும்.

### இது ஒரு புதிய திட்டம்

அரசு எதற்காக இந்த நிறுவனத்தை ஏற்படுத்தி உள்ளது என்று பல தரப்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளன. அண்மையில் இது சம்பந்தமாக ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தேன். அதில், அரசு கேபிள் டி.வி நிறுவனத்தைத் தொடங்குவது என்பது அதன் மூலம் அரசு வருமானத்தைப் பெருக்கிடும் நோக்கத்திற்காக அல்ல; உண்மையில், கேபிள் டி.வி நடத்துகிறவர்கள் மூலம் பயனாளிகளான பொதுமக்களுக்கு நியாயமான கட்டணத்தில், தரமான சேவைகளை வழங்கிடும் நோக்கத்தோடு தான் இந்நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை, தொலைக்காட்சியின் சேவைகளைப் பெற பொதுமக்கள் உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கு குறைந்தபட்சம் 150 ரூபாய் கட்டணம் செலுத்தி வந்தனர். ஒவ்வொரு ஊருக்கும் தனித் தனி விகிதத்தில் கட்டணம் வசூலிக்கப்பட்டு வந்தது. உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கு தொலைக்காட்சி நிறுவனத்திடமிருந்து





சேனல்களைப் பெற்றுத் தருவதாகச் சொல்லி, பல MSO நிறுவனங்கள் செயல்பட்டு வந்தன. இவற்றில், சில MSO–க்கள் உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்களிடமிருந்து கணிசமான தொகையை வசூல் செய்து பெரும் லாபம் சம்பாதித்து வந்தன. இதில், ஏராளமான முரண்பாடுகளும், புகார்களும் தொடர்ந்து கூறப்பட்டு வந்த நிலையில்தான், அரசே மக்களுக்கும் கேபிள் ஆப்பரேட்டர்களுக்கும் உதவிட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு அரசு கேபிள் டி.வி நிறுவனத்தைத் தொடங்கியுள்ளது.

இது ஒரு புதிய திட்டம். எந்த ஒரு மாநிலத்திலும் இது போன்ற ஒரு திட்டத்தைச் செயல்படுத்தியுள்ளதாகச் செய்திகள் கிடையாது. உலக அளவிலேயே இது போன்ற ஒரு திட்டம் அரசால் செயல்படுத்தப்படுகிறதா என்பதும் ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது.

புதிய திட்டம் ஒன்று தொடங்கப்படும்போது, அதைத் தொடங்கி ஒரு சில மாதங்கள் ஆகின்ற வரையில் நடைமுறைப் பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பு. அதை ஒவ்வொன்றாகக் களைந்து, இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்ய அரசு தொடர்ந்து முயற்சிகள் எடுத்து வருகிறது.

அண்மையில் மக்களிடமிருந்து எவ்வளவு கட்டணம் வசூலிப்பது என்ற ஒரு பிரச்சினை எழுந்தது. தற்போது அவர்கள் 150 ரூபாய்க்குக் குறையாமல் கட்டணம் செலுத்தி வருகிறார்கள் என்ற செய்தியை நான் அறிந்தேன்.

அக்கட்டணத்தைக் குறைத்து மாநிலம் எங்கும் ஒரே கட்டணமாக 100 ரூபாய்க்கு மிகாமல் இருக்கவேண்டுமென்ற முடிவை எடுத்து அது அறிவிக்கப்பட்டது.

இதுபற்றியும் சில பத்திரிகைகளில் விமர்சனம் வந்துள்ளது. மத்திய அரசு 77 ரூபாய்தான் வசூலிக்க வேண்டும் என்ற நிலை இருக்கும் போது, தமிழக அரசு 100 ரூபாய் ஏன் வசூலிக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் புகார். மத்திய அரசின் "டிராய்" அறிவித்த கட்டணமான 77 ரூபாய் "Free to Air" என்ற இலவச சேனல்களுக்கு மட்டுமே பொருந்தும். அரசு கேபிள் டி.வி நிறுவனமோ இலவச சேனல்களைத் தவிர, கட்டணச் சேனல்களும் கொடுப்பதால் 100 ரூபாய் வரை வசூலிக்கலாம் என எடுத்துள்ள முடிவு சரியானதே எனக் கருதலாம். இவ்வேளையில் தற்போது, இதே அளவு சேனல்களைக் கொடுப்பதற்கு 150 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரை வசூலிக்கப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.

**பாரபட்சமின்றி இணைப்புகள் வழங்கப்படும்**

சென்னையில், இதே கட்டணத்தில் சேவைகளைக் கொடுப்பீர்களா என்ற அடுத்த கேள்வி எழுந்துள்ளது. சென்னையில் Conditional Access System என்ற முறை நடைமுறையில் உள்ளது. இங்கு இரண்டு வகை இணைப்புகள் வழங்கும் முறை உள்ளது. ஒன்று, செட் ஆப் பாக்ஸ் இல்லாமல், கேபிள் இணைப்பு மட்டுமே பெற்று குறிப்பிட்ட சில சேனல்கள் மட்டும் காண்பதாகும். இந்த

முறைதான் சென்னையில் அதிக அளவில் நடைமுறையில் உள்ளது. இதுபோன்ற இணைப்புகளை கேபிள் டி.வி நிறுவனம் மற்ற மாவட்டங்களில் உள்ளதுபோல் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்கு மிகாமல் வழங்கும். இரண்டாவது முறையில், செட் ஆப் பாக்ஸ் மூலமாக இணைப்புகள் பெறுவோர், தாங்கள் பார்க்க விரும்பும் சேனல்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, மத்திய அரசின் "டிராய்" விதிமுறைகளுக்கு உட்பட்டு கட்டணம் நிர்ணயிக்கப்படும். எது எப்படி இருந்தாலும் அரசு கேபிள் டி.வி நிறுவனம், தற்போது பொதுமக்கள் செலுத்திவரும் கட்டணத்தைவிட அதிகக் கட்டணத்தை நிச்சயமாக வசூலிக்கவே வசூலிக்காது.

அரசு கேபிள் டி.வி நிறுவனம், தற்போது இயங்கி வரும் MSO-க்கள் மூலம்தான் இணைப்புகளைக் கொடுக்கும் என்ற இன்னொரு பிரச்சினை எழுந்துள்ளது. இதற்கு நான் கூறும் ஒரே பதில், அரசு கேபிள் டி.வி. நிறுவனம் பாரபட்சமின்றி இணைப்புகளை வழங்கும். முதல் கட்டமாக, அரசு கேபிள் டி.வி நிறுவனத்திடம் முன்பதிவு செய்திருக்கும் கேபிள் டி.வி ஆப்பரேட்டர்களுக்கு இணைப்புகள் வழங்கப்படும். முன்பதிவு செய்யாத கேபிள் டி.வி ஆப்பரேட்டர்களுக்கு, விரைவில் இன்னொரு வாய்ப்பு கொடுக்கப்படும். அரசின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்பட முன்வரும் அனைவருக்கும் அரசு கேபிள் டி.வி நிறுவனம் இணைப்புகள் வழங்கும். தற்போது இயங்கி வரும் MSO நிறுவனங்களும் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்னொரு முக்கியமான பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அனைத்துக் கட்டணச் சேனல்களையும் அரசு கேபிள் டி.வி நிறுவனம் அளிக்குமா என்று சில தரப்பில் கேள்விகள் கேட்கப்பட்டன. தற்போது, 300-க்கு மேற்பட்ட கட்டணச் சேனல்கள் இயங்கி வருகின்றன. அவை அனைத்தையும் அரசு கேபிள் டி.வி நிறுவனம் அளிப்பது சாத்தியமாகாது. மக்களிடையே செல்வாக்குப் பெற்ற 70-லிருந்து 80 முக்கிய சேனல்களை அளிக்க அரசு கேபிள் டி.வி நிறுவனம் முடிவு செய்துள்ளது. இச்சேனல்களின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களுடைய சேவைகளை வழங்குமாறு அரசு கேட்டுக் கொண்டது. அதற்குப் பெரும்பாலான கட்டணச் சேனல்கள், அரசு கேபிள் டி.வி நிறுவனத்திற்குத் தங்கள் சேவைகளை வழங்க இசைவு தெரிவித்துள்ளன. சில கட்டணச் சேனல்கள் அரசு கேபிள் டி.வி நிறுவனத்திற்குச் சேவைகள் வழங்க இதுவரையில் இசைவைத் தெரிவிக்கவில்லை. அவர்களிடமிருந்து சேவைகள் பெற சட்டப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று இத்தருணத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இதுபோன்று தினமும் ஒரு புதிய பிரச்சினை எழுந்தவண்ணம் உள்ளது. இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் எதிர்நோக்கி அவைகளைக் களைந்து மக்களுக்குத் தொடர்ந்து இந்நிறுவனத்தின் மூலம் தமிழக அரசு சேவைகளை வழங்கும் என்று தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன். வருகை தந்து வாழ்த்திய உங்கள் அனைவருக்கும் நன்றியும் வணக்கமும், உரியதாகுக! ❖

## ஆசிய நீச்சல் விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற தமிழக வீரர் அக்னீஸ்வர்க்கு ரூ.ஒரு இலட்சம் ஊக்கப்பரிசு

### மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை

தமிழகத்தைச் சேர்ந்த நீச்சல் வீரர் ஜெ.அக்னீஸ்வர் உலக அளவிலும் தேசிய அளவிலும், மாநில அளவிலும் நீச்சல் போட்டிகளில் கலந்து கொண்டு இதுவரை மொத்தம் 126 தங்கப் பதக்கங்களும், 49 வெள்ளிப்பதக்கங்களும், 28 வெண்கலப்பதக்கங்களும் பெற்று மகத்தான சாதனைகள் படைத்துத் தமிழகத்திற்குப் பெருமை தேடித்தந்துள்ளார். பாகிஸ்தானில் நடைபெற்ற நீச்சல் போட்டிகளில் மட்டும் 6 தங்கப்பதக்கங்கள் பெற்றுள்ளார் என்பது இவரது பெருமைக்குச் சான்றாகும். அண்மையில், இந்தோனேசியாவின் தலைநகர் ஜாகர்தாவில் நடைபெற்ற ஐந்தாவது ஆசிய நீச்சல் விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்றுத் தங்கப்பதக்கம் பரிசு பெற்றுள்ளார்.

அவரது இந்தச் சாதனையையும், நீச்சல் போட்டிகளில் இதுவரை அவர் படைத்துள்ள சாதனைகளையும் பாராட்டும் வகையில் அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் ஊக்கப் பரிசு வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் ஆணையிட்டுள்ளார். ❖

சங்கத்தமிழ்

# ஒரு தாயின் தாலாட்டு

முதல்வர் கலைஞர்



பகைவெல்லச் சென்றிருக்கும் கணவனது
பனைவைர நெஞ்சத்தின் வீரத்தை நினைத்தவாறு

பகல் முழுதும் குடும்பத்துப் பணிமுடித்துச் சற்றுப்
படுத்துறக்கம் கொள்வதற்குச் செல்லும் முன்னர்

பாசமுடன் மகனைக் கூவியழைத்துக் "கண்ணா!
பாலமுதம் இதோ பருகிட வாடா," என்பேன்!

"வரமாட்டேன் போ" என்று நிலாவெள்ளி ஒளியினிலே
வட்டமிட்டு விளையாட ஓடிடுவான் எதிர்வீட்டுப் பிள்ளையுடன்!

வந்துவிடும் எனக்குக் கோபம்-கோலொன்றை எடுத்தோங்கி
"வரமாட்டேன் என்றா சொன்னாய்? இதோ வந்துவிட்டேன்" எனத்

துரத்திடுவேன்; அடிக்கமாட்டேன்! ஆனாலும் என்
தூயமகன் அஞ்சி நடுங்கிப் பதுங்கிடுவான்!

"கோலுக்கே இந்தப் பயம் கொள்கின்ற பிள்ளாய்; நீ - நாளை
வேலுக்குப் போர் முனையில் என்ன பதில் சொல்வாய்?" என்பேன்!

இழுத்து வந்து செல்லமாய்க் கன்னம் கிள்ளிப்
பழுத்திருக்கும் கோவைக்கனியாம் அவன் இதழில்;

தேன்கலந்த பாலின் கிண்ணம் மெல்லக் கவிழ்த்து
தெம்பாக இருப்பதற்கு முழுவதையும் அருந்தென்பேன்!

அழகுதமிழ் மழலைச் செல்வன் அதனை மறுக்காமல்
அச்சத்தின் காரணமாய் அனைத்தும் பருகிடுவான்

பிறைபோல இருந்த பிள்ளை முழுநிலவாக உருவெடுத்து
குறையில்லாத் தோற்றமுடன் குன்றம் போல் வளர்ந்து விட்டான்!



தாலாட்டப் பிள்ளையொன்றைத் தந்துவிட்டுப்
போராட்டக்களம் சென்ற என்னவரோ;

தமிழ் மண்ணின் பண்பாட்டுக் கேற்றவாறு
தட மார்பில் வேல்தாங்கி நடுகல்லாய் நின்றுவிட்டார்

நானும் கல்லாக மனத்தை ஆக்கிக்கொண்டு
வானதிரப் புவி வாழ்த்துகின்ற மானத்தை

ஊனமின்றிக் காப்பதற்கு உறுதிபூண்டு
உயர் வீரக்குடிமகனாய்ப் பிள்ளைதனை வளர்த்தேன்!

கட்டியணைத்துக் களித்த என் கணவனது நெஞ்சகத்தை
வெட்டிப்பிளந்து வீழ்த்திவிட்ட பகைப்புலத்தை;

எட்டியுதைத்துத் துரத்தி ஏற்றிடுக வெற்றிக்கொடி யென்றும்,
எதிரிகளின் கோட்டையிலே நம் முரசு முழங்கட்டுமென்றும்,

உச்சிமோந்து திலகமிட்டுக் குடுமிதனைக் கோதிவிட்டு
உடைவாளைக் கையில்தந்து, "சென்றுவா மகனே" என அனுப்பி
வைத்தேன்

அவனோ;

கொடுவாளால் களிறுகளைக் கொன்றுபோட்டுக்
குன்றுகளைப் பந்தாடுதல் போல் அவற்றை உருட்டிவிட்டுப்

படுகளத்தில் விளையாடி வினை முடிக்கின்றான் என்றும்,
நெடுமரம் போல் பகைப்படை வீழ்கின்றதென்றும்,

அடுக்கடுக்காய்த் தித்திப்புச் செய்திகள் வந்திடவே அடக்கவொண்ணா
ஆவலுடன் அது காணக் களம் புகுந்தேன்!

ஐயந்திற் கிடமேயில்லை வெற்றி நமக்கேதான்...
ஆனால் ஒன்று; அங்கே என் மகனைத்தான் காணவில்லை!

குருதி மணம் கமழுகின்ற போர்க்களத்தில்
குமுத மலர் மொட்டுக்களாய் முளைக்கும் தலைகள்

வீழ்ந்துள்ள வீரர்தம் உடல்களோ கவிழ்ந்துவிட்ட படகுகளாம்!
வெட்டுண்ட கைகால்கள் வேலையின்றி மிதக்கின்ற துடுப்புகளாம்!

சூழ்ந்துள்ள பிணக்குவியல் நடுவில் சென்றேன்.
"ஆழ்ந்துள்ளேன் கவலையினால்; அருமை மகனே நீ

போர்க்களத்துப் பிணமாகி வாழ்கின்றாயா? அன்றி
புறமுதுகிட்டோடிச் செத்துத் தொலைந்தாயா?" எனக் கேட்டுத்
துடித்திட்டேன்!

"வாழ்கின்றேனம்மா வீரனாக!" என்றொரு குரல்
தாழ்கின்ற என் தலையை நிமிர்த்திற்றாங்கே!

குரல் வந்த திசைநோக்கிப் பறந்துபோனேன்- "உள்ள
உரம் வாய்ந்த மகனே! நீ எங்கே?" என்றேன்.

"இங்கே" என்றான்; கண்டு கொண்டேன்! "வலம்புரிச்
சங்கே!" என்றவாறு தழுவிக்கொண்டேன்! கையில்;

தாங்கிப் போரிட்ட கேடயம் தரையில் கிடக்க; அதில்
தங்கமகன் மார்பில் அம்புதாங்கி வீழ்ந்து கிடந்தான்!

"வெற்றியம்மா வெற்றி" என்றான்-அவன்
நெற்றியிலே முத்தமிட்டு, "என் நித்திலமே!

போர்முனையில் உயிர்விட்டு மானம் காத்த தந்தைக்கு
நேர்வழித் தோன்றலாய் வந்துதித்தாய் வாழ்க!" என்றேன்!

"ஊடுருவியிருக்கின்றதே மார்பில் அம்பு-வலி
உனக்குத் தாங்காதே மகனே!" என்றேன்; அழுதுவிட்டேன்!

"உண்மையா அம்மா? உன் கண்ணால் கண்டு நீ எனக்கு; உரைக்கும் வரை
நான் உணரவில்லையம்மா!" என்றான்!

உயிர்விட்டான் மடி மீது! போய்விட்டான்;
உயிரோடு எனைமட்டும் விட்டுவிட்டு!

ஊர்ப்பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டு
உண்பதற்குப் பிடிவாதம் பிடித்தபோது-நான்

ஓங்கிய கோல் கண்டு ஓடிய என் மகனா; மார்பில்
தாங்கிய கணையுடனே தாயகத்தை மீட்கும் போரில்

தன்னுயிரைத் தருவதற்கும் துணிந்து நின்றான்!
என்னுயிரே! என் மகனே! நீ வாழ்க! என வாழ்த்துகின்றேன்!"

★ ★ ★

★ "பால் கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்
செறாஅது ஓச்சிய சிறுகோல் அஞ்சி,
உயவொடு வருந்தும்மனனே! இனியே
புகர்நிறங் கொண்ட களிறட்டு ஆனான்,
முன்நாள் வீழ்ந்த உரவோர் மகனே!
உன்னிலன் என்னும் புண்ஒன்று அம்பு
மான் உளை அன்ன குடுமித்
தோல் மிசைக் கிடந்த புல் அண லோனே." (புறநானூறு : பாடல் : 310

பாடியவர் : பொன்முடியார்)

பொருள் விளக்கம்:

மடுப்ப=உண்ணுமாறு செய்ய. செறாஅது=செல்லமாகக்
கோபித்து. உயவொடு=கவலையுடன். மனனே=மனமே.
களிறட்டு ஆனான்=களிறுகளைக் கொன்றவனானான்.
உரவோர்=மூத்தோர் (தந்தை). உன்னி=கவனித்தல்.
மான் உளை அன்ன குடுமி=குதிரை மயிர் போன்ற
அடர்த்தியான குடுமி. தோல்=கேடயம். புல்=புல்லிய.
அணலோன்=தாடியுடையவன்.

★ ★ ★





# கச்சத்தீவு கடல் பகுதியில் இந்திய மீனவர்களின் உரிமைகளை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுத்திடுவீர்!

### மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடிதம்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் 23.6.2008 அன்று எழுதியுள்ள கடிதம் வருமாறு :–

தமிழ்நாட்டைச் சேர்ந்த தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள, குறிப்பாகக் கச்சத்தீவு அருகிலுள்ள கடல் பகுதியில் மீன்பிடித்து தங்களது வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள் என்பது நினைவு தெரிந்த காலம் தொட்டு நிலவிவரும் வரலாற்று உண்மையாகும்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில், ஆதம் பாலம் மற்றும் பாக் ஜலசந்தி ஆகியவற்றிற்கும் இடையிலுள்ள கடல் பகுதியில் எல்லைக் கோட்டை நிர்ணயிப்பதற்காக இந்திய அரசும், இலங்கை அரசும் 26.6.1974 அன்று ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

இந்த ஒப்பந்தத்தின் 5 மற்றும் 6–ஆவது பிரிவுகளின்படி, கச்சத்தீவு அருகில் உள்ளிட்ட கடல் பகுதியில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப்பு உரிமை ஏற்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. சொல்லப்போனால் 6–ஆவது பிரிவு, "இந்தியா மற்றும் இலங்கைப் படகுகள் பரஸ்பரமாக ஒவ்வொரு நாட்டின் கடல் பகுதியிலும் பாரம்பரியமாக அவை அனுபவித்து வந்த உரிமைகளை அனுபவிக்கலாம்" என்று அழுத்தம் திருத்தமாக வரையறுத்துள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் மன்னார் வளைகுடாவில் எல்லைக்களை நிர்ணயிப்பதற்காக 23.3.1976 அன்று இரண்டாவது ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தம் முந்தைய ஒப்பந்தத்தால் கூறப்படாத எல்லைக்கோட்டை விளக்குவதற்காக மட்டுமே செய்யப்பட்டது. 1974–ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் இதரப் பிரிவுகள் அனைத்தும் செல்லத்தக்கதாகவும், நீக்கப்படாததாகவும் இருந்து வருகின்றன.

இருப்பினும், 1976 ஏப்ரல் மாதம் இந்திய அரசின் ஆலோசனைப்படி, 1976–ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு விரிவான விளம்பரம் அளிக்கப்பட்டு, இப்பகுதிகளிலுள்ள

மீனவர்கள் இந்தியக் கடல் எல்லைப் பகுதிகளுக்குள் மீன்பிடித்தலைக் கட்டுப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். தேவைப்பட்டால் இந்திய மீனவர்கள் தங்களது வலைகளை கச்சத்தீவில் உலர்த்திக் கொள்ளலாம் என்றும் கூறப்பட்டிருந்தது.

இருப்பினும் அவர்கள் கச்சத்தீவைச் சுற்றியுள்ள இலங்கைக் கடல் பகுதியில் மீன்பிடிக்கத் தடை செய்யப்பட்டிருந்தனர். இவை நிருவாக உத்தரவுகள் தானே தவிர 1974 மற்றும் 1976–ஆம் ஆண்டு ஒப்பந்தங்களின்படி உருவானவை அல்ல. அவை நிருவாக உத்தரவுகள் என்பதால், அவை இரண்டு நாடுகளும் ஏற்கெனவே செய்து கொண்ட சட்டப்படி செல்லுபடியாகும் ஒப்பந்தத்தின் பிரிவுகளை நீக்க முடியாது.

இருந்தபோதும் கடந்த பல ஆண்டுகளாக இந்த நிருவாக உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவது நமது மீனவர்களுக்குச் சொல்லொணாத் துயரத்தையும், பாதிப்பையும் ஏற்படுத்திவருகிறது. கச்சத்தீவைச் சுற்றியுள்ள பகுதியில் அவர்களது பாரம்பரிய மீன்பிடிப்பு உரிமை மறுக்கப்பட்டு வருகிறது. பலமுறை இந்தக் கடல் பகுதியில் நமது மீனவர்கள் கைது செய்யப்பட்டும், தாக்கப்பட்டும், துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டும் வருகின்றனர். இந்தச் சம்பவங்கள் ஒவ்வொன்றும் மாநில மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியும், சட்டமன்றத்தில் அமளியையும் ஏற்படுத்தி வருகின்றன. தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்பட்டு வரும் இந்தப் பெரும் அநீதியைக் களையுமாறு இந்திய அரசுக்கு அடுத்தடுத்து வந்த முதலமைச்சர்கள் கடிதங்கள் எழுதியுள்ளனர்.

நான் ஆட்சிக்கு வந்த பிறகு 17.8.2006 அன்று எனது தலைமைச் செயலாளரால் வெளியுறவு விவகாரத்துறை அமைச்சகத்தின் அயல்நாட்டுச் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. மாநில அரசு சார்பில் இந்திய அரசு இப்பிரச்சினையை எடுக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளர் கேட்டுக் கொண்டு, பின்வரும் ஆலோசனைகளைத் தெரிவித்திருந்தார்:–

1. கச்சத்தீவு மீது இலங்கை அரசின் ஆதிபத்திய உரிமையை நிலை நிறுத்தும் போதே, நிரந்தரக் குத்தகையிலுள்ள அத்தீவையும், அதன் அருகிலுள்ள கடல் பகுதியையும் மீன்பிடித்தலுக்கும், வலைகளை உலர வைப்பதற்கும், புனிதப் பயணம் மேற்கொள்வதற்கும் பெற வேண்டும்.

2. இலங்கைக் கடல் பகுதியில் ஐந்து கடல் மைல்கள் வரை இந்திய மீனவர்கள் முறையாக அங்கீகரிக்கப்பட்ட மீன்பிடித்தலை அனுமதிக்க வேண்டும்.

3. எல்லை தாண்டி கடல்பகுதிக்குள் சென்றுவிடும் மீனவர்கள் உடனடியாக விடுவிக்கப்படுவதையும், அடுத்த நாட்டு நிருவாகத்தினரால் கடும் இன்னல்களுக்கு ஆளாக்கப்படாமல் இருப்பதையும் உறுதி செய்ய இருதரப்பு ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும்.

இதைத் தொடர்ந்து, நீண்டகாலமாக நிலுவையிலுள்ள இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணும்படியும், கச்சத்தீவு கடல்பகுதியில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப்பு உரிமைகளை மீட்டெடுக்கும்படியும் கோரி நானும் தனிப்பட்ட முறையில் 22.9.2006 அன்று தங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன்.

இருப்பினும், கைதுகளும், அப்பாவி மீனவர்கள் தன்னிச்சையாகச் சுடப்படும் சம்பவங்களும் தொடர்ந்து குறையாமல் நிகழ்ந்து இந்திய மீனவர்களை அச்சுறுத்தியும் வருகிறது. இது எனக்கும், மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் ஆழ்ந்த துயரை ஏற்படுத்தி வருகின்றன. இதை ஏற்கெனவே தங்களது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன்.

பிரச்சினையின் தீவிரத் தன்மையையும், தமிழக மீனவர்களுக்கு அதனால் ஏற்பட்டு வரும் துயரத்தையும் கருத்தில் கொண்டு, இந்தப் பிரச்சினையில் இந்தியாவின் நியாயமான உரிமைகளைப் பற்றி இலங்கை அரசுக்குத் தெளிவாகக் கூறப்படவேண்டும்.

இந்தக் கடல் பகுதிகளில் மீன்பிடிப்புத் தொழிலை மேற்கொள்ள இந்திய மீனவர்களுக்குள்ள உரிமைகளும், சலுகைகளும் அங்கீகரிக்கப்படவும், மீண்டும் வழங்கப்படவும் வேண்டும். இந்திய மீனவர்களது மதிப்புமிக்க உயிர்களைக் காப்பாற்றவும், அவர்களது வாழ்க்கையை உறுதி செய்யவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய அரசை வலியுறுத்துகிறேன்.

# சென்னை - ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டப்பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகம் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் அடிக்கல் நாட்டினார்.



சென்னை, இராஜாஜி மண்டபத்தில் 12.06.2008 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் கட்டப்படவுள்ள
புதிய சட்டப் பேரவை மற்றும் தலைமைச் செயலக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டி,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் ஆற்றிய உரை

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிய சட்டப் பேரவை, தலைமைச் செயலக வளாகம் – இவற்றுக்கான அடிக்கல் நாட்டு விழா நிகழ்ச்சியினை நடத்தி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கின்றேன். இங்கே தொகுப்புரையாற்றிய அம்மையார் சுதா அவர்கள், இந்தச் சட்டப் பேரவை, மேலவை – இவைகள் எத்தனை இடங்களில் மாறி மாறி அமைந்து – தங்களுடைய பணிகளை ஆற்றியிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டினார். இப்படி அலைந்து கொண்டிருந்த இந்த அவைகளை இனி அலைய வேண்டாமென்று ஓர் இடத்தில் நிறுத்துகின்ற வகையிலேதான் இன்றைக்கு இந்தப் புதிய கட்டடத்தை எழுப்புகின்ற அரும்பணியினை பொதுப்பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன் இடத்திலே ஒப்படைத்து, அரசின் ஒத்துழைப்போடு அந்தப் பணி நிறைவேற விருக்கிறது.

இந்த இனிய விழாவில் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மாண்புமிகு கங்குலி அவர்கள் மக்களாட்சித் தத்துவத்திற்கு அடிக்கல் நாட்டப்பட வேண்டும். அந்த அடிக்கல், அந்தத் தத்துவத்தை வளரச் செய்ய வேண்டும், வாழச் செய்ய வேண்டும் என்ற கருத்துப்பட தன்னுடைய உரையினை நிறைவு செய்தார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் சரி, அதற்கு அடுத்து வந்த ஆட்சிகளின் காலங்களிலும் சரி, என்னதான்




கருத்து மாறுபாடுகள், வேறுபாடுகள் இருந்தாலுங் கூட, நாங்கள் அமர்ந்துள்ள அவையில் நடைபெறுகின்ற விவாதங்களில் மக்களாட்சித் தத்துவத்தினுடைய மாண்பினை உயர்த்துகின்ற வகையிலேதான் அமைச்சர்களானாலும், அவையிலே அனுபவப்பட்டவர்களானாலும் நடந்து கொண்டிருக்கிறோம், இனியும் நடப்போம் என்ற உறுதியினை இந்த நேரத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

### தாடி இல்லாத பெரியார்

ஓமந்தூரார் வளாகம் என்பது இதற்குப் பெயர். இந்தப் பெயரை இடைக்காலத்திலே நாம் மறந்து விட்டிருந்தாலுங்கூட, என்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி, 1967–ஆம் ஆண்டு பொறுப்பேற்றுக் கொண்டதோ – அதைத் தொடர்ந்து இரண்டாண்டு காலத்திற்குப் பிறகு நான் பொறுப்புக்கு வந்தநேரத்தில் ஓமந்தூர் இராமசாமி அவர்கள் இந்த நாட்டிற்கு, நலிந்த மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு எவ்வளவு அருந்துணையாக இருந்தார் என்பதை எண்ணிப் பார்க்கின்ற வகையில் அவருக்கு "தாடி இல்லாத பெரியார்" என்றே கூட அவரை சில கட்சிக்காரர்கள் வர்ணித்தார்கள் என்பதும் – தமிழ் மக்கள் அவரை அப்படித்தான் போற்றினார்கள் என்பதும் அனைவரும் அறிந்த உண்மையாகும். எனவே அவருடைய பெயர் எந்தக் காலத்திலும் நின்று நிலைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இங்கே இந்தத் தோட்டத்திற்கு – இந்த வளாகத்திற்கு அவருடைய பெயரை நம்முடைய அரசு வைத்து, அது இன்றைக்கு வழக்கத்திற்கு வந்திருக்கிறது. அதையும் நீங்கள் அறிவீர்கள்.

### கல்வி வளர்ச்சி நாள்

பெருந்தலைவர்களை – நாட்டிற்காக உழைத்தவர்களை – ஏழையெளியவர்களுக்காக பாடுபட்டவர்களைச் சிறப்பிப்பதும், அவர்களுக்குப் பெருமை சேர்ப்பதும் அவர்களுடைய நினைவை நிலைநிறுத்தி எதிர்காலச்சந்ததிக்கு அவர்களுடைய வாழ்க்கை ஒரு பாடமாக அமைய வேண்டுமென்று எண்ணிச் செயல்படுவதும், இந்த அரசினுடைய பணியாக – நோக்கமாக இருந்து வருகிறது. அதனால்தான் பெருந்தலைவர் காமராஜருக்கும், தி.மு. கழகத்திற்கும் இடையிலே எத்தனை கருத்து வேறுபாடுகள் இருந்தாலுங்கூட இன்றைக்கு தமிழகத்திலே கல்வி வாழ்கிறது என்றால், வளர்கிறது என்றால் அதற்கு ஒரே காரணகர்த்தா பெருந்தலைவர் காமராஜர் என்பதை உணர்ந்திருக்கின்ற காரணத்தால்தான் ஐந்தாவது முறையாக நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நேரத்தில் ஜுலை 15 ஆம் நாளை, காமராஜர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டு அதை ஆண்டு தோறும் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஏற்கெனவே நாங்கள் வெளியிட்ட அறிவிப்பு – இடைக் காலத்திலே வேறு சில காரணங்களால் மறைந்து போய் – அது மறக்கப்பட்டு – அதை மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்று எண்ணி – அது வெறும் அறிவிப்பாக இருந்தால் இந்த நாளுக்கு இந்தக் கதிதான் ஏற்படும், ஆகவே காமராஜர் பிறந்த நாளை "கல்வி வளர்ச்சி நாள்" என்று சட்டமாகவே ஆக்க வேண்டுமென்று சட்டமாக ஆக்கிக் களித்தது தி.மு.கழக ஆட்சி.



எனவே பழம்பெரும் தலைவர்கள் ஏழையெளிய மக்களுக்காகப் பாடுபட்ட தலைவர்கள் – நம்முடைய கொள்கைகளை நிறைவேற்ற வேண்டும் – அந்த வழியிலே எதிர்காலச் சந்ததி வாழ வேண்டும், வளம் பெற வேண்டும், ஏற்றம் பெற வேண்டும் என்று எண்ணிய அந்தத் தலைவர்களையெல்லாம் தொடர்ந்து பின்பற்றினால்தான் இன்றைய இளைய தலைமுறை வாழ முடியும், நாடு வாழ முடியும், நலிவு தீர முடியுமென்ற அந்த எண்ணத்தோடுதான். அவர்களையெல்லாம் பாராட்டி, போற்றி வருகிறோம்.

அப்படி போற்றி வருகின்ற இயக்கத்தில் நான் நெஞ்சு நிமிர்த்திச் சொல்ல முடியும். தி.மு.கழகம் தான் பழைய தலைவர்களை, நமக்கெல்லாம் வழி காட்டியவர்களை, நமக்கெல்லாம் வழி வகுத்துத் தந்தவர்களை, நமக்கெல்லாம் பாடமாக இருந்தவர் களை, நமக்கெல்லாம் அறிவு கொளுத்தியவர் களை, இன்றளவும் நினைக்கின்ற நன்றி உணர்வு மிக்க இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கின்ற காரணத்தால்தான் நீங்கள் இங்கே பார்க்கின்றீர்கள், ஓமந்தூரார் பெயரை அரசினர் தோட்டத்திற்கு இடப்பட்டிருக்கின்ற அந்த நிலையை – இப்படி பழம்பெரும் தலைவர்களை யெல்லாம் பாராட்டி – அவர்களுக்கு மரியாதை தந்து அவர்களுடைய வழியிலே இளம் தலைமுறையினர் நடப்பதற்கு வழி வகுத்துக் கொண்டிருக்கின்ற இந்த ஆட்சிதான் இன்றையதினம் இங்கே இந்த மாபெரும் கட்டடத்தை ஏறத்தாழ 200 கோடி ரூபாய் செலவிலே அமைக்க கால்கோள் விழாவினை நிறைவேற்றி இருக்கின்றது. இதை யார் யார் என்னென்ன சொல்லிப் பாராட்டுவார்கள் – யார் யார் என்னென்ன சொல்லி விமர்சிப்பார்கள் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். ஆனால் இந்த நேரத்தில் 200 கோடி ரூபாய் செலவில் ஒரு கட்டடம் தேவையா என்ற கேள்விக்கு நாம் பதில் காணுகின்ற நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

**3 மாவட்டங்கள் பயனடையும் திட்டம்**

இந்த இரண்டாண்டுக் காலத்தில் எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வேறு எந்தப் பணியும் செய்யலாம், இந்தப் பணிக்கே 200 கோடி ரூபாயைச் செலவழித்தோம் என்று யாராவது சொன்னால், அல்லது நினைத்தால் அவர்கள் தயவுசெய்து திருத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இரண்டாண்டுக் காலத்திலே தான் – இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 616 கோடி ரூபாய் செலவு செய்யத் திட்டமிட்டு – ராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டம் ஆகிய 3 மாவட்டங்கள் பயனடையக் கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு துவக்கத்தில் இந்தத் திட்டம் முடிவடைந்து அந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் பயனை அந்த வட்டாரத்து மக்கள் அனுபவிக்கவிருக்கிறார்கள்.

அதைப் போலவே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவியோடு, 1,330 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதென்றால், தருமபுரி, கிருஷ்ணகிரி போன்ற வறண்ட மாவட்டங்களை வளப்படுத்துகின்ற பணியாக அது அமையவிருக்கிறது.

இதே சென்னை மாநகர் கோட்டூர்புரத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகத் தரத்திற்கு இணையாக மாநில நூலகம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. வீட்டுக்கொரு வாசக சாலை, வீட்டுக் கொரு புத்தகச் சாலை என்று அறிஞர் அண்ணா ஒரு முறை வானொலி உரையிலே சொன்னார். வீட்டுக்கொரு புத்தகச்சாலை அல்ல, மாநிலத்திற்கே உலகத் தரத்திலே ஒரு நூலகத்தை சென்னையிலே அமைக்கவிருக்கிறோம். இந்த ஆண்டு அதற்கான நிலம் எல்லாம் பார்த்து கோட்டூர்புரத்திலே, கோட்டை போன்ற அந்த மாளிகை உயரவிருக்கின்றது.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். 2,500 கோடி ரூபாய் – ஆண்டுக்கு ஏறத்தாழ 2,500 கிராம ஊராட்சிகள் வீதம் – ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தில் உள்ள 12 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகளுக்கும் – உதவுகின்ற திட்டம் இது. இத்திட்டத்தின் கீழ் கடந்த இரண்டாண்டுகளில் 5 ஆயிரத்து 74 கிராம ஊராட்சிகளில் 1,025 கோடி ரூபாய் செலவில் 79 ஆயிரத்து 253 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் 2 ஆயிரத்து 521 கிராம ஊராட்சிகளில் 509 கோடி ரூபாய் செலவில், இந்த அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மூன்றாவது ஆண்டாக நடப்பாண்டில் செயல்படுத்தப்படுகிறது.

**மெட்ரோ ரயில் திட்டம்**

உலகின் இரண்டாவது மிகப் பெரிய கடற்கரை எனப் புகழப்படும் சென்னை மெரினா கடற்கரையை எழிலூட்டுகின்ற திட்டம் – 16 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் இப்போது அந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

சென்னை அடையாறு கடலோடு சங்கமிக்கும் இடத்தில் அமைந்துள்ள இயற்கை எழில் மிகுந்த சூழ்நிலையை மேம்படுத்தி, ஏறத்தாழ 100 கோடி ரூபாய்ச் செலவில் அழகிய அடையாறு பூங்கா அமைக்கப்படுகின்றது . இங்கே இந்த ஆண்டு நிறைவடையவுள்ள திட்டங்களில் இதுவும் ஒன்று.

ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் நிதியுதவியோடு 9 ஆயிரத்து 757 கோடி ரூபாய் மதிப்பீட்டில் "மெட்ரோ ரயில் திட்டம்" சென்னை மாநகரத்திலே தொடங்கப்படவிருக்கின்றது.

20 ஆயிரத்து 483 கோடி ரூபாய் முதலீட்டில் 1 இலட்சத்து 52 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்குகின்ற 15 புதிய தொழில்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் – M.O.U. க்கள் கையெழுத்திடப்பட்டிருக்கின்றன. அந்த 15 ஒப்பந்தங்களில் இதுவரை 6 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டு, ஏறத்தாழ 50 ஆயிரம் பேர் நேரடியாகவும், மறைமுகமாகவும் இந்த இரண்டாண்டுக் காலத்திற்குள்ளே வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.

அரவாணி வாரியம் உட்பட 23 அமைப்புச் சாராத் தொழிலாளர் வாரியங்களின் சார்பில் – 5 இலட்சத்து 55 ஆயிரத்து 907 குடும்பங்களுக்கு இந்த இரண்டாண்டுக் காலத்திலே மாத்திரம் 219 கோடியே 47 இலட்சத்து 9 ஆயிரத்து 123 ரூபாய் பல்வேறு இனங்களின்கீழ் உதவித் தொகையாக வழங்கப்பட்டிருக்கின்றது.

இதுவரை 1,444 கோடி ரூபாய் செலவில் 59 இலட்சத்து 55 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க அனுமதிக்கப்பட்டு, 37 இலட்சத்து 78 ஆயிரத்து 924 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டாகி விட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1 இலட்சத்து 56 ஆயிரத்து 974 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 1 இலட்சத்து 84 ஆயிரத்து 890 ஏக்கர் இலவச நிலம், தேர்தல் அறிக்கையிலே தெரிவித்தவாறு இதுவரையிலே இந்த இரண்டாண்டுக் காலத்திலே வழங்கப் பட்டிருக்கிறது.

5 இலட்சத்து 40 ஆயிரத்து 421 ஏழைகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் தரப்பட்டுள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

3 இலட்சத்து 53 ஆயிரத்து 488 வேலை வாய்ப்பில்லாத படித்த இளைஞர்களுக்கு இதுவரை 116 கோடியே 59 இலட்சத்து 23 ஆயிரத்து 454 ரூபாய் மாதாந்திர நிதி உதவி வழங்கப் பட்டிருக்கின்றது.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தின் கீழ் 1 இலட்சத்து 29 ஆயிரத்து 332 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 193 கோடியே 99 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் திருமண உதவித் தொகை.

கர்ப்பிணிப் பெண்கள் 7 இலட்சத்து 132 பேருக்கு 8 ஆயிரம் ரூபாய் வீதம் 296 கோடியே 11 இலட்சத்து




95 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

நீதிமன்றங்களுக்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளை அமைப்பதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளித்து வருகிறது. இந்த அரசு பதவியேற்றது முதல் இதுவரை, ரூபாய் 102 கோடி மதிப்பீட்டிலான நீதித் துறைக் கட்டடப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவற்றைத் தவிர, வரும் நிதி ஆண்டிலும் ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் மேலும் புதிய பணிகள் மேற்கொள்ளப்படும். மொத்தமாக, நீதித்துறைக்கு இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் ரூபாய் 316 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஏதோ 200 கோடி ரூபாயில் மாளிகை கட்டுகிறோம் என்று யாரும் வருத்தப்பட வேண்டாம். வருத்தப்படுவதற்குப் பதிலாகக்கூட கேலியும் செய்ய வேண்டும் இவ்வளவு செலவுகளையும் செய்து விட்டுத்தான் இப்படி கோடிக் கணக்கிலே – கோடியிலே இருக்கின்ற ஏழையெளியவர்களுக்கெல்லாம் உதவி செய்து விட்டுத்தான் அவைகள் எல்லாம் சரிவர நடைபெறுகிறதா என்பதை நிர்ணயிக்க – அதைப் பற்றி விவாதிக்க – அதிலே காணப்படுகின்ற குற்றம் குறைகளை எடுத்துச் சொல்ல அதைத் திருத்திக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜனநாயகக் கூடமான சட்டசபையை புதிய வகையிலே வசதியாக கட்டுவதற்கு 200 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம் என்றால் – அதுவும் மக்கள் பணம்தான், மக்களுக்காகச் செலவழிக்கப்படுகின்ற பணம் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தம்பி துரைமுருகன் சொன்னார் – தவம் செய்வதைப் போல நாங்கள் இதைக் கட்டி முடிக்க வேண்டுமென்றார் – “தம்பீ, தவமாக நினைத்துச் செய்”, தவத்திற்கு இடையிலே யார் குறுக்கிட்டாலும் அதற்கு நீ தயவு செய்து அடி பணியாதே, மயங்காதே, தவத்தைக் கலைக்க யார் யாரோ எப்படியெப்படியோ வருவார்கள், அப்படி வரும்போதெல்லாம் தவம் கெடாமல் பார்த்துக் கொண்டு – “இந்தத் தவத்திலே நீ எடுத்துக் கொண்ட சூளுரையை நிறைவேற்று” என்று தம்பி துரைமுருகனுக்கு எடுத்துச் சொல்லி உங்களுடைய அன்பான ஆதரவும், உங்களுடைய வாழ்த்துக்களும் இந்தக் கட்டடத்தை விரைவிலே எடுப்பதற்குப் பயன்படட்டும் என்று கேட்டு இந்த இனிய விழாவிலே உரையாற்றிய மேடையிலே வீற்றிருக்கின்ற பெருமதிப்புக்குரிய பெரியவர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்து விடைபெறுகிறேன். ★

# தமிழ்வழி பயின்று பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் 1,000 இடங்கள் பெற்ற 1,100 மாணவ, மாணவியருக்கு ஊக்கப் பரிசாக மடிக்கணினிகள் ! மாநில அளவில் முதல் மூன்று இடங்கள் பெற்ற 13 மாணவ, மாணவியர்க்கு ரொக்கப் பரிசுகள் !

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கிப் பாராட்டினார்.



தமிழ்வழிக் கல்வியில் பயின்று பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் 1,000 மாணவ, மாணவியருக்கு ஊக்கப் பரிசாகக் கணினிகள் அளிக்கப்படும் என இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2008 மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில், தமிழ் வழி பயின்று அதிக மதிப்பெண்கள் எய்தியதில் முதல் 1,000 இடங்களைப் பெற்ற 1,100 மாணவ, மாணவியருக்கு 2 கோடியே 37 இலட்சம் ரூபாய் செலவில் ஊக்கப் பரிசாக மடிக்கணிணிகள் வழங்கும் திட்டம் இந்த ஆண்டின் ஒரு புதிய திட்டமாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 26.6.2008 அன்று தொடங்கி வைத்து, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 10 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியை அடுத்து, தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்து, 10–ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் குவித்து மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றுச் சாதனைகள் படைக்கும் மாணவ, மாணவியரின் உயர்கல்விச் செலவினங்களைத் தமிழக அரசு ஏற்குமென 1996–ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிமுகம் செய்த திட்டத்தின்கீழ், 2008 மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற 10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில், 500க்கு 496 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் முதல் இடம் பெற்றுள்ள திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை செயின்ட் இக்னீசியஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த ஆர்.ராம் அம்பிகை என்ற மாணவிக்கு 7,500 ரூபாய்;

500க்கு 494 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றுள்ள திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் செயின்ட் ஜான்ஸ் மேல்நிலைப் பள்ளி மாணவன் எம். ஜோசப்

ஸ்டாலின்; திருநெல்வேலி மாவட்டம், பாளையங் கோட்டை சாராடக்கர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி எஸ்.ஜகீனா, பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தந்தை ஹேன்ஸ்ரோவர் மேல்நிலைப் பள்ளி மாணவன் பி. மருதபாண்டியன், சென்னை சாந்தோம் செயின்ட் ரபேல்ஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி எஸ்.சுவேதா ஆகிய நான்கு பேருக்கும் தலா 6,000 ரூபாய்;

500க்கு 493 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்றுள்ள திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை செயின்ட் இக்னேசியஸ் மேல்நிலைப் பள்ளி மாணவி என். ரமாசுவாதிகா, மதுரை மாவட்டம், சௌராஷ்டிரா பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி ஜி.கே. உமாபிரியா, சேலம் மாவட்டம் செயின்ட் மேரீஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி கே. இந்து, கரூர் மாவட்டம், புவியூர் சி.எப். ராணி மெய்யம்மை மேல்நிலைப் பள்ளி மாணவன் எஸ். செல்வராஜ், திருச்சி மாவட்டம், அமலா பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி ஜி.காயத்திரி, தஞ்சாவூர் மாவட்டம், தாமரன்கோட்டை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி எம். ரிஃபாயா பேகம், விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி ஏ.கே.டி. நினைவு உயர்நிலைப் பள்ளி மாணவன் எம். திருமால், காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு செயின்ட் மேரீஸ் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி வி. எமலின் மெர்சி ஆகிய எட்டு பேருக்கு தலா 5000 ரூபாய் என மொத்தம் 13 மாணவ, மாணவியருக்கு 71 ஆயிரத்து 500 ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கிப் பாராட்டியதுடன், பரிசு பெற்ற மாணவ, மாணவியரின் உயர்கல்விச் செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்கும் என்பதற்கான சான்றிதழ்களையும் அவர்களிடம் வழங்கி வாழ்த்துகள் தெரிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடமிருந்து மடிக்கணினிகளையும், காசோலைகளையும் பரிசுகளாகப் பெற்ற மாணவ, மாணவியரும், அவர்களுடைய பெற்றோரும் இந்த மகத்தான திட்டங்கள் தமிழகப் பள்ளி மாணவ, மாணவியர் இடையே நன்றாகப் படித்து மாநில அளவில் சாதனைகள் படைத்திட ஊக்கமளிப்பதாகவும், இத்தகையத் திட்டங்களை அறிமுகப்படுத்தி, தமிழகத்தின் தரமான கல்வி வளர்ச்சிக்கு வழிவகுத்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு நன்றி கூறிப் பாராட்டுவதாகவும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறைச் செயலாளர் திரு.எம்.குற்றாலிங்கம், இ.ஆ.ப., பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் பெருமாள்சாமி, அரசுத் தேர்வுகள் இயக்குநர் திருமதி. வசந்தி ஜீவானந்தம் ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ❖ ❖

## தமிழ் வளர்ச்சிக்குத் தொண்டாற்றியோருக்கு நிதியுதவி

தமிழ் மொழியைப் பேணிக்காக்கும் வகையிலும், தமிழ் வளர்ச்சி – பண்பாட்டினை மேம்படுத்தும் வகையிலும் தொண்டும் தியாகமும் செய்துள்ளவர்களைச் சிறப்பிக்கும் வகையில் அவர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் அரசால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இவர்களின் மறைவிற்குப் பின் இவர்களது மரபுரிமையருக்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது.

நிதியுதவி பெறத்தக்கவர்களைத் தெரிவு செய்வதற்கான உயர்நிலைக் குழுக் கூட்டம் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களின் தலைமையில் தலைமைச் செயலகத்தில் 18.6.2008 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறத் தகுதியுள்ள 885 பேருக்கு நிதியுதவி வழங்கிட உயர்நிலைக் குழு பரிந்துரை செய்துள்ளது. இதன்படி தமிழ்மொழி – பண்பாட்டினைக் காத்திடவும் வளர்த்திடவும் தொண்டும் தியாகமும் செய்தவர்களுக்கு மாதந்தோறும் நிதியுதவியாக ரூ.3,000 மற்றும் மருத்துவப் படியாக ரூ.15 மரபுரிமையர் எனில் நிதியுதவியாக ரூ.1,500 மற்றும் மருத்துவப்படி ரூ.15 வழங்கப்படும். எல்லைக் காவலர் எனில் மாதந்தோறும் நிதியுதவியாக ரூ.4,000 மற்றும் மருத்துவப்படி ரூ.15 எல்லைக் காவலர்களின் மரபுரிமையர் எனில் ரூ.2000 மற்றும் மருத்துவப்படி ரூ.15 வழங்கப்படும். இந்நிதியுதவிகள் இவர்களுக்கு 17.04.2008 முதல் வழங்கப்படும் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்பு 28.02.2008 அன்று நடைபெற்ற உயர்நிலைக்குழுக் கூட்ட முடிவின்படி 635 பேருக்கு நிதியுதவிகள் வழங்கிட ஆணையிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ★

# பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலை - துறைமுகத் திட்டம் - கப்பல் கட்டும் துறைமுகம் என 7 ஆயிரத்து 290 கோடி ரூபாய் முதலீட்டில் மூன்று திட்டங்கள் !

## மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் தொடங்கி வைத்தார்



தமிழக அரசின் டிட்கோ நிறுவனம், நாகார்ஜுனா உரம் மற்றும் இரசாயன நிறுவனம், டாடா குழுமம் மற்றும் கடலூர் துறைமுகக் கம்பெனி ஆகியவற்றுடன் இணைந்து ஆண்டுக்கு 60 இலட்சம் டன் திறன்கொண்ட ஒரு பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலைத் திட்டத்தைக் கடலூருக்கு அருகில் 4 ஆயிரத்து 790 கோடி ரூபாய் முதலீட்டில் கூட்டுத் துறையில் தொடங்கிடத் திட்டமிட்டுள்ளது.

ஏறத்தாழ 33 மாதங்களில் இத்திட்டத்தின் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டு, 2011–ஆம் ஆண்டில் செயல்படத் தொடங்கும். நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தின் இந்த பெட்ரோலியம் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தமிழ்நாட்டில் அதிகபட்ச முதலீட்டில் உருவாகும் திட்டமாகும். தமிழகத்தின் போக்குவரத்து மற்றும் ஏனைய துறைகளின் எரிபொருள்கள் தேவையை நிறைவு செய்ய இத்திட்டம் பெரிதும் உதவும்.

**திருச்சோபுரம் துறைமுகத் திட்டம்**

புதிய தொழில் திட்டங்கள் மற்றும் எதிர்கால மின் உற்பத்தித் திட்டங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான நிலக்கரியை இறக்குமதி செய்வதற்குப் பயன்படும்வகையில் ஆண்டுக்கு 250 இலட்சம் டன் சரக்குகளைக் கையாளும் திறனுடன் 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் நாகார்ஜுனா எண்ணெய் நிறுவனத்தின்மூலம் திருச்சோபுரத்தில் ஆழ்கடல் துறைமுகம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. இத்துறைமுகம், கடலூர் மற்றும் நாகை மாவட்டங்களில் உருவாக விருக்கும் பெட்ரோலிய இரசாயனப்பொருட்கள் உற்பத்திக்கான தொழில்களுக்கு ஒரு முக்கிய கடல்சார் உள்கட்டமைப்பாகவும் விளங்கும்.

**சிலம்பிமங்கலத்தில் கப்பல் கட்டும் தளம்**

கடலூருக்கு அருகில் சிலம்பிமங்கலம் என்ற இடத்தில் குட்எர்த் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் 75 ஆயிரம் டன் கொள்ளளவு கொண்ட புதிய கப்பல்களைக் கட்டும் தளம் 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்கப் படவிருக்கிறது. கடலூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் இக்கப்பல் கட்டும் தளம் அமைப்பதற்குத் தேவைப்படும் சாதனங்களை உருவாக்கிடச் சிறுதொழில்கள் பல பெருமளவில் உருவாகக் கூடிய வாய்ப்புகளும் ஏற்படும்.

மொத்தம் 7 ஆயிரத்து 290 கோடி ரூபாய் முதலீட்டில் அமையும், நாகார்ஜுனா நிறுவனத்தின் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைத் திட்டம், திருச்சோபுரம் துறைமுகத் திட்டம், சிலம்பிமங்கலத்தில் குட்ஸ்த் நிறுவனத்தின் கப்பல் கட்டும் தளம் அமைக்கும் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் அவர்கள் 2.7.2008 அன்று தலைமைச் செயலகத்தில் அடிக்கல் நாட்டி, தொடங்கி வைத்தார்.

இந்த மூன்று திட்டங்களின்மூலமும், துணைத் தொழில்கள் மூலமும் ஏறத்தாழ 5 ஆயிரத்து 700 பேருக்கு நேரடியாகவும், 11 ஆயிரத்து 300 பேருக்கு மறைமுகமாகவும் வேலைவாய்ப்புகள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், மாண்புமிகு மத்திய சட்டத்துறை இணை அமைச்சர் திரு. கே. வேங்கடபதி, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தொழில்துறைச் செயலாளர் திரு. எம்.எப். ஃபரூக்கி, இ.ஆ.ப., நெடுஞ்சாலைத் துறைச் செயலாளர் திரு. கே. அலாவுதீன், இ.ஆ.ப., டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. எஸ். இராமசுந்தரம், இ.ஆ.ப., கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் திரு. சி. முத்துக்குமாரசுவாமி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

❖ ❖ ❖

# ரூ.300 கோடி முதலீட்டில் ஒரகடத்தில் நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் தொழிற்சாலை

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.**

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த, 'நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க் பி.வி.' என்ற நிறுவனம் உலக அளவில், தொலைத் தொடர்பு சாதனங்களைத் தயாரித்து வழங்குகின்ற மூன்று பெரிய நிறுவனங்களில் ஒன்றாகும். அதன் துணை நிறுவனம் 'நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனம்' ஆகும். இந்நிறுவனம், மொபைல் தயாரிப்புக்கான சாதனங்கள் மற்றும் நிலையான தகவல் உள்கட்டமைப்புக்கான சாதனங்களைத் தயாரிப்பதற்கும், இதர பல்வேறு மின்னணு வன்பொருள்களுக்கான சாதனங்களைத் தயாரிப்பதற்கும், சென்னைக்கு அருகில் ஒரகடத்தில் உள்ள சிப்காட் உயர் தொழில்நுட்பச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், சிறப்புப் பொருளாதார மண்டல அமைப்பில் தொழிற்சாலை ஒன்றினை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

இத்தொழிற்சாலையின்மூலம் நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனம் மூன்றாண்டுகளுக்குள் 300 கோடி ரூபாய் முதலீட்டில் ஏறத்தாழ 400 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பையும், 100 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பையும் அளிக்கும்.

நோக்கியா, மோட்டோரோலா, சாம்சங் போன்ற நிறுவனங்கள் சென்னையில் ஏற்கெனவே தங்கள் தொழிற்சாலைகளை அமைத்துள்ள நிலையில், நோக்கியா சீமென்ஸ் நிறுவனத்தின் இப்புதிய தொழிற்சாலை, சென்னை 'இந்தியாவின் தொலைத் தொடர்பு வன்பொருள் மையம்' என்பதனை மேலும் உறுதிப்படுத்திட உதவும்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையில், 26.6.2008 அன்று இப்புதிய தொழிற்சாலையை அமைப்பதற்காக நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பாக, தொழில்துறைச் செயலாளர், திரு. எம்.எப். ஃபரூக்கி, இ.ஆ.ப, அவர்களும், நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனத்தின் சார்பாக அந்நிறுவனத்தின் இயக்குநர் திரு. சுரேஷ் வாத்வானி அவர்களும் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., ஜெர்மனியில் உள்ள நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனத்தின் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் திரு. க்ளாஸ் லட்ஸ், இந்தியத் தயாரிப்புச் செயல்பாடுகள் தலைவர் திரு. சதேந்திர சிங் மற்றும் நோக்கியா சீமென்ஸ் நெட்வொர்க்ஸ் நிறுவனத்தின் இதர மூத்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

□ □ □

# காந்தி மண்டப வளாகத்தை மேம்படுத்திட புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது

சென்னை கிண்டியில் அமைந்துள்ள காந்தி மண்டப வளாகத்தை மேம்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 7.7.2008 அன்று தமிழக அரசுக்கும் ஏர்செல் செல்லுலார் நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தானது.

தன்னலமற்ற பணிகளால், மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்த தலைவர்களுக்கான பின்வரும் நினைவகங்களை காந்தி மண்டப வளாகம் தன்னகத்தே கொண்டுள்ளது:



மூதறிஞர் ராஜாஜி நினைவகம் – அருங்காட்சியகம் மற்றும் நூலகம், அண்ணல் காந்தியடிகள் அருங்காட்சியகம் மற்றும் நூலகம், காந்தி மண்டபம், தியாகிகள் மணிமண்டபம், மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபம், பக்தவத்சலம் நினைவகம், ரெட்டைமலை சீனிவாசன் மணிமண்டபம், பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் மற்றும் கூட்ட அரங்கம்.

சிறப்புமிக்க இந்த காந்தி மண்டப வளாகத்திலுள்ள காலியிடங்களை மேலும் சிறப்பாக மேம்படுத்தி பொதுமக்கள் பெருமளவில் வருகை புரியக்கூடிய இடமாக மாற்ற வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார். அதன்படி, பொதுப்பணித்துறையின் மேற்பார்வையில் காந்தி மண்டப வளாகத்தை தனியார் பங்களிப்புடன் மேம்படுத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது. இதற்காக பல்வேறு தனியார் துறைகளின் உதவி நாடப்பட்டது.

அதனையடுத்து மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் முடிவாக ஏர்செல் செல்லுலார் நிறுவனமானது சுமார் ரூ.78 இலட்சம் செலவில் காந்தி மண்டப வளாகத்தை மேம்படுத்த முன்வந்தது.

அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 7.7.2008 அன்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையில் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.அ.ப., அவர்கள் முன்னிலையில் தமிழக அரசுக்கும் ஏர்செல் செல்லுலார் நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தானது.

இந்த புரிந்துணர்வ ஒப்பந்தத்தின்படி ஏர்செல் செல்லுலர் நிறுவனமானது சுமார் ரூ.78,00,000/– செலவில் காந்தி மண்டப வளாகத்தை செய்தித்துறை மற்றும் பொதுப்பணித்துறை ஆகியவற்றின் மேற்பார்வையில் இயற்கை எழில் கொஞ்சும் வனப்புடன் பொது மக்கள் பயனுற மேம்படுத்தும்.

தற்போது காந்தி மண்டப வளாகத்தில் சில இடங்களில் வளர்ந்துள்ள புதர்கள் காட்டுச் செடிகள் போன்றவற்றை அகற்றிவிட்டு வளாகத்திலுள்ள காலியிடங்களில் அழகிய புல்வெளிகள், புல்வெளிகளைச் சுற்றிலும் 10 ஆயிரம் அடியில் பல்வகை வண்ணச் செடிகளால் ஆன வேலிகள், அழகிய பனை வகை மரங்கள், மலர்ச் செடிகள் ஆகியவற்றை ஏர்செல் நிறுவனம் அமைக்கும். மேலும் ஏற்கெனவே உள்ள நீரூற்றுகளை அழகுற மாற்றியமைத்து நீரூற்று அடியில் வண்ண விளக்குகளை அமைக்கவும் ஏர்செல் நிறுவனம் நடவடிக்கை எடுக்கவுள்ளது. முதலில் 3 ஆண்டு காலமும், அந்நிறுவனத்தின் பணிகளை ஆய்வு செய்த பின்னர் காந்தி மண்டப வளாகத்தை மேம்படுத்த மேலும் கால நீட்டிப்பும் அந்நிறுவனத்திற்கு வழங்கப்படும்.

தமிழக அரசின் சார்பில் தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறையின் முதன்மைச் செயலாளர் (பொறுப்பு) திரு.ம.குற்றாலிங்கம், இ.ஆ.ப., ஏர்செல் செல்லுலார் நிறுவனத்தின் சார்பாக அதன் தலைமைச் செயல் அலுவலர் திரு.ஐ.வீ.ஜே.பிரதீப் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, சமூக நலத்துறை மற்றும் பொதுப்பணித்துறை (பொறுப்பு) முதன்மைச் செயலாளர் திரு.நா.ச பழனியப்பன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர் முனைவர். ஆ.சி.மோகன்தாஸ், இ.ஆ.ப., பொதுப்பணித்துறை அலுவலர்கள், தமிழக அரசின் இதர உயர் அலுவலர்கள் மற்றும் ஏர்செல் செல்லுலார் நிறுவனத்தின் செயல் இயக்குநர் திரு.கே.வி.ப.பாஸ்கரன் ஆகியோரும் உடனிந்தனர்.

❖ ❖ ❖

# மாநிலத் திட்டக் குழு தயாரித்துள்ள தமிழகத்திற்கான 11ஆவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையை

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் வெளியிட்டார்.

தமிழகத்திற்கான ஆண்டுத் திட்டங்களை உருவாக்குதல், ஐந்தாண்டுத் திட்டங்களை வடிவமைத்தல், பகுதி இரண்டின் கீழ் வரும் செயல் திட்டங்களுக்கு நிதி ஒப்புதல் அளித்தல், பல்வேறு முகமைகளின் வாயிலாக ஆய்வுகள் மேற்கொண்டு கொள்கை முடிவுகள் எடுக்க அரசுக்கு உதவுதல், மாநில நிலப் பயன்பாட்டு வாரியம் வழியாக நிலப் பயன்பாட்டு முறைகளை ஆய்வு செய்தல், மனித மேம்பாட்டு ஆதார மையத்தின் வழியாக மனித மேம்பாடுகள் குறித்த கருத்துகளை அரசுக்கு வழங்குதல் முதலிய பணிகளின்மூலம் தமிழகத்தின் முன்னேற்றத்தையும், வளர்ச்சியையும் விரைவுபடுத்திடும் நோக்கில், இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகத்தில் 1971 ஆம் ஆண்டு மேத் திங்கள் 25 ஆம் நாள் மாநிலத் திட்டக்குழு அமைக்கப்பட்டது. இது, மத்தியத் திட்டக்குழுவின் கொள்கைகளுக்கு முன்னுரிமை அளித்தும், மாநிலத்தின் தேவைகளை முதன்மைப்படுத்தியும் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்து திட்டங்களை உருவாக்கி வருகிறது.

2006இல் இந்த அரசு அமைந்த பின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மாநிலத் திட்டக்குழு திருத்தியமைக்கப்பட்டது. இக்குழு தற்போது 2007–2008 முதல் 2011–2012 வரையிலான 11ஆவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான அறிக்கையினை ஆங்கிலத்திலும் தமிழிலும் தயாரித்துள்ளது. தமிழ் மொழியில் உருவாக்கப்பட்டுள்ள 11ஆவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையை மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன் திட்டக்குழு உறுப்பினர்கள் முன்னிலையில் வழங்க, அதனை மாநிலத் திட்டக்குழுவின் தலைவராகிய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 3.7.2008 அன்று வெளியிட்டார்.

நடுவண் அரசின் திட்டக்குழு 11ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 9 விழுக்காடு வளர்ச்சி இலக்கினை இயைந்த வளர்ச்சி அணுகுமுறை வாயிலாக எய்திட வேண்டுமென முன்மொழிந்துள்ளது.

இத்திட்ட காலத்தில், வேளாண்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. வேளாண்துறையில் ஆண்டு வளர்ச்சி 4 விழுக்காட்டினை எட்ட வேண்டும் எனும் இலக்கு முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது.

10 ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்திற்கான மொத்தத் திட்ட அளவு 43 ஆயிரத்து 400 கோடி ரூபாய்; அது, 11ஆவது திட்டக் காலத்திற்கு இரு மடங்காக 85 ஆயிரத்து 344 ரூபாய் என உயர்த்தப்பட்டுள்ளது.

இதில், வேளாண்மை மற்றும் பாசனத்துறைக்கான திட்டச் செலவு 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் என்பதிலிருந்து 11 ஆயிரத்து 145 கோடி ரூபாய் எனவும், ஊரக வளர்ச்சித்துறைக்கு 5 ஆயிரத்து 400 கோடி ரூபாய் என்பது 10 ஆயிரத்து 241 கோடி ரூபாய் எனவும், மின்சாரத் துறைக்கு 5 ஆயிரத்து 800 கோடி ரூபாய் என்பது 10 ஆயிரத்து 743 கோடி ரூபாய் அளவுக்கும், தொழில் துறைக்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் என்பது 3 ஆயிரத்து 716 கோடி ரூபாய் எனவும், சாலைகள் மேம்பாட்டுத்



திட்டங்களுக்கு 5 ஆயிரத்து 900 கோடி ரூபாய் என்பது 11 ஆயிரத்து 647 கோடி ரூபாய் எனவும், சமூகப் பணிகளுக்கு 19 ஆயிரம் கோடி ரூபாய் என்பது 36ஆயிரத்து 733 கோடி ரூபாய் என்றும், இதரப் பணிகளுக்கான திட்டச் செலவு 800 கோடி ரூபாய் என்பது ஓராயிரத்து 121 கோடி ரூபாய் என்றும் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் மூலம் 11ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மைக் குறிக்கோளான மாநிலப் பொருளாதாரத்தில் ஆண்டு வளர்ச்சி வீதம் 9 விழுக்காட்டினைப் பெறுவதற்குரிய தொடர் முயற்சிகளைத் தமிழக அரசு மேற்கொள்ளும்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன், உறுப்பினர்கள் திரு. பெ. ஜெகதீசன், திரு. தமிழருவி மணியன், பேராசிரியர் ஜி. சிதம்பரம், திரு. லட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப., (ஓய்வு), முனைவர் இராம. சீனுவாசன், நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., உறுப்பினர்– செயலர் முனைவர் திருமதி. அனுராதா கட்டி இராஜீவன், இ.ஆ.ப., மாநில ஊரக சுகாதார இயக்கத்தின் மாநிலத் திட்ட இயக்குநர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். ❖

# 27 தமிழறிஞர்களின் நூல்கள் அரசுடைமை!
# 21 தமிழறிஞர்களின் மரபுரிமையர்க்கு
# 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் வழங்கினார்



சிறந்த தமிழ்ச் சான்றோர்களின் கருத்துகளும், சிந்தனைகளும் வளரும் தலைமுறைக்கு மட்டுமன்றி இனிவரும் தலைமுறைகளுக்கும் பயனளிக்கத்தக்க வகையில், அவர்களின் நூல்களை நாட்டுடைமையாக்கும் திட்டம் தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2006–இல் பரிதிமாற்கலைஞர், புலவர் குழந்தை, சிலம்புச்செல்வர் ம.பொ.சி முதலான 16 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்க்கு ஒரு கோடியே 23 இலட்சம் ரூபாயும், 2007–இல் ம. சிங்காரவேலர், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், அ.ச. ஞானசம்பந்தனார், குன்றக்குடி அடிகளார் முதலான 19 தமிழறிஞர்களின் நூல்கள் அரசுடைமையாக்கப்பட்டு அவர்களின் மரபுரிமையர்க்கு ஒரு கோடியே 75 இலட்சம் ரூபாயும் பரிவுத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில், கவிஞர் பெரியசாமித்தூரன், பேராசிரியர் க. வெள்ளை வாரணனார் உள்ளிட்ட 27 தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமை ஆக்கி, அவர்தம் மரபுரிமையர்களுக்கு மொத்தம் 1 கோடியே 65 இலட்சம் ரூபாய் பரிவுத்தொகை வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 21.5.2008 அன்று ஆணையிட்டார்.

அந்த ஆணையின்படி, நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்களைப் படைத்துள்ள 27 தமிழ் அறிஞர்களில், மரபுரிமையர் என்பதற்குரிய சான்றாவணங்களை இதுவரை அரசுக்கு வழங்கியுள்ள கவிஞர் பெரியசாமித் தூரன், பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் ஆகிய இருவருடைய படைப்புகளுக்காக, அவர்களின் மரபுரிமை யருக்குத் தலா பத்து இலட்சம் ரூபாய் வீதம் 20 இலட்சம் ரூபாய்; மகாவித்வான் ரா.ராகவையங்கார், திரு. உடுமலை நாராயணகவி, திரு. கு.மு. அண்ணல் தங்கோ, திரு. அவ்வை தி.க. சண்முகம், திரு. லா.ச. இராமாமிர்தம், திரு. வல்லிக்கண்ணன், திரு. நா. வானமாமலை, கவிஞர் புதுவைசிவம், திரு. அ. இராகவன், திரு. தொ.மு.சி. ரகுநாதன், திரு. சக்திதாசன் சுப்பிரமணியன், டாக்டர் ந. சஞ்சீவி, திரு. முல்லை முத்தையா, கவிஞர் எஸ். டி. சுந்தரம், கவிஞர் மீரா, புலவர் முகமது நயினார் மரைக்காயர், திரு. சு. சமுத்திரம், திரு. கோவை இளஞ்சேரன், பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் ஆகிய 19 தமிழறிஞர்களின் படைப்புகளுக்காக, அச்சான்றோர் களின் மரபுரிமையர்களுக்குத் தலா ஐந்து இலட்சம் ரூபாய் வீதம் 95 இலட்சம் ரூபாய்; ஆக மொத்தம் 21 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 28.6.2008 அன்று 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை வழங்கி மகிழ்ந்தார்.

அரசுடைமையாக்கப்பட்டுள்ள மற்ற 6 தமிழ் அறிஞர்களான பண்டிதர் க. அயோத்திதாசர், திரு. ஆபிரகாம் பண்டிதர், திரு. சதாவதானி செய்குத் தம்பி பாவலர், டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை, திரு.விந்தன், பேராசிரியர் ஆ. கார்மேகக்கோனார் ஆகிய 6 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு, அவர்கள் உரிய சான்றாவணங்களை வழங்கியபின் ஏற்கெனவே அரசு அறிவித்துள்ளபடி பரிவுத்தொகை வழங்கப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் பரிவுத்தொகையைப் பெற்றுக்கொண்ட தமிழ் அறிஞர்களின் மரபுரிமையர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியோடு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிவரும் மகத்தான தமிழ்த் தொண்டுகளில் அறிஞர்களின் நூல்களை அரசுடைமையாக்கும் இந்தத் திட்டம் தமிழ் அறிஞர்களின் குடும்பங்களைப் போற்றிப் பாதுகாக்கும் மிகச் சிறந்த திட்டம் என்று கூறி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்குத் தங்களுடைய நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

★ ★ ★

# ஒரகடத்தில் ரூ.2,000 கோடி முதலீட்டில் 3,000 பேருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கும் போட்டோ வோல்டாய்க் தொழில்நுட்பத் தொழிற்சாலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் முன்னிலையில்
புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது



**மோ**சர்பேயர் (Moser Baer) தொழில் நிறுவனம், நினைவாற்றல் சாதனங்கள், யு.பி.எஸ். டிரைவ்ஸ் போன்ற பொருள்களின் தயாரிப்பில் உலகின் புகழ்பெற்ற ஒரு முன்னணி நிறுவனமாகும். இந்நிறுவனம், போட்டோ வோல்டாய்க் தொழில்நுட்பத் தயாரிப்புகள், நேனோ (Nano) தொழில்நுட்பம், செமி கண்டக்டர்ஸ், ஊடகங்கள் மற்றும் பொழுதுபோக்குத் தொழில்களுக்கான சாதனங்கள் முதலியவற்றின் தயாரிப்பிலும் ஈடுபட்டுள்ளது.

சென்னைக்கு அருகே ஒரகடம் சிப்காட் உயர்தொழில்நுட்பச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் சிலிகான் அடிப்படையிலான போட்டோவோல்டாய்க் பொருள்களையும், நேனோ தொழில்நுட்பம் அடிப்படையிலான பொருள்களையும், நினைவாற்றல் சாதனங்கள் போன்றவைகளையும் தயாரிக்கும் தொழிற்சாலையை 2,000 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட முதலீட்டில் நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளது.

இத்தொழிற்சாலை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஏறத்தாழ 3,000 பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும். ஏற்கெனவே, திருவாளர்கள் சிக்னட் சோலார் நிறுவனத்துடன் 2,000 கோடி ரூபாய் முதலீட்டில் சிலிக்கான் அடிப்படையில் மெல்லிய போட்டோ வோல்டாய்க் பொருள்கள் தயாரிப்பதற்கான தொழிற் சாலையை நிறுவுவதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 17.3.2008 அன்று அரசு கையெழுத்திட்டுள்ளது. அதே வசதியுடன் மோசர்பேயர் தொழிற்சாலையும் அமைவதன் மூலம் சென்னை மின்னணு வன்பொருள் தயாரிப்பு மற்றும் போட்டோ வோல்டாய்க் பொருள்கள் தயாரிப்பில் முக்கிய மையமாக உருவெடுக்கும்.

9.6.2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் இத்தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசு சார்பில் தொழில்துறைச் செயலாளர் திரு. எம்.எஃப். பரூக்கி, இ.ஆ.ப., மோசர்பேயர் நிறுவனத்திற்காக, மோசர்பேயர் இந்தியா தொழிற்சாலையின் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர் திரு. தீபக்பூரி ஆகியோர் கையொப்பமிட்டனர். மாண்புமிகு மத்திய தொலைத் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. ஆ. இராசா, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தொழில்துறை கூடுதல் செயலாளர் திரு. தீரஜ்குமார், இ.ஆ.ப., தொழில் வழிகாட்டுதல் மையத்தின் இயக்குநர் திரு. எம். வேல்முருகன், மோசர்பேயர் நிறுவனத்தின் பிரதிநிதிகள் திரு. ஜி. தனஞ்செயன், திரு. ஜி. ராஜேஸ்வரன், திரு. எஸ். ராஜலிங்கம் ஆகியோர் இந்நிகழ்வின் போது உடன் இருந்தனர்.

❖ ❖ ❖

# ரூ.1,500 கோடி முதலீட்டில் காற்றாலை கியர்பாக்ஸ் தயாரிக்கும் புதிய தொழிற்சாலை



**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது**

பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த, 'ஹேன்சன் டிரான்ஸ்மிஷன்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனம்' மோட்டார் வாகனப் பயன்பாட்டுக்கு அல்லாத கியர் பாக்ஸ்களைத் தயாரிப்பதில் உலக அளவில் புகழ் பெற்றுள்ள இரண்டாவது பெரிய நிறுவனம். அதன் துணை நிறுவனமாக இந்தியாவில் செயல்படுவது ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனமாகும். காற்றாலைப் பயன்பாடுகளுக்கான மின்கடத்தி கியர் பாக்ஸ்களை வடிவமைத்து, உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் நிறுவனங்களுள் இந்நிறுவனம் முதன்மையானதாகும். இந்நிறுவனம் கோவை மாவட்டம் பல்லடம் வட்டம், கருமத்தம்பட்டி மற்றும் கிட்டாம்பாளையம் ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள சுஸ்லான் உள்கட்டமைப்புச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் காற்றாலை கியர்பாக்ஸ்கள் தயாரிக்கும் தொழிற்சாலையினைச் சிறப்புப் பொருளாதார மண்டல அமைப்பில் ஏற்படுத்திடத் திட்டமிட்டுள்ளது.

இத்தொழிற்சாலையின்மூலம் ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனம் ஐந்தாண்டுக் கால அளவில் 1,500 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகளைச் செய்யும்; ஏறத்தாழ 800 பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகளையும், 200 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்புகளையும் அளிக்கும்.

தமிழகத்தில் சென்னைக்கு அப்பால், தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதியான கோயம்புத்தூர் மாவட்டம், பல்லடம் வட்டத்தின் பொருளாதார நிலை மேம்படவும், மரபுசாரா எரிசக்தி உற்பத்திக்கான முதலீடுகளை ஈர்ப்பதில் இப்பகுதி பெற்றுள்ள முன்னேற்றங்கள் மேலும் வலுப்பெறவும் உதவும்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் 28.6.2008 அன்று நடைபெற்ற இந்தப் புதிய தொழிற்சாலை நிறுவப்படுவதற்கான, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், தமிழக அரசின் சார்பாக, தொழில்துறைச் செயலாளர், திரு. எம்.எப். ஃபரூக்கி, இ.ஆ.ப., அவர்களும், ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனத்தின் சார்பாக ஹேன்சன் டிரான்ஸ்மிஷன்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் மற்றும் ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனத்தின் இயக்குநர் திரு. இவன்பரம்ஸ் அவர்களும் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., மற்றும் ஹேன்சன் டிரைவ்ஸ் நிறுவனத்தின் மூத்த அலுவலர்கள் உடனிருந்தனர். ★

# ரூ.3,000 கோடி முதலீட்டில் சென்னை ஒரகடத்தில் சரக்கு வாகனத் தொழிற்சாலை அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் !



ஜெர்மன் நாட்டைச் சார்ந்த டெய்ம்லர்–ஏ.ஜி நிறுவனம், மெர்சிடிஸ் பென்ஸ், ஃப்ரைட்லைனர், ஃப்யூசோ, செட்ரா போன்ற உலகப் புகழ் வாய்ந்த சீருந்துகள், சரக்கு வாகனங்கள், ஊர்திகள் மற்றும் பேருந்துகளைத் தயாரிக்கும் நிறுவனமாகும். இந்தியாவைச் சார்ந்த மதிப்பு வாய்ந்த ஹீரோ குழுமம், உலக அளவில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் சைக்கிள்களைத் தயாரிக்கும் நிறுவனமாகும். இந்தியாவில் சரக்கு வாகனங்களைத் தயாரிப்பதற்காக, கூட்டு முயற்சியில் டெய்ம்லர்–ஏ.ஜி மற்றும் ஹீரோ குழுமம் ஆகிய இரண்டு நிறுவனங்களும் இணைந்து 'டெய்ம்லர் ஹீரோ வணிக வாகனங்கள் நிறுவனம்' என்னும் நிறுவனத்தை அமைத்துள்ளன.

இந்நிறுவனம் ஆண்டொன்றுக்கு 70 ஆயிரம் சரக்கு வாகனங்களைத் தயாரிக்கும் பொருட்டு, ஐந்தாண்டுக் கால அளவில் 3,000 கோடி ரூபாய்க்கும் மேலான முதலீட்டில் சிப்காட் ஒரகடம் தொழில் பூங்காவில் தனது தொழிற்சாலையை அமைக்கிறது. இந்த முதலீடு அடுத்த சில ஆண்டுகளில் 4,000 கோடி ரூபாய் அளவுக்கு உயரக்கூடும். இத்திட்டம் முழுத்திறனுடன் செயல்படும்போது ஏறத்தாழ 3,000 பேருக்கு நேரடியாகவும், 20 ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கும். ஜெர்மனி நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு இதுவரை வந்துள்ள முதலீடுகளில் இது பெரிய முதலீடாகும். ஜெர்மனியிலிருந்து வெளிநாட்டு நேரடி முதலீடுகளைத் தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பதில் உதவியாக அமையும். ஏற்கெனவே ஃப்ரான்ஸ் நாட்டைச் சார்ந்த ரெனால் நிறுவனமும், ஜப்பான் நாட்டைச் சார்ந்த நிசான் நிறுவனமும் இணைந்து, ஒரகடம் தொழில் பூங்காவில், ஒருங்கிணைந்த மோட்டார் வாகனத் தொழிற்சாலைத் திட்டம் ஒன்றினை அமைத்து வருகின்றன. மேலும், ஹுண்டாய் மோட்டார் இந்தியா நிறுவனமும், தனது உற்பத்தி வசதிகளைப் பெரிய அளவில் விரிவாக்கம் செய்து வருகிறது. டெய்ம்லர், ஹீரோ நிறுவனத்தால் சரக்கு வாகனத் தொழிற்சாலை அமைக்கப்படவுள்ளதால், சீருந்துகள் உள்ளிட்ட வணிக வாகனங்கள் தயாரிப்பில் சென்னையின் தகுதி மேலும் உயரும்.

இத்தொழிற்சாலை அமைக்கப்படுவதற்காக 7.7.2008 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர்

# டீசல் மீதான விற்பனை வரிக் குறைப்பு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு



கடந்த ஒரு மாத காலமாகவே ஏடுகளில் தொடர்ந்து செய்தியாக வந்தபடியே 4.6.2008 அன்றைய தினம் மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலையைத் தவிர்க்க முடியாத சூழ்நிலையில் உயர்த்தியதோடு, அதற்கான விளக்கத்தைப் பிரதமர் அவர்கள் நாட்டிற்கு அளித்திருக் கின்றார்கள். அந்த விளக்கத்தில் பெட்ரோலியப் பொருட்கள்மீது அதிக அளவில் விற்பனை வரி விதிக்கும் மாநிலங்கள் அந்த வரியைக் குறைத்து சுமையைப் பகிர்ந்து கொள்ள முன்வர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

2006– ஆம் ஆண்டிலேயே, மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்திய போது, விற்பனை வரியை 25 சதவீதத்திலிருந்து 23.43 சதவீதமாகக் குறைத்து அறிவித்து, அதனை நடைமுறைப்படுத்திய முதல் மாநில அரசு தமிழக அரசுதான். அதன் பின்னர் மத்திய அரசு டீசல் விலையை ஓரளவு குறைத்த போதும்கூட, தமிழக அரசு குறைத்த விற்பனை வரியை மீண்டும் உயர்த்தாததால் தமிழக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு இன்றளவும் ரூ.200 கோடி இழப்பு ஏற்பட்டு வருகிறது. இப்போது அவற்றின் விலையை மத்திய அரசு உயர்த்தியிருக்கும்போது விற்பனை வரியைக் குறைத்திடுமாறு தமிழக அரசுக்கு எதிர்க்கட்சித் தலைவர் ஜெயலலிதா அவர்கள் ஆலோசனை கூறியுள்ளார். அவரது ஆலோசனையை அலட்சியப்படுத்தாமல், ஏற்கெனவே 2006 ஆம் ஆண்டு விற்பனை வரியைக் குறைத்தது போலவே இப்போதும் டீசல் மீதான விற்பனை வரியில் 2 சதவீதம் குறைப்பதென தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. இதனால் ஆண்டுக்கு மேலும் 260 கோடி ரூபாய் தமிழக அரசுக்கு இழப்பு ஏற்படும்.

ஆனால் 2004 ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர், மூத்த காங்கிரஸ் தலைவர், திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்கள் 19.11.2004 அன்று அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதாவை நோக்கி விற்பனை வரியை டீசலுக்குக் குறைக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்தபோது, முதல்வராக இருந்து ஜெயலலிதா சொன்ன பதில் வருமாறு :–

“இப்போது திரு. எஸ். ஆர். பி. மாநில அரசுக்கு அறிவுரை வழங்குகிறார். அதாவது மாநில அரசு தனக்கு வருகின்ற வருவாயை எப்படி இழக்க வேண்டும், இதனால் இந்த மாநிலம் எப்படி பொருளாதாரச் சிக்கலில் மாட்டிக் கொள்ள வேண்டுமென்று அறிவுரை வழங்குகிறார். இந்த யோசனையை எஸ். ஆர். பி. அவர்கள் காங்கிரஸ் ஆளும் மாநிலங்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்”.

அன்று திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்களுக்கு இவ்வாறு பதில் சொன்ன முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாதான் – இப்போது விற்பனை வரியைக் குறைக்க அறிவுரை வழங்கியிருக்கிறார். முடிந்த அளவு நாமும் அதனைப் பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பாகத் தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு. எம்.எப். ஃபரூக்கி, இ.ஆ.ப., ஜெர்மனியின் டெய்ம்லர்–ஏ.ஜி நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் இயக்குநர் குழு உறுப்பினர் திரு. ஆன்ட்ரியாஸ் ரென்சியர், அவர்களும் ஹீரோ குழுமத்தின் சார்பாக ஹீரோ நிறுவனப் பணிகளின் தலைவர் திரு. சுனில் காந்த் முஞ்சால் அவர்களும், டெய்ம்லர்–ஹீரோ வணிக வாகனங்கள் நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் திரு. மார்க் லிஸ்டோசெட்டா அவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், தலைமைச் செயலாளர், திரு. எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., சிப்காட் மேலாண்மை இயக்குநர் திரு. என். கோவிந்தன், இ.ஆ.ப., ஆகியோரும் டெய்ம்லர்–ஏ.ஜி ஹீரோ குழுமத்தின் மூத்த அலுவலர்களும் உடன் இருந்தனர்.

* * *

# தமிழகம் முழுவதிலும் 3,784 கிலோ மீட்டர் நீளச் சாலைகளையும் 284 பாலங்களையும் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிகளுக்கு 905 கோடி ரூபாய் அனுமதி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆணை.

தமிழகத்திலுள்ள சாலைகளை மேம்படுத்துவதிலும், வலுப்படுத்துவதிலும் இவ்வரசு முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. நடப்பு ஆண்டில் (2008 – 2009) ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்,

819 கிலோமீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளையும், அவற்றில் 98 பாலங்களையும் 353 கோடியே 67 இலட்சம் ரூபாய் செலவிலும்,

788 கிலோமீட்டர் நீளமுள்ள மாநில முக்கியச் சாலைகளையும், அவற்றில் 55 பாலங்களையும் 236 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவிலும்,

1,354 கிலோமீட்டர் நீளமுள்ள மாவட்ட இதர சாலைகளையும் அவற்றில் 99 பாலங்களையும் 204 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிலும்,

823 கிலோமீட்டர் நீளமுள்ள மாவட்ட இதர சாலைகளையும் (ஆதி திராவிட குடியிருப்புச் சாலைகள் திட்டம்), அவற்றில் 32 பாலங்களையும் 110 கோடியே 64 இலட்சம் ரூபாய் செலவிலும்,

– ஆக மொத்தம் 3,784 கிலோமீட்டர் நீளச் சாலைகளை அவற்றில் சிறிய மற்றும் பெரிய பாலங்களாக அமையும் 284 பாலங்களுடன் 905 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் அகலப்படுத்தி, மேம்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இதன் மூலம் ஏறத்தாழ 364 கிலோமீட்டர் நீள மாநில நெடுஞ்சாலைகளில் அகலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகள் நிறைவேறியபின் திருவாரூர், நாமக்கல், கரூர், ஈரோடு, நீலகிரி, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, கோயம்புத்தூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், திருச்சி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம், கன்னியாகுமரி ஆகிய 17 மாவட்டங்களில் அனைத்து மாநில நெடுஞ்சாலைகளும், இடைவழித் தடம் அல்லது இருவழித் தடம் கொண்டவையாக அகலப்படுத்தப்படும்.

இதனால் இம்மாவட்டங்களில் மாநில நெடுஞ்சாலைகளில் ஒருவழித் தடமே இல்லாத நிலை உருவாகும். இவையல்லாமல் 455 கிலோமீட்டர் நீள மாநில நெடுஞ்சாலைகளும் நடப்பாண்டில் மேம்படுத்தப்படும்.

மாவட்ட முக்கியச் சாலைகளில் 291 கிலோமீட்டர் நீளச் சாலைகள் அகலப்படுத்தப் படுவதுடன் 497 கிலோமீட்டர் நீளச் சாலைகள் மேம்படுத்தப்பட்டு வலுப்படுத்தப்படும். மாவட்ட இதர சாலைகளில் 1,259 கிலோமீட்டர் நீளச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளும், 95 கிலோமீட்டர் நீளச் சாலைகளை அகலப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். இத்துடன், 44 பேருந்து நிறுத்தங்கள் அமைத்தல் (bus lay byes), 34 விபத்துப் பகுதிகளை மேம்படுத்தும் பணிகளும்;

2006இல் இந்த அரசு அமைந்தபின், அறிமுகப்படுத்தப்பட்ட புதிய திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளுக்குச் செல்லும் மாவட்ட இதர சாலைகளில் 823 கிலோ மீட்டர் நீளச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளும்,

மேலும், இவ்வாண்டு அரசு அறிவித்தவாறு 27 கோடியே 7 இலட்சம் ரூபாய் செலவில் சுற்றுலாத் தலங்களுக்குச் செல்லும் 81 கிலோமீட்டர் நீளச் சாலைகளை மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

மொத்தம், 905 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான இந்த சாலைப்பணிகள் அனைத்தையும் விரைவில் தொடங்கி, நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் நிறைவேற்றி முடிக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். □

# நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நீடித்த கட்டமைப்பு வசதிகளுக்காக



# ஜெர்மன் நாட்டு வங்கியின் நிதியுதவி பெற முடிவு

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது.

தமிழக அரசு, தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு நிதியம் மூலமாக உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நீண்டகால அடிப்படையில் கடன் வசதி அளித்து வருகிறது. உலக வங்கி, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி போன்ற பல்வேறு அரசு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறப்படுகிறது.

உலக வங்கி நிதியுதவியுடன் மூன்றாவது தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் சுமார் ரூ.1,884 கோடி (434 மில்லியன் அமெரிக்க டாலர்) திட்ட மதிப்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 35 நகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள், திருநெல்வேலி குடிநீர்த் திட்டம், குறிச்சி –குனியமுத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், வடவள்ளி–கவுண்டம்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் சாலைகள், பேருந்து நிலையங்கள், திடக்கழிவு மேலாண்மைத் திட்டங்கள் போன்ற நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்கள் தமிழகமெங்கும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியிடமிருந்து சுமார் ரூபாய் 340 கோடி (8,551 மில்லியன் ஜப்பானிய யென்) கடன் பெறுவதற்கான ஒப்பந்தம் மார்ச்சு 10, 2008 அன்று கையொப்பமிடப்பட்டது. திருச்சி குடிநீர்த் திட்டம் மற்றும் ஆறு நகரங்களில் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் இந்த நிதியுதவியுடன் செயல்படுத்தப் படவுள்ளது.

உலக வங்கி மற்றும் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி தவிர தற்போது KFW எனப்படும் ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனத்திடமிருந்தும் கடனுதவி பெற முடிவு செய்யப்பட்டு உள்ளது.

அதன் தொடர்ச்சியாக இந்நிறுவனத்திடமிருந்து சுமார் ரூபாய் 534 கோடி (77 மில்லியன் யூரோ) நிதியுதவி பெறுவதற்கான ஒப்பந்தம் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 8.7.2008 அன்று கையொப்பமிடப்பட்டுள்ளது. இந்த நிதியுதவி மூன்று பகுதிகளாக வழங்கப்படவுள்ளது.

முதல் பகுதியாக, நகர்ப்புற கட்டமைப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கடன் உதவியாக வழங்குவதற்கு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
தியாகிகள் தினத்தன்று, சென்னை - காந்தி மண்டப வளாகத்தில்
தியாகி செண்பகராமன் சிலையினைத் திறந்து வைத்தார்.
மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் மற்றும்
செய்தித்துறை இயக்குநர் முனைவர் ஆ.சி. மோகன்தாஸ் ஆகியோர் உள்ளனர்.(17.7.2008)

ரூபாய் 450 கோடி (65 மில்லியன் யூரோ) ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியைக் கொண்டு குடிநீர் மேம்பாடு, பாதாளச் சாக்கடைத் திட்டம், சாலை வசதி போன்ற திட்டங்களை நிறைவேற்ற முடியும். இதில் கடனுதவியாக ரூ. 300 கோடியும், மானியமாக ரூ.150 கோடியும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும். இதன் வட்டி விகிதம் LIBOR விகிதத்திலிருந்து 0.40 சதவிகிதம் குறைவாக இருக்கும். இதன் திரும்பச் செலுத்தும் காலம், மூன்று ஆண்டுகள் சலுகை உட்பட மொத்தம் 12 ஆண்டுகள். இந்தத் திட்டத்தினை நிறைவேற்றும் காலம் 2008–2009 முதல் சுமார் 5 ஆண்டுகள் ஆகும்.

இரண்டாம் பகுதியாக, சிறிய மற்றும் நடுத்தர நகரங்கள் கடன் பத்திரங்கள் மூலமாக நிதி திரட்டுவதற்கு ஏதுவாக சுமார் ரூபாய் 70 கோடி (10 மில்லியன் யூரோ) அளவிற்கு ஒரு பொது நிதி ஆதார அமைப்புக்குக் கடனாக வழங்கப்படுகிறது. இந்த ஒருங்கிணைந்த நிதி ஆதார அமைப்பின் (Master Financing Indenture) மூலமாக உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையிலிருந்து கடன் பத்திர வெளியீட்டின் மூலமாக சுமார் ரூபாய் 110 கோடி வரை நிதி திரட்ட முடியும். இந்த நிதியைக் கொண்டு சுமார் ரூபாய் 200 கோடி மதிப்பீட்டிலான திட்டங்களை நிறைவேற்ற முடியும். மீதமுள்ள ரூபாய் 20 கோடி உள்ளாட்சி அமைப்புகள் முதலீடு செய்ய வேண்டும். இதனுடைய வட்டி விகிதம் சுமார் 0.75 சதவிகிதம் ஆகும். இதன் திரும்பச் செலுத்தும் காலம், 10 ஆண்டுகள் சலுகைக் காலம் உட்பட மொத்தம் 40 ஆண்டுகள் ஆகும்.

மூன்றாம் பகுதியாக, சுமார் ரூபாய் 14 கோடி (2 மில்லியன் யூரோ) தொழில்நுட்பத் திறனைப் பெருக்கிக் கொள்வதற்காக மானியமாக வழங்கப்படுகிறது.

இந்த நிதியுதவிக்கான ஒப்பந்தங்கள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் இந்திய அரசின் நிதித்துறை இணைச் செயலாளர் திரு. குமார் சஞ்சய் கிருஷ்ணா, KfW–வின் டில்லி தலைமை அலுவலக இயக்குநர் திரு. கிருஸ்டியன் காஸ், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் திரு. க. தீனபந்து, இ.ஆ.ப., TNUIFSL மேலாண் இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர், திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., ஆகியோர்களுக்கிடையே இன்று கையொப்பமானது.

இந்நிகழ்ச்சியின்போது தமிழ்நாடு அரசு நிதித்துறை முதன்மைச் செயலர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., நகராட்சி நிருவாகத்துறை ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர், திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர். ❖

# சிக்கனம் வீட்டைக் காக்கும் சிறுசேமிப்பு நாட்டைக் காக்கும்



**அ. இரகுமான்கான்**, பி.ஏ., பி.எல்.,
துணைத்தலைவர்,
மாநில தேசிய சேமிப்பு ஆலோசனைக்குழு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையின்கீழ் உள்ள பொற்கால ஆட்சியில் இந்த இரண்டு ஆண்டுகளில் எல்லாத் துறைகளிலும் சரித்திரச் சாதனைகள் படைக்கப்பட்டதைப் போல அவரின் தலைமையிலுள்ள சிறுசேமிப்புத் துறையிலும் அவரது வழிகாட்டுதலின் மூலம் சிறுசேமிப்புத் துறையின் திட்டங்கள் சிறப்பாக நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சிறுசேமிப்பு மாநில அரசின் மிகச்சிறந்த நிதி ஆதாரமாகக் கருதப்படுகிறது. சிறுசேமிப்புத் துறையின் மூலம் வசூலிக்கப்படும் தொகை, மாநில அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. மாநில அரசின் நிதிப் பற்றாக்குறையைச் சரிசெய்யவும் இது உதவுகிறது. சிறுசேமிப்புத் திட்டங்கள் மூலம் திரட்டப்படும் நிதி முழுவதுமாக மத்திய அரசால் மாநில அரசுகளுக்கு நீண்ட காலக் கடனாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு, மாவட்டங்களுக்குச் சிறுசேமிப்பு வசூல் இலக்கினை நிர்ணயித்து, மாவட்ட அதிகாரிகளின் மூலம் பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டப்படுகிறது. சிறுசேமிப்பு நிதிமூலம் சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி, மருத்துவ வசதி போன்ற பல்வேறு அடிப்படை வளர்ச்சித் திட்டங்களும் சமுதாய நலத்திட்டங்களும் அமுல் படுத்தப்பட்டுவருகிறது. சிறுசேமிப்பு நாட்டுக்கு மட்டுமல்லாது வீட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் பயன்படுகிறது.

சிலர் சிக்கனத்தைக் கஞ்சத்தனமாகக் கருதுகிறார்கள். ஆனால் சிக்கனம் என்பது வேறு; கஞ்சத்தனம் என்பது வேறு. நம்முடைய அத்தியாவசியமான செலவினங்களைக்கூட செய்யாமல் இருப்பது கஞ்சத்தனம் ஆகும். ஆனால் அவசியமான செலவினங்களை மேற்கொண்டு அநாவசியமான செலவினங்களைத் தவிர்த்து அந்தத் தொகையை தன்னுடைய எதிர்கால வாழ்விற்காகச் சேமிப்பது சிக்கனமாகும்.

தந்தை பெரியார் அவர்கள் சிக்கனத்தைப் பிறருக்கு வலியுறுத்தியதோடல்லாமல் தனது வாழ்க்கையிலும் கடைப்பிடித்தார். அவர் பல ஆண்டுகளுக்கு முன் ஒரு திருமண விழாவிற்குச் சென்றார். விருந்து முடிந்து அவர் கை கழுவுவதற்காக வந்தபோது ஒருவர் தேவைக்கு அதிகமாக ஒரு குவளையிலிருந்து தண்ணீரை எடுத்து அவர் கைகளைக் கழுவுவதற்காக ஊற்றிக்கொண்டே இருந்தார். அப்பொழுது தந்தை பெரியார் அவர்கள் அவரை தடுத்து அவரிடம் "தண்ணீரை நீங்கள் சாதாரணமாக நினைத்ததால்தான் இவ்வாறு மூன்று நான்கு முறை குவளையில் இருந்து தண்ணீரை ஊற்றுகிறீர்கள். இதுவே நெய்யாகவோ அல்லது பாலாகவோ இருந்திருந்தால் இவ்வாறு ஊற்றுவீர்களா? எதிர்காலத்தில் தண்ணீரை விலை கொடுத்து வாங்கவேண்டிய சூழ்நிலை வரும். எனவே இப்பொழுதே தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்" என்று கூறினார். இதேபோல் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களும் தந்தை பெரியார் வழியில் நின்று சிக்கனத்தைக் கடைபிடித்து வருபவராவார்.

சேமிப்பு மற்றும் சிக்கனத்தின் அவசியத்தைப்பற்றி வான்மறை தந்த வள்ளுவர் அவர்களும் "எல்லை கடந்த செலவு இல்லாமல் இருக்குமேயானால் வரவு குறைவாக இருப்பதால் கேடு எதுவுமில்லை" என்பதை

"ஆகாறு அளவிட்டது ஆயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை" – குறள் எண் : 478

என்ற திருக்குறள் மூலம் தெளிவு படுத்தியுள்ளார்.

மேலும், அவ்வை மூதாட்டியார், சேமிக்காமல் வரவுக்கு மிஞ்சி செலவு செய்பவர்கள் வாழ்க்கையில் எத்தகைய இன்னல்களைச் சந்திக்க நேரிடும் என்பதை அழகான தமிழ்ப் பாடல் மூலம் விளக்கி இருக்கிறார்.

"ஆன முதலின் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டு போன திசை
எல்லோருக்கும் கள்ளனாய் ஏழ் பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு" என்கிறார்.




மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள், 8.7.2008 அன்று சென்னையில் நடைபெற்ற அயோத்திதாச பண்டிதர் அவர்களால் தொடங்கப்பட்ட "ஒரு பைசாத் தமிழன்" வார இதழ் – நூற்றாண்டு விழாவில், விழா பேருரையாற்றினார்கள். மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ. தமிழரசி அவர்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உள்ளனர்.

சிக்கனமாக இருந்து சேமிப்பதன்மூலம் எதிர்பாராமல் ஏற்படும் திடீர் செலவினங்களுக்கு அடுத்தவரை எதிர்பார்க்காமல் நமது சேமிப்பு நிதியிலிருந்தே பணத்தை எடுத்துக்கொள்ளலாம். குழந்தைகளின் மேற்படிப்பு, திருமணம், மருத்துவமனைச் செலவினங்கள் போன்ற எதிர்கால அத்தியாவசிய செலவினங்களுக்கு நமது சேமிப்பே நமக்கு உற்ற நண்பனாகக் கைகொடுக்கும்.

இளமையில் சேமிக்காவிட்டால் முதுமையில் மிகவும் அல்லல்பட நேரிடும்.

"மகன் கட்டிய வீட்டின் பெயர் அன்னை இல்லம்
அன்னை இருப்பதோ முதியோர் இல்லம்"

முதுமையில் பெற்ற பிள்ளைகள் கைவிட்டாலும், முதியோர் இல்லங்களை நாடாமல் நம்முடைய சேமிப்பைக்கொண்டே நமது பிற்கால வாழ்க்கையை நல்ல முறையில் மிக்க மதிப்புடனும், மன அமைதியுடனும் அமைத்துக்கொள்ளலாம். திடீர் உடல் நலக்குறைவு, விபத்துகள் போன்றவற்றிற்கு நம் சேமிப்பே நம்மைக் காக்கும் கரங்களாக இருக்கும். குழந்தைகள் படிப்பு, வீடு, வாகனம் வாங்குதல் போன்றவற்றிற்கு நம் சேமிப்பு நிதியிலிருந்தே செலவை மேற்கொள்ளலாம். நமது சிறுசேமிப்பு நமக்கு எந்நாளும் தேவையின் போது கைகொடுக்கும்.

**சிறுசேமிப்புத் திட்டங்கள்**

சமுதாயத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் ஏற்ற சேமிப்புத் திட்டங்கள் சிறுசேமிப்புத்துறையில் உள்ளன அவை வருமாறு:

1. விவசாயிகள் மற்றும் அனைத்துத் தரப்பு மக்களுக்கு – முதலீடு இரட்டிப்பாக, கிஸான் விகாஸ் பத்திரம் (KVP)- Kissan Vikas Patram. முதலீடு, 8 வருடம் 7 மாதங்களில் இரட்டிப்பாகும்.

2. வருமான வரிச்சலுகை பெற திட்டமிடுவோருக்கு, தேசிய சேமிப்புப் பத்திரம் 8ஆவது வெளியீடு (NSC-National Savings Certificate) மற்றும் வட்டி 8 சதவீதம் பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு (PPF - Public Provident Fund), வட்டி 8 சதவீதம்.

3. மாதாந்திர வருமானமாக வட்டிபெற விரும்புவோருக்கு, ஓய்வு பெற்றோருக்கு மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்கான சேமிப்புத் திட்டம், அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம் (POMIS Post Office Monthly Income Scheme) வட்டி 8 சதவீதம் + வட்டி 5 சதவீதம் மற்றும் மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS - Senior Citizen Savings Scheme), போனஸ் 9 சதவீதம்.

4. மாதந்தோறும் சிறுகச் சிறுக சேமிக்க விரும்பும் கிராமப்புர மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் மற்றும் நடுத்தர மக்கள், குடும்பத் தலைவி ஆகியோருக்கு, அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD - Post Office Recurring Deposit Scheme) வட்டி 8 சதவீதம்.

5. அஞ்சலக கால வைப்பு நிதி செய்ய விரும்புவோருக்கு (POTD - Post Office Time Deposit) 1) ஓராண்டு– 6.25 சதவீதமும் 2) இரண்டாண்டுகள்– 6.50 சதவீதமும் 3) மூன்றாண்டுகள் மற்றும் – 7.25 சதவீதமும் 4) ஐந்தாண்டுகள் வைப்புக் கால முதலீடு – 7.50 சதவீதமும்.

6. வட்டியுடன் அன்றாடக் கணக்கு வைக்க விரும்புவோருக்கு, அஞ்சலக சேமிப்பு வங்கிக் கணக்கு (Post Office Savings Bank account)- 3.50 சதவீதம்.

மேற்கண்ட சிறுசேமிப்புத் திட்டங்கள் அஞ்சலகங்களில் செயல்படுத்தப்படுகின்றன. பொது சேமநல நிதித் திட்டம் மட்டும் அஞ்சலகங்களில் மட்டுமன்றி அனைத்து பாரத ஸ்டேட் வங்கிக் கிளைகள் மற்றும் சில தேசிய வங்கிகளிலும் செயல்படுத்தப்படுகின்றன.

## சிறுசேமிப்பு முகவர்கள்

சிறுசேமிப்பு வசூலை அதிகரிப்பதில் முகவர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். சிறுசேமிப்பு முகவர்கள் மூன்று வகைப்படுகின்றனர்.

1. நிலை முகவர்கள் (SAS) அஞ்சலக மாத வருவாய்த் திட்டம் (POMIS), அஞ்சலக கால வைப்புத் திட்டம் (POTD) தேசிய சேமிப்புப் பத்திரம் 8ஆவது வெளியீடு (NSC), மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS), கிசான் விகாஸ் பத்திரம் (KVP) 1% 0.5%.

2. மகளிர் முகவர்கள் (MPKBY) அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD) 4% 2%.

3. பொது சேம நல நிதித் திட்ட முகவர்கள் (PPF) பொது சேமநல நிதித் திட்டம் (PPF) 1%.

இம் முகவர்கள், துணை இயக்குநர், சென்னை மாநகராட்சி / மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள்(சிறுசேமிப்பு) / வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரால் நியமிக்கப்படுவர்.

முகவர்களாக நியமனம் பெற கீழ்க்கண்ட தகுதிகள் பெற்றிருக்க வேண்டும்.

அ. அவர்கள் 10ஆம் வகுப்பு தேர்வு பெற்றிருக்க வேண்டும்.

ஆ. அவர்கள் அரசு அலுவலராக இருக்கக் கூடாது.

இ. அவர்களின் நெருங்கிய உறவினர்கள் அஞ்சலகங்களில் பணியிலிருக்கக் கூடாது.

ஈ. நிலை முகவர்கள் (SAS) மற்றும் பி.பி.எப் (PPF) முகவர்கள் இருபாலருமாவர். ஆனால், மகளிர் முகவர்களாக முற்றிலும் மகளிரே நியமனம் பெறுகின்றனர்.

அஞ்சலகத் தொடர் வைப்புத்திட்டம் முழுவதும், மகளிர் முகவர்களாக இருந்து செயல்படுத்தும் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலம் சிறுசேமிப்புத்துறைக்கு பலகோடி ரூபாய் வருமானம் வந்துகொண்டிருக்கிறது. இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாட்டில் சுமார் 50,000 முகவர்கள் முதலீட்டாளர்களுக்கு சேவை செய்கின்றனர். இதில் 30,000 பேர் மகளிர் முகவர்கள் ஆவர். இவர்கள் பொதுமக்களிடம் தொடர் வைப்புத் திட்டத்தை ஊக்குவித்து முதலீடு திரட்டுவதில் சேவை புரிகின்றனர். முகவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழக அரசும், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத வகையில் சிறுசேமிப்பு முகவர்களுக்கு இலவசக் காப்புறுதித் திட்டத்தை (Group Insurance Scheme) அறிவித்துள்ளது.

கடந்த காலத்தில் அரசுக்கு கோடிக்கணக்கான நிதி சிறுசேமிப்பின் மூலம் திரட்டப்பட்டது. சிறுசேமிப்புத் திட்டங்களுக்கு அதிக வட்டியினைப் பெற்றுத்தரவும் முகவர்களுக்கு உரிய ஊக்கத்தொகையை அதிகப்படுத்தவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

சிறுசேமிப்புத்துறையின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மாவட்ட ஆட்சியர் மூலம் மாவட்ட நிருவாகத்தில் உள்ள அதிகாரிகளுக்கு சிறுசேமிப்பு வசூல் இலக்கு நிர்ணயிக்கப்படுகிறது. இந்த வசூல் இலக்கினை அதிகாரிகள் அனைவரும் திரட்டித்தர ஒத்துழைப்பு நல்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முகவர்களுக்கு அவர்கள் திரட்டித்தரும் சிறுசேமிப்பு நிதிக்காக மத்திய அரசும், மாநில அரசும் தரகுத் தொகையும், ஊக்கத்தொகையும், ஊக்கப்பரிசுகளும் வழங்குகின்றன. சிறுசேமிப்பு நிதிமூலம் உள்ளாட்சி அமைப்புகளுக்கு உட்பட்ட பகுதிகளில் சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி, மருத்துவ வசதி போன்ற பல்வேறு அடிப்படை வளர்ச்சித் திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுமக்களில் பலர் அதிக வட்டி கிடைக்கும் என்ற பேராசையின் காரணமாகப் பல தனியார் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்து தங்களது பணத்தை இழக்கிறார்கள். இது போலல்லாமல் தங்கள் முதலீட்டிற்கும் வட்டிக்கும் முழுப் பாதுகாப்புத் தருவது சிறுசேமிப்புத் திட்டங்கள்தான். சிறுசேமிப்பு நாட்டுக்கு மட்டுமல்லாது வீட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் பயன்படுகிறது. எனவே அனைவரும் வளமாய் வாழ மக்கள் சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். "சிக்கனம் வீட்டைக் காக்கும் சிறுசேமிப்பு நாட்டைக் காக்கும்" என்ற வாசகத்தை என்றும் நாம் நினைவில் நிறுத்துவோம். ★

# நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவர் கல்வி உதவித்தொகை திட்டம்

## கல்வி உதவித் தொகை

தமிழ்நாட்டில் தற்போது நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் கட்டுப்பாட்டில் 75 உயர்நிலைப் பள்ளிகளும், 76 மேல்நிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியரை ஊக்குவிக்க இதுகாறும் திட்டம் ஏதும் இல்லாதிருந்தது. இந்த அரசு பதவியேற்றவுடன் இதனைக் கனிவுடன் பரிசீலித்து நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியரை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் 2007 – 2008 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் ஓர் அறிவிப்பினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். அதன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வுகளில் முதலாவதாக வரும் 25 மாணவ, மாணவியர்க்கு பரிசுத் தொகை ரூ.10 ஆயிரமும், பாராட்டுப் பத்திரமும் வழங்குவதோடு அவர்களுள் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு பட்டப்படிப்பு மேற்கொள்ள உதவித்தொகையும் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.



மாணவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை மற்றும் கல்வி உதவித் தொகை ஆகிய செலவினங்களை மேற்கொள்ள நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் கல்வி நிதியிலிருந்து ரூ.2.53 கோடி பங்களிப்பாகப் பெற்று "நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவர் கல்வி உதவி நிதி" என்னும் பெயரில் "பொது நிதி" ஒன்று ஏப்ரல் 2008ல் ஏற்படுத்தப்பட்டது. அரசு இந்நிதிக்கு ரூ.2 கோடியினை இணை மானியமாக வழங்கியுள்ளது. மேலே தெரிவித்துள்ளவாறு ரூ.2.53 கோடியை முதலீடாகக் கொண்டு பொது நிதி ஒன்று உருவாக்கப்பட்டு அரசு நிதி நிறுவனமான டுபிட்கோ (TUFIDCO) விடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. டுபிட்கோ நிறுவனம் இப்பொழுது நிதியினை நிருவகித்து வரும். இந்நிதியிலிருந்து ஈட்டப்படும் வட்டியினைப் பயன்படுத்தி இத்திட்டத்திற்கான செலவினங்கள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தினை செயல்படுத்திட மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## உயர்மட்ட தேர்வுக் குழு

அரசுத் தேர்வுகள் துறை இயக்குநரிடமிருந்து 2008 ஆம் ஆண்டு மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் முதலாவதாக வந்த 25 மாணவர்களின் தரவரிசைப் பட்டியல் பெறப்பட்டது. இவ்விரண்டு தேர்வுகளிலும் 25 ஆவது தரவரிசையில் உள்ள மாணவர் பெற்றுள்ள அதே மதிப்பெண்ணை 26 ஆவது மாணவரும் பெற்றுள்ளதால் தலா 26 மாணவ, மாணவியர் இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையிலான குழுவின் ஒப்புதலினைப் பெற்று ஒவ்வொரு மாணவ, மாணவியருக்கும் தலா ரூ.10,000/– பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் 30.6.2008

அன்று வழங்கப்பட்டது. மேலும் பன்னிரெண்டாம் வகுப்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவ, மாணவியரில் பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கு அவர்கள் பட்டப்படிப்பினை தொடர்வதற்கு உதவும் வகையில் அரசுக் கல்லூரிகளில் வசூலிக்கப்படும் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் மற்றும் உணவுக் கட்டணம் முழுவதையும் இப்பொது நிதியிலிருந்து வழங்கிட முடிவு செய்யப்பட்டு மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும்.

**மாநகராட்சி / நகராட்சிப் பள்ளி மாணவ– மாணவியரின் சாதனைகள்**

2008ஆம் ஆண்டு நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு தேர்வு எழுதிய மொத்தம் 20,338 மாணவ, மாணவியரில் 76.34 சதவீதத்தினரும், பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்வு எழுதிய மொத்தம் 14,467 மாணவ, மாணவியரில் 80.83 சதவீதத்தினரும் தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். இத்தேர்வுகளில் மாணவர்களை விட மாணவியர் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றுள்ளனர். பத்தாம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் முதலாவதாக வந்துள்ள 26 மாணவ, மாணவியரில் 23 பேர் மாணவியர், 3 பேர் மாணவர்கள்.

அதேபோன்று பன்னிரெண்டாம் வகுப்பு பள்ளி இறுதித் தேர்வில் முதலாவதாக வந்துள்ள 26 மாணவ, மாணவியரில், 22 பேர் மாணவியர், 4 பேர் மாணவர்கள். பரிசு பெறும் 52 மாணவர்களில் 9 மாணவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள், 6 மாணவர்கள் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள், 35 மாணவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள், ஒருவர் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்தவர் மற்றும் ஒருவர் இதர வகுப்பைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இம்மாணவர்கள் அனைவரும் தனியார் பள்ளிகளுக்கு நிகராக அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். பத்தாம் வகுப்பில் முதலிடம் பெற்ற செல்வி சு. தையல் நாயகி 500–க்கு 487 மதிப்பெண்களும், 25ஆவது இடத்தைப் பெற்றுள்ள மாணவி து. கௌசல்யா 500–க்கு 480 மதிப்பெண்களும், பன்னிரெண்டாம் வகுப்பில் முதலிடம் பெற்ற செல்வி ச.வைஷ்ணவி 1,200–க்கு 1,142 மதிப்பெண்களும், 25ஆவது இடத்தைப் பெற்ற மாணவி, இர. ப்ரியதர்ஷிணி 1,200–க்கு 1094 மதிப்பெண்களும் பெற்றுள்ளனர். என்பது மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் கல்வியின் தரம் உயர்ந்துள்ளது என்பதற்கு சான்றாகும். மேலும் இவ்வாண்டு கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர், மாநகராட்சிப் பள்ளிகளில் அதிகமான அளவில் மாணவ, மாணவியர் முதலிடம் பெற்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**கட்டமைப்பு வசதி மேம்பாடு**

அரசு கொண்டு வந்துள்ள இந்தக் கல்வி உதவித் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளி மாணவர் கல்வி உதவித் தொகை பெறுவர் என்பதுடன் இத்திட்டம் அவர்களைப் பெருமளவில் ஊக்குவிக்கும் என்பது திண்ணமாகும். மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்த நடப்பாண்டில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் வகுப்பறைகள் கட்டுதல், ஆய்வுக் கூடங்கள் அமைத்தல் மற்றும் விளையாட்டு மைதானங்கள் ஏற்படுத்துதல் போன்ற கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**சாதனை புரிந்த மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத்தொகை மற்றும் பாராட்டுப் பத்திரம்**

2008 ஆம் ஆண்டு நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பத்தாம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 26 நபர்கள் மற்றும் +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 26 நபர்கள் ஆக மொத்தம் 52 மாணவ, மாணவியருக்கு தலா ரூ.10,000/– பரிசுத் தொகையும், பாராட்டுச் சான்றிதழும் மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்களால் 30.6.2008 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் போது குழுவின் உறுப்பினர்களான நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலர் திரு. தீனபந்து, நகராட்சி நிருவாக ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, தமிழ்நாடு நகர்மன்றத் தலைவர்களின் பேரவைத் தலைவரும், ஆலந்தூர் நகர்மன்றத் தலைவருமான திரு. ஆர்.எஸ். பாரதி, கோவை மாநகராட்சி மேயர் ஆர். வெங்கடாசலம், பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் பெருமாள்சாமி மற்றும் மாநகராட்சி, நகராட்சி நிருவாகத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ★

# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 10.7.2008 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை – நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை சுனாமியால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிகளை அகற்றி மறுகுடி அமர்வு செய்யும் திட்டத்தின் மூலம் உலக வங்கியின் உதவியுடன் 293 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6,500 குடியிருப்புகளின் மாதிரி கட்டிட வடிவமைப்புகளைப் பார்வையிட்டார். உடன் மாண்புமிகு குடிசை மாற்று வாரியத்துறை அமைச்சர் திரு.சுப.தங்கவேலன், வீட்டுவசதி மற்றும் நகர்புறச் செயலாளர் திரு. இரா. செல்லமுத்து, மேலாண்மை இயக்குநர் திரு. டி.கே. ராமச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள், 30.6.2008 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அப்பள்ளிகளில் பயின்று 10 ஆவது மற்றும் 12 ஆவது வகுப்பு தேர்வுகளில் முதலாவதாக வந்துள்ள 25 மாணவ, மாணவியருக்கு பரிசுத் தொகை தலா ரூ.10,000/– மும், பாராட்டுப் பத்திரமும் அவர்களுள் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்குப் பட்ட மேற்படிப்பு, மேற்கொள்ள உதவித் தொகையையும் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்ட நகராட்சித் தலைவர்கள், மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர்கள் மற்றும் துணை மேயர்கள், நகராட்சி நிர்வாகத்துறை உயர் அலுவலர்கள், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 12.7.2008 அன்று தலைமைச் செயலகத்தில், உலக அளவிலான பல்வேறு வலுதூக்கும் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கம் பெற்று சாதனை புரிந்த திரு. ந. அன்பு அவர்களை ஊக்குவித்துப் பாராட்டும் வகையில் 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு.டிபி.எம். மைதீன்கான், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஆர். கிருஸ்துதாஸ் காந்தி, இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.



மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள், 7.7.2008 அன்று சென்னை மீஞ்சூர் அருகில் உள்ள திருக்காட்டுப் பள்ளி கிராமத்தில், நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் கடல் நீரை குடிநீராக்கும் திட்டப் பணிகளை ஆய்வு செய்தார்கள். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலர் திரு. தீனபந்து இ.ஆ.ப., சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. சுனில் பாலிவால் இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் உடன் உள்ளனர்.

# ரூ.400 கோடியில் கங்கைகொண்டானில் டயர் தயாரிக்கும் புதிய தொழிற்சாலை



**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது**

இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த, பன்னாட்டு நிறுவனமான அலையன்ஸ் டயர்ஸ் நிறுவனம், பல்வேறு வகை டயர்களை மேம்படுத்தித் தயாரித்து வருவதில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக நிறைந்த அனுபவம் பெற்றுள்ள ஒரு முன்னணி நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் நிருவாகத்தை மேற்கொண்டுள்ள யோகேஷ் ஏஜென்சீஸ் மற்றும் முதலீடுகள் நிறுவனமும், நிதியமைப்பு மற்றும் தனியார் பங்குகளைப் பெறுவதில் உலகளவில் தலைசிறந்து விளங்கும் அமெரிக்காவைச் சேர்ந்த வார்பெர்க் பிங்கஸ் நிறுவனமும் இணைந்து ஏ.டி.சி டயர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற ஒரு புதிய தொழில் நிறுவனத்தை உருவாக்கியுள்ளன. இந்தப் புதிய தொழில் நிறுவனமாகிய ஏ.டி.சி. டயர்ஸ் நிறுவனம் திருநெல்வேலி மாவட்டம், கங்கை கொண்டான் சிப்காட் தொழிற்பூங்காவில் டயர் தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றினை அமைத்திட முடிவு செய்துள்ளது.

ஏ.டி.சி டயர்ஸ் நிறுவனம், 3 ஆண்டுக் காலத்தில் 300 கோடி ரூபாய் அளவுக்கும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் மேலும் 100 கோடி ரூபாய் அளவுக்கும் ஆக மொத்தம் 400 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் செய்யும். 1,000 பேருக்கு நேரடியாகவும், 800 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புகளை வழங்கும். இத்தொழிற்சாலை, திருநெல்வேலி மாவட்டத்தில் அமைக்கப்படுவதால், இது அரசின் முன்னுரிமை அடிப்படையில் தென்மாவட்டங்களில் இதர தொழில் முதலீட்டாளர்கள் பலருக்கும் தங்கள் தொழிற்சாலைகளை அப்பகுதியில் தொடங்கிட ஊக்கம் அளித்திடும்.

இந்தப் புதிய டயர் தொழிற்சாலையை அமைப்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில் 30.6.2006 அன்று நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் தொழில்துறைச் செயலாளர், திரு. எம். எப். ஃபரூக்கி, இ.ஆ.ப., ஏ.டி.சி டயர்ஸ் நிறுவனம் சார்பில் அந்நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.அசோக் மஹன் சாரியா ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின் போது தலைமைச் செயலாளர் திரு.எல். கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.கு. ஞானதேசிகன் இ.ஆ.ப. மற்றும் ஏ.டி.சி டயர்ஸ் நிறுவனத்தின் மூத்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர். ★

# ஏழைப் பெண்களின் திருமணத்தை நடத்தி வைக்கும் கலைஞர் அரசின் திருமண நிதியுதவித் திட்டங்கள்

## பெரம்பலூர் மாவட்டம்

**மா**ண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இந்த இரண்டாண்டுக் காலத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் எண்ணற்ற பல திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் சமூகநலத்துறை மூலம் கடந்த இரண்டாண்டுகளில்


மூக்கன் குடும்பத்தினர்

4 ஆயிரத்து 353 பெண்களுக்கு ரூ. 4 கோடியே 50 லட்சத்து 24 ஆயிரம் மதிப்பில் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண நிதிஉதவித் திட்டத்தின்கீழ் 2,784 பெண்களுக்கு ரூ. 4,17,60,000/–மதிப்பிலும், அஞ்சுகம் அம்மையார் நினைவுக் கலப்புத் திருமண நிதிஉதவித் திட்டத்தின்கீழ் 103 பெண்களுக்கு ரூ.17,50,000/–மதிப்பிலும், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதிஉதவித்திட்டத்தின்கீழ் 88 பெண்களுக்கு ரூ. 9,75,000/– மதிப்பிலும், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதிஉதவித்திட்டத்தின்கீழ் 26 பெண்களுக்கு ரூ. 2,70,000/–மதிப்பிலும், அன்னை தெரசா ஆதரவற்ற பெண்கள் திருமண நிதிஉதவித்திட்டத்தின்கீழ் 12 பெண்களுக்கு ரூ. 1,35,000/– மதிப்பிலும், ஏழை விதவை தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் 1,340 குழந்தைகளுக்கு ரூ. 1,34,000/–மதிப்பிலும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதிஉதவித் திட்டத்தின் மூலம் பயனடைந்த செங்குனம் கிராமத்தைச் சேர்ந்த மூக்கன் குடும்பத்தைச் சந்தித்தபோது அவர் தெரிவித்ததாவது,"நான், என் மனைவி, மகன் மூவரும் விவசாயக் கூலிகளாகப் பிழைப்பை நடத்திவருகிறோம். எங்கள் குடும்பம் ஏழ்மை நிலையில் உள்ளதால் எங்கள் மகளை 12–ஆம் வகுப்புவரை மட்டுமே படிக்கவைக்க முடிந்தது. வயிற்றுக்கும் வாய்க்குமே நாங்கள் சம்பாதிக்கும் பணம் சரியாக இருந்ததால் எங்கள் மகளுக்கு எப்படி திருமணம் செய்யப்போகிறோம் என்ற மன வேதனையில் இருந்துவந்தோம். அந்த நேரத்தில்தான் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் எங்களிடம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தைப்பற்றிக் கூறினார்கள். அதன்படியே நாங்களும் மனு எழுதிக் கொடுத்தோம், அதன் பயனாக அரசிடமிருந்து எங்கள் மகளின் திருமணத்திற்கு ரூபாய் 15 ஆயிரம் பணம் கிடைத்தது, அது எங்கள் மகளின் திருமணச் சுமையைக் குறைக்க பேருதவியாக இருந்தது. இப்பொழுது நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக உள்ளோம். எங்கள் மகிழ்ச்சிக்கு முழு காரணமாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்"என்றனர்.

ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதிஉதவித் திட்டத்தின்மூலம் பயனடைந்த அனுக்கூர் குடிகாடு கிராமத்தைச் சேர்ந்த ஆண்டாள் கூறுகையில், "நான் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். எனக்கு மூன்று பெண் பிள்ளைகள் உள்ளனர். என் கணவர் சவுதிஅரேபியாவில் கூலித்தொழிலாளியாக வேலை செய்தபோது விபத்தில் மரணமடைந்துவிட்டார். அவர் உயிருடன் இருந்தபோதே என் முதல் மகளுக்கும் இர்ண்டாவது மகளுக்கும் திருமணம் செய்து முடித்துவிட்டேன். ஆனால் என் கணவர் மரணமடைந்த பிறகு, மூன்றாவது மகளை எப்படி கரை சேர்க்கப் போகிறோம் என்ற மனவேதனையில் ஒவ்வொருநாளும் தவித்துவந்தேன். அந்த நேரத்தில் என் தோழி ஒருவர் மூலம் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு விதவை மகள் திருமண நிதிஉதவித் திட்டத்தைப்பற்றித் தெரிந்து கொண்டு மனுச்செய்தேன், பணமும் கிடைத்தது. என் மூன்றாவது மகளின் திருமணமும் நல்லபடியாக முடிந்துவிட்டது. என் கணவர் இறந்த பிறகு என் மகளின் திருமணத்தை நடத்த வழி தெரியாமல் தவித்த நேரத்தில் இந்தத் திட்டத்தின் மூலம் எனது பெண்ணின் திருமணம் நடைபெற உதவித்தொகை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கு எனது கோடி நன்றிகள்".

இவ்வாறு பல பிரச்சினைகளால் தவித்து வரும் மக்களின் துன்பங்களை எண்ணற்ற பல சிறப்புத் திட்டங்களின் மூலம் துடைத்தெறியும் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளார் என்பதில் ஐயமில்லை.

தொகுப்பு:
த. மருதபிள்ளை,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
பெரம்பலூர்

★ ★ ★

# சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில்
# முத்தமிழறிஞர் தமிழவேள்
# கலைஞர் மு. கருணாநிதி
## ஆய்வு மையம் துவக்கம்






**சே**லம் பெரியார் பல்கலைக்கழகத்தில் முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு. கருணாநிதி ஆய்வு மையத் தொடக்கவிழா மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் தலைமையில் 18.5.2008 அன்று நடைபெற்றது. இதில் மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் கலந்து கொண்டு கலைஞர் ஆய்வு மையத்தையும் ரூ.3.38 கோடி மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட கலைஞர் மு.கருணாநிதி கலையரங்கம், ரூ. 1.33 கோடி மதிப்பில் மாணவர் பயன்பாட்டு மையம், ரூ.1.95 கோடி மதிப்பில் பேரறிஞர் அண்ணா வளாகம் (தேர்வாணையர் அலுவலகம்) ரூ.5.1 கோடி மதிப்பில் அறிவியல் கட்டடம் 1 மற்றும் 2, ரூ. 96.30 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடல் ஆகியவற்றைத் திறந்து வைத்து மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் விழாப்பேருரையாற்றினார். அப்பொழுது அவர் குறிப்பிட்டதாவது :-

இப்பல்கலைக்கழகம் தந்தை பெரியார் பெயரால் அமைந்துள்ளது சிறப்பு வாய்ந்த ஒன்று. பெரியார் இந்நாட்டிற்கு பெரிய எழுச்சி ஆற்றலை உருவாக்கியவர். பெரியார் இல்லையென்றால் தமிழ் நாட்டு மக்கள் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கமுடியாது. அவரால்தான் தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது. பெரியாரின் கருத்து இல்லாவிட்டால் மக்களிடையே அண்ணாவோ, கலைஞரோ இந்த அளவிற்கு பெயர் பெற்றிருக்கமுடியாது. தமிழ்நாட்டின் வரலாற்றை எடுத்துக் கொண்டால் பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோரின் வரலாறுதான் தமிழக வரலாறாக உள்ளது. பெரியார் தமிழக மக்களுக்கு உணர்வை ஊட்டியவர், அண்ணா அறிவை வளர்த்தவர், அறிவால் ஆட்சி பீடத்தில் அமர்ந்து அரும் பணி ஆற்றிவருபவர் டாக்டர் கலைஞர்.

இந்த விழாவில் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரால் அமைக்கப்பட்ட ஆய்வு மையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் கட்சித் தலைவராக மட்டுமல்ல, சுயமரியாதை வீரராக மட்டுமல்ல, போராட்ட வீரராக மட்டும்ல்ல, கலைஞர் கருணாநிதி ஒரு மிகப்பெரிய சிந்தனையாளர், எழுத்தாளர், கவிஞர், புதினங்கள் உருவாக்குபவர், காவியங்கள் புனைபவர், சமுதாய மறுமலர்ச்சிக்கு கலைப்பணிகள் மேற்கொண்டவராக திகழ்கிறார். நான் அறிந்தவரை இந்த 20ம் நூற்றாண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கு இணையாக ஒரு எழுத்தாளராக, கவிஞராக, சிந்தனையாளராக, தமிழறிஞர்கள் யாரும் இல்லை. சட்டசபையில் 50 ஆண்டுகாலம் பணியாற்றியுள்ளார்.

அவரது சட்டசபை உரையை பார்த்தாலே தமிழகத்தின் 50 ஆண்டுகால வரலாற்றை தெரிந்துக் கொள்ளலாம். தமிழக வரலாற்றுடன் இரண்டரக்கலந்த கருணாநிதியின் படைப்புகளை, அவரது அறிவு, புலமை, கற்பனைத்திறன் ஆகியவற்றால்

உருவான படைப்புகளை ஆய்வு செய்ய முதன் முதலாக இவ்வாய்வு மையம் தொடங்கப் படுவது சேலம் பல்கலைக்கழகத்திற்கும் சேலம் மாவட்டத்திற்கும் மிகப்பெருமை வாய்ந்தது.

உலகப் புகழ்பெற்ற திருக்குறள் தந்த அய்யன் திருவள்ளுவருக்கு வள்ளுவர் கோட்டம், குமரிமுனையில் 133அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை அமைத்தவர். திருக்குறளுக்கு உரை எழுதி, குறள் ஓவியம்படைத்தவர். அவர் எழுதிய கடிதங்கள் கூட இலக்கியமாக ஆகிவிடுகிறது. சங்க இலக்கியத்தை வழங்கினார். அவர் அரசியலில் ஆற்றியபணிகளை விளக்கும் "நெஞ்சுக்கு நீதி'' என்னும் நூல் தமிழர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒன்று. இவை அனைத்தையும் இப்பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆய்வு மையம் ஆய்வு செய்வது மகிழ்ச்சி அளிக்கிறது.

பல்கலைக்கழகங்கள் பெருகுவது அறிவு வளர்ச்சிக்கு ஒரு சான்று. பல்கலைக்கழகங்கள் அதிகரித்தால்தான் அடித்தட்டு மக்கள், பின் தங்கிய மக்கள், கல்வி வளர்ச்சியில் முன்னேற முடியும். மக்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவியாக அமையும்.

இன்றைய தலைமுறையினர் தெளிவாக சிந்திக்க கற்றுத் தரும் கலை மற்றும் இலக்கியத்திலும் முன்னேற வேண்டும்.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் பேசியதாவது:-

தலைவர் கலைஞர் பெயரில் ஏன் ஆய்வு மையம் தொடங்க வேண்டும்? என்று சிந்தித்துப் பார்த்தால் – தமிழகத்தில் 5 முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கும் என்று நினைத்து, பொது வாழ்க்கைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் வரவில்லை. சின்னஞ்சிறு வயதில் அதாவது 13வது வயதிலேயே அவர் உள்ளத்தில் பெருக்கெடுத்து ஓடிய தமிழ் உணர்ச்சிதான் – தமிழ்மொழியைக் காக்க வேண்டும் – வளர்க்க வேண்டும் – வளப்படுத்த வேண்டும்– தமிழர்கள் வளமாக வாழவேண்டும் என்ற உணர்ச்சிதான் அவரைப் பொது வாழ்வில் ஈடுபட வைத்தது. இன்று அறிவு உலகின் சிகரத்தில் சிம்மாசனமிட்டு கலைஞர் அவர்களை அமர வைத்திருப்பதும் தமிழ் இன உணர்ச்சிதான்.

இந்திய நாட்டின் எல்லா மாநில முதலமைச்சர்களும் வியப்போடு கூர்ந்து நோக்கக் கூடிய ஆட்சி நிர்வாக மேலாண்மையில் ஒப்பற்றவராகவும் – சர்வதேச பொருளாதார வல்லுநர்களும் வியந்து பாராட்டும் மக்கள் நலத் திட்டங்களை, நிறைவேற்றும் செயல்திறன் மிக்கவராகவும், அகில இந்திய அரசியல் சீரான பாதையில் செல்வதற்கு வழிகாட்டக்கூடிய மூத்த அரசியல் தலைவராகவும் கலைஞர் விளங்குகிறார். எனவே, அவருடைய படைப்புகளும் சிந்தனைகளும் அவர் ஆற்றிய சமுதாய மேம்பாட்டுப் பணிகளும் உரியவாறு பதிவு செய்யப்பட வேண்டும்– ஆவணப் படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே முத்தமிழறிஞர் தமிழவேள் கலைஞர் மு.கருணாநிதி ஆய்வு மையம் இன்று இங்கு தொடங்கப்படுகின்றது.

இன்று உலக அளவில் நானோ டெக்னாலஜி (Nano – Technology) என்று கூறப்படுகின்ற குறுபொருள் தொழில்நுட்பம் வெகுவிரைவாக வளர்ந்து வரும் துறையாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் பாரதியார் பல்கலைக்கழகமும், மதுரை காமராசர் பல்கலைக்கழகமும் குறுபொருள் தொழில் நுட்ப (Center for Nano Technology) ஆய்வு மையங்களைத் தொடங்கியுள்ளன. இப்பல்கலைக்கழகமும் அறிவியல் துறையின் அண்மைக்கால வளர்ச்சியாகிய குறுபொருள் தொழில்நுட்பம் குறித்த ஆய்வு மையம் (Center for Nano Technology) ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயலாக்கும் முயற்சியில் பெரியார் பல்கலைக்கழகம் ஈடுபடுவதற்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசின் மூலம் ரூ.1 கோடி வழங்கி உதவ வேண்டும் என்று இதையும் துணைவேந்தர் அவர்கள் என்னிடம் கோரிக்கை வைத்தார். இது பற்றியும் நானும் நமது இனமான பேராசிரியர் அவர்களும் முதலமைச்சரிடம் உங்கள் நியாயமான கோரிக்கையை வைத்து நல்ல முடிவு வழங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மின்சாரதுறை அமைச்சர் திரு. ஆற்காடு நா.வீராசாமி அவர்கள் பேசியதாவது:-

மாணவர்கள் பயன்பெறத்தக்க வகையில் மின்னியல் பாடப்பிரிவை தொடங்க வேண்டும். அனல்மின்நிலையம், நீர்மின்நிலையம், காற்றாலை மூலம் மின் உற்பத்தி, சூரிய ஒளிமூலம் மின் உற்பத்தி, அணு உலை மூலம் மின் உற்பத்தி போன்றவை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 2 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தயாரிக்கத் திட்டமிடப்பட்டு பணிகள் நடந்து வருகிறது.

"நியூக்கிளியோர் பவர்'' என்ற மின் உற்பத்தியை ஜப்பானியர்கள் தயாரித்து இந்தியாவோடு ஒப்பிட முடியாத வகையில் வளர்ச்சி அடைந்து உள்ளது. சீனாவில் 8 லட்சம் மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. நமது நாட்டில் 1 இலட்சத்து 60 ஆயிரம் மெகாவாட் மின்சாரம்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. 2வது ஐந்தாண்டு திட்டத்தில் மேலும் 1 இலட்சம் மின்சாரம் தயாரிக்க வேண்டும் என்ற பிரதமர் அறிவித்திருக்கிறார். அதன் அடிப்படையில் 40 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தமிழகத்தில் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் அவர்கள் பேசியதாவது :-

பெரியார் பல்கலைக்கழகம் இருக்கும் வரை கலைஞரின் ஆய்வு மையம் இருக்கும் என்று காலத்தால் அழியாத புகழை சேர்த்துள்ளார். இந்த ஆய்வுமையத்தில் முதலமைச்சரின் திரைப்பட வசனம், சட்டப்பேரவை உரை, இலக்கியங்கள் என அனைத்தும் தொகுக்கப்பட வேண்டும். இதை ஆய்வு செய்தால் தமிழகத்தின் வரலாற்றை தெரிந்து கொள்ள முடியும்.

---

*தொகுப்பு :*

தா. மனோகரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சேலம்

# இமை சோராமல் உழைப்பவர்-
# இளம் சிறுவர்களின் இதயம் காத்து இன்பம் காணும்
# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்

## திண்டுக்கல் மாவட்ட இளஞ்சிறார்கள் நன்றி!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழக முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்கும் போதெல்லாம் "அகில இந்தியாவிற்கே வழிகாட்டியாக ஏழை–எளிய மக்கள் நலன் பெற எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகின்றார்".



மருத்துவ வசதிகள் அனைத்தும் ஏழை–எளிய மக்கள் வாழும் இடத்திலேயே கிடைக்க வேண்டும் என்கிற உயரிய எண்ணத்தில் வருமுன் காப்போம் முகாம் மூலம் இலவசமாகப் பரிசோதனைகள் நடத்தி அவர்களின் நலன்களை காத்துவருகின்றார்.

"உலகம் இயந்திரமாகிக் கொண்டிருக்கின்ற நிலையில் உள்ளங்களும் இயந்திரமாகிவிட்டால் அங்கே உருகி அழுகின்ற கண்களையும், உவகையால் சிரிக்கின்ற உதடுகளையும் காண முடியாது என்றார் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள்". பள்ளிக் குழந்தைகளிடையே காணப்படும் இருதயக் குறைபாடுகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் 03.06.2008 முதல் மாண்புமிகு முதல்வர் இளஞ்சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்டது.

திண்டுக்கல் மாவட்டத்தில் இளம் சிறுவர்–சிறுமியருக்கு முன் பரிசோதனை செய்து கொண்டதில் 294 பேர் இதய நோயாளிகளாகக் கண்டறியப்பட்டு முன்னணி தனியார் மருத்துவமனையின் சிறந்த இருதய சிகிச்சை மருத்துவர்களைக் கொண்ட நிபுணர்கள் குழுவால் பரிசோதிக்கப்பட்டு 161 சிறுவர்–சிறுமியருக்கு உடனடியாக அறுவைச் சிகிச்சை தேவை என கண்டறியப்பட்டு இதற்கான செலவினை அதாவது சிறிய அளவில் அறுவைச் சிகிச்சைக்கு ரூ.10,000, இதய ஓட்டை அடைப்பது போன்ற அறுவைச் சிகிச்சைக்கு ரூ.30,000, திறந்த இருதய அறுவைச் சிகிச்சைக்கு ரூ.70,000 என அதிகபட்ச அளவு நிதியை தமிழக அரசே ஏற்றுக் கொள்கிறது. இதற்காக மாவட்ட நிர்வாகத்திற்கு முதற்கட்டமாக ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.4.76 இலட்சம் நிதி பெறப்பட்டுள்ளது. இத்தொகை சம்பந்தப்பட்ட மருத்துவமனைகளுக்கு அறுவைச் சிகிச்சைக்கென பிரித்து வழங்கப்பட உள்ளது.

இத்திட்டம் குறித்து திண்டுக்கல் அங்குவிலாஸ் இறக்கத்தில் காந்திஜி புதுரோட்டைச் சேர்ந்த கீதாலெட்சுமி கூறுகையில், "என் மகள் பாண்டிமீனா (வயது 20) தள்ளுவண்டி பழ வியாபாரம் செய்யும் சேதுராஜுக்குத் திருமணம் செய்து தந்து ஒரு பெண் குழந்தை பிறந்து. உடல்நிலை சரியில்லாமல் இருந்தது. டாக்டர்கிட்ட காட்டனப்ப என்னுடைய பேத்திக்கு இதயத்தில் ஓட்டை இருக்குதுனு சொன்னாங்க. ரொம்ப அதிர்ச்சியாக இருந்தது. அதன் பிறகு என் மகளுக்கும் உடல்நிலை சரியில்லாமல் போயிடுச்சு. அதுக்கு மருத்துவப் பரிசோதனை செய்தப்ப இதயத்துல

கோளாறு வால்வுல ஓட்டைன்னு சொன்னாங்க. சரியான நேரத்தில் கவனிக்காததால் சிகிச்சை செய்ய வசதி இல்லாமல் என் மகள் இறந்து விட்டாள். இப்ப பேத்திக்கும் இந்த நிலைமைன்னா எங்களோட இதயமே வெடிச்சிற மாதிரி இருக்கு. என் மருமகன் சேதுராஜ் தள்ளுவண்டியில பழவியாபாரம் செய்து நாள்தோறும் ரூ.80, 100ன்னு கொண்டுவந்து தருவார். அதைவச்சி குடும்பம் நடத்தறதே பெரிசு. என்னுடைய பேத்தி தர்சினிக்கு இப்ப 4வயது ஆகறது. சோபியா பள்ளியில் எல்.கே.ஜி. படிக்குது. கலைஞர் அய்யா சின்னக் குழந்தைகளுக்கு இலவசமா இதய சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்திருக்காருனு பேப்பர்ல படிச்சேன். என்னுடைய பேத்தியைக் கொண்டு வந்து டாக்டர்கிட்ட காமிச்சேன். அறுவை சிகிச்சை செய்யனும்னு சொல்லி மதுரைக்கு கூட்டிட்டு வரச்சொல்லியிருக்காங்க. இதற்கான எல்லாசெலவையும் அரசாங்கமே செய்யுதுனு சொன்னாங்க. எங்களுக்கு இப்ப பாதி தெம்பு வந்த மாதிரி இருக்குது. இந்த மாதிரியான ஒரு திட்டம் முன்பே இருந்திருந்தால் நான் பெத்த என் பொண்ண எப்படியும் காப்பாத்திருப்போம், இழந்திருக்க மாட்டோம். ஆனால் இப்ப என் பேத்தியையாவது காப்பத்த முடியும்னு நம்பிக்கை வந்திருக்கு. கலைஞர் அய்யா தெய்வம் மாதிரி. அவரு நீண்ட ஆயுசோட இருக்கனும், எங்கள மாதிரி எழை மக்களுக்கு அவரு செய்யற உதவிய நாங்க மறக்கவே மாட்டோம்'' என்று கண்ணீர் மல்க கூறினார்.

அசனாத்புரம் ஜின்னாத் தெருவைச் சேர்ந்த பரிதா கூறுகையில், "என்னுடைய மகள் சையது அலிபாத்திமா திண்டுக்கல் சவேரியார் பள்ளியில் 7–ஆவது படிக்குது. குழந்தையாக இருந்த போதே இதயத்துல ஏதோ வால்வு கோளாறுனு சொன்னாங்க. எங்க வீட்டுக்காரர் உப்புத்தோல் தேய்ச்சி வேலை பார்த்து ரூ.50, 100னு சம்பளம் கொண்டு வருவாங்க. குடும்பம் நடத்தறதே கஷ்டம். மதுரை பெரியாஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போய்க் காட்டச் சொன்னாங்க. போக வர பஸ் செலவு செய்யறது கஷ்டம்னு மாத்திரைகள் மொத்தமாக வாங்கிட்டு வந்து வச்சுகிட்டு கொடுப்போம். பிள்ளைய காப்பாத்த முடியாமா போயிறுமோனு தினமும் நாங்க அழுகற அழுகைய சொல்லவே வார்த்தையில்ல. நிம்மதியில்லாத தூக்கம் கஷ்டப்பட்டு சம்பாதிக்கறதே பிள்ளைக்காகத்தான். அந்தப் பிள்ளை நோயால தவிக்க விட்டுட்டு எப்படிங்க கால் வயிறு சாப்பாடும் நிம்மதியா சாப்பிட முடியும். மழைக்குகூட தனியார் ஆஸ்பத்திரி பக்கம் ஒதுங்க முடியாத அளவுக்கு வறுமை. இலட்சக்கணக்குல செலவு பண்ணியல்லாம் வைத்தியம் பார்ப்பது என்பது கனவுல கூட நாங்க நினைக்க முடியாது. பள்ளிகூடத்துல சொன்னாங்க. இலவசமாக சிகிச்சை தர கலைஞர் அய்யா சொல்லியிருக்காங்கனு. இப்ப வந்து பரிசோதனை செய்துட்டு, திறந்த இருதய அறுவை சிகிச்சை செய்யனும்னு சொல்லி மதுரை கூட்டிட்டு வர சொல்லியிருக்காங்க. எல்லாச் செலவையும் அரசாங்கமே பார்த்துக்குவாங்கனு சொன்னாங்க. கலைஞர் அய்யாவுக்கு கண்ணீர் மல்க நன்றி சொல்றோம். இவர் இந்த மாதிரி திட்டம் கொண்டு வந்ததைப் பார்க்கறப்ப நாங்க கால காலத்துக்கும், என்றென்றும் நன்றி கடன் உள்ளவர்களாக இருப்போம்''.

இத்திட்டம் குறித்து மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையின் மருத்துவர் சம்பத்குமார் (சீனியர் கண்சல்டன்ட்–இருதய நோய் அறுவைச் சிகிச்சை நிபுணர்) கூறுகையில், "பணம் இருப்பவர்கள் எப்படியும் பணம் கொடுத்து சிகிச்சை செய்துருவாங்க. ஆனால் இன்றைக்கு இவ்வளவு சிறுவர், சிறுமியருக்கு பரிசோதனை செய்யும் போது எவ்வளவு பேர் வசதியில்லாமல் தகுந்த சிகிச்சை பெறாமல், ஆரம்ப கட்டத்தில் சரி செய்யக்கூடிய நோயைக் கூட முற்றவிட்டு வந்துள்ளார்கள் எனும்போது மனசு ரொம்ம பாதிப்பாக இருக்கிறது. உண்மையிலேயே மிகவும் மன ஒத்துழைப்போடும், சந்தோஷமாக, மன நிறைவாக நாங்கள் இந்தப் பணியை மேற்கொள்கிறோம். தமிழக அரசு கொண்டு வந்த இந்தத் திட்டம் உண்மையிலேயே பாராட்டுக்குரியது'' என்றார்.

முன்பெல்லாம் இருதய அறுவைச் சிகிச்சைக்கு அரசு மருத்துவமனைகளில் மேற்கொள்ளும்போது ஏற்படும் காலதாமதம் தவிர்க்கப்பட்டு தற்போது தனியார் மருத்துவமனைகளுக்குப் பரிந்துரை செய்யப்படுவதன் மூலம் உயிரிழப்பு தவிர்ப்பதோடு 2 மாதத்திற்குள்ளாகவே அறுவைச் சிகிச்சை செய்து முடித்துவிட முடியும்.

"துன்பத்திற்காக இரங்குதல் மனித இயல்பு
அதை நீக்குதல் தெய்வ இயல்பு என்பார்கள்''.

அத்தகைய இயல்பைப் பெற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் எண்ணற்ற நலத்திட்டங்கள் மக்கள் மனம் கவரும் வகையில் செயல்பட்டு வருகிறது என்றாலும் இளஞ்சிறார் இதயப் பாதுகாப்புத் திட்டத்திற்கு தன் குழந்தைகளை அழைத்து வரும் பெற்றோர்களின் இருண்டு கிடந்த சோகம் மறைந்து தங்கள் குழந்தைகளை காப்பாற்றிட முடியும் என்ற நம்பிக்கை ஒளிவீசுவதை காணமுடிந்தது. கள்ளம் கபடமற்ற இளஞ்சிறார்களின் முகத்தில் கலைஞர்தான் எங்களைக் காப்பாற்றி வருகின்றார். அவர்தான் எங்கள் உண்மையான தாத்தா என்று மகிழ்ச்சி பொங்க கூறுவதை கேட்கும் போது

"இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ
குடும்பத்தைக் குற்ற மறைப்பான் உடம்பு''.

தன்னைச் சார்ந்துள்ள குடிகளுக்குத் துன்பம் வராமல் தடுத்துத் தொடர்ந்து அக்குடிகளைக் காப்பாற்ற முயலுகிற ஒருவன், துன்பத்தைத் தாங்கிக் கொள்ளவே பிறந்தவனாகப் போற்றப்படுவான் என வள்ளுவன் வாக்கிற்கேற்ப ஆட்சி நடத்தி மழலைகள் முதல் முதியோர் வரை அனைவரது நலன் காக்கும் மாபெரும் தலைவராக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திகழ்கின்றார்.

தொகுப்பு :
டி.எஸ். சுப்ரமணியம்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல்.

★ ★ ★

# மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, புதிதாக பணி நியமனம் பெற்ற 543 பணி மேற்பார்வையாளர்கள் நேரில் நன்றி தெரிவித்தனர்



ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் தமிழ்நாட்டில், சென்னையைத் தவிர இதர அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் செயல்படுத்தப்படுவதையொட்டி இத்துறையில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள 673 பணி மேற்பார்வையாளர் பணியிடங்களில், 543 இடங்களைப் பொறுத்து பணி நியமனம் பெற்றுள்ள பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 543 பணி மேற்பார்வையாளர்கள், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் 12.7.2008 அன்று நேரில் சந்தித்து தங்களுக்குப் பணி நியமனம் வழங்கியதற்கு நன்றி தெரிவித்தனர்.

எவ்வித பாரபட்சமோ, பரிந்துரையோ இன்றி வேலைவாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையில் பணி மேற்பார்வையாளராக நியமனம் பெற்றுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பொறியியல் பிரிவு அலுவலர்களான இவர்கள் அனைவரும் அப்பழுக்கின்றி சிறந்த முறையில் பணிபுரிய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

அரசுப் பணியிடங்களில் காலியாகும் பணியிடங்களை நிரப்பிட விதிக்கப்பட்டிருந்த தடை இந்த அரசு பொறுப்பேற்றபின் நீக்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் காலியாக இருந்த பணியிடங்களை நிரப்பிட துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அரசுப் பணியிடங்கள் மற்றும் மக்கள் நலப் பணியாளர் பணியிடம் உட்பட இத்துறையில் மே,2006இல் காலியாக இருந்த 17,819 பணியிடங்களில் 16,418 பணியிடங்கள் இதுவரை நிரப்பப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணி இடங்களையும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊரக வளர்ச்சித் துறையில் பல நிலையிலான காலிப் பணியிடங்கள் அனைத்தும் மிக விரைவாக நிரப்பப்பட்டுள்ளன என்றும், வளர்ச்சிப் பணிகளைத் துரிதமாக நிறைவேற்றவும், ஊராட்சி நிருவாகத்தைச் செம்மையாக நடைமுறைப்படுத்தவும், இது பெரிதும் உதவியுள்ளது என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

காலிப் பணியிடங்களை நிரப்பியது மட்டுமல்லாமல் புதிதாக 32 பொறியியல் உபகோட்டங்கள் தோற்றுவிக்கப் பட்டு உதவி செயற் பொறியாளர் பணியிடங்களும், அதேபோல் 673 பணிமேற்பார்வையாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டு, அதில் இதுவரை 543 பணியிடங்களுக்கும் அலுவலர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர் என்றும் மாண்புமிகு அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயலர்/சிறப்பு ஆணையர் திரு.அஷோக்வர்தன் ஷெட்டி, இ.ஆ.ப., மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஆகியோரும் உடன் இருந்தனர். ✶

# ஆண் வாரிசு இருந்தாலும், இல்லாவிட்டாலும் முதியோர் ஓய்வூதியத்தைப் பெறலாம்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
கலைஞர் அவர்கள்
ஆணை

முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆதரவற்றவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் ஓய்வூதியத் தொகையாக வழங்கப்பட்டு வந்ததை, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு 400 ரூபாயாக 1.8.2008 முதல் உயர்த்தியது.

ஆண் வாரிசு இருந்தால் இந்த ஓய்வூதியத் தொகையினைப் பெறுவதற்குத் தகுதி இல்லை என்ற நிலையை மாற்றி, ஆண் வாரிசு இருந்தாலும், இல்லாவிட்டாலும், தகுதியுடையவர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் தொகையினை வழங்கிட வேண்டுமென்று சட்டப்பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தனர். அந்தக் கோரிக்கையினை ஏற்று, ஆண் வாரிசு இருந்தாலும் இல்லாவிட்டாலும், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் தொகையினை வழங்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 5.6.2008 அன்று ஆணையிட்டுள்ளார்.


TNSC BANK

**TNSC வங்கி**

**தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,**

233, என்.எஸ்.சி.போஸ் ரோடு, த.பெ.எண்.226,
சென்னை - 600 001.
தொலைபேசி : 2534 0301, 2534 0304
தொலைநகல் : 044-2534 0508
மின்னஞ்சல் : tnscbank@vsnl.com

**100 ஆண்டுகளைக் கடந்து மக்கள் சேவையில்**

- தமிழ்நாட்டில் உள்ள அட்டவணையிடப்பட்ட ஒரே கூட்டுறவு வங்கி
- சென்னை நகரில் 46 கிளைகள்
- வைப்பீடுகளுக்கு அதிக வட்டி
- அனைத்துக் கிளைகளிலும் கணினி மூலம் துரித சேவை
- 5 கிளைகளில் ஏ.டி.எம். வசதி
- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- கூடுதல் சேவை நேரம்

வெளியீட்டு ஆணை எண்.1664/வரைகலை/விளம்பரம் 2007, நாள் : 11.10.2007

இணையதளம் : www.tnscbank.com





சென்னை – தமிழரசு அச்சகத்தில் வடிவமைக்கப்பட்டு அரசு மைய அச்சகம், சென்னை–600 079–ல் அச்சிடப்பட்டது.

# கோ-ஆப்டெக்ஸின் கோலாகலம்
# பருத்தி பட்டின் கோடி அழகு



**கோ-ஆப்டெக்ஸ்**
வழங்குகிறது
**20%**
அரசுத் தள்ளுபடி

குளிர்ச்சியான கோ-ஆப்டெக்ஸ் வண்ணங்களால் உங்கள் வாழ்வை இன்டமயமாக்குங்கள்.

கோ-ஆப்டெக்ஸின் கண்கவர் பட்டு, பருத்தி, ஆடைகளுக்கான துணிவகைகள் 20% அரசுத் தள்ளுபடியுடன்.

வாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!

**புதிய வருகை**

"அழகு மயில்" பட்டுப் புடவைகள் "மருதம்" கலப்பிழை பட்டுப் புடவைகள் "கோலங்கள்" கலப்பிழை பட்டுப் புடவைகள்
"மாந்துளிர்" பருத்திப் புடவைகள் "மலையரசி" பருத்திப் புடவைகள் "நாச்சியார்" பருத்திப் புடவைகள் "திருவரங்கம்" பருத்திப் புடவைகள்
"மல்லிகை" பருத்திப் புடவைகள் "கிரி" பருத்திப் புடவைகள் "அரோமா" நறுமண சட்டைகள்

தலைமுறைகளாய் தொடரும் பந்தம் - கோ-ஆப்டெக்ஸ்

வெ. அ.எண்.219/வரைகலை/விளம்பரம்/2008 நாள் : 6.2.2008

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/06-08
TN/PMG(CCR) WPP-518/06-08




தமிழரசு